# 10 வது ஆண்டு நிறைவு மலர்



யாழ்ப்பாண மாவட்ட
சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

பனம் பண்டத்தை சுவைத்திட
பனம் கைப்பணிப் பொருட்களை
மலிவு விலையில் பெற
உள்ளூர் உற்பத்தியை நியாய
விலையில் வாங்க விற்க
நாடுங்கள்

# பனையகம்

கொடிகாமம் வீதி, நெல்லியடி

உரிமையாளர்
கட்டைவேலி - உடுப்பிட்டி, தெ. ப. பொ. உ. வி.
கூட்டுறவுச் சங்கம்
கரவெட்டி.

# 10-வது ஆண்டு நிறைவு மலர்

## (1982 - 1992)

இதழ் ஆசிரியர்கள் :

V. ஸ்ரீசக்திவேல்

K. R. சிவலிங்கம்

P. K. இராசரத்தினம்

★

யாழ் மாவட்ட

சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களின் சமாசம்

182 1/4, ஸ்ரான்லி றோட்,

யாழ்ப்பாணம்.

## பத்தாண்டில் மகிழ வித்திட்ட முத்து

# அமரர் திரு. ச. ஞானப்பிரகாசம்

கூட்டுறவில் உயர்பதவி வகித்தஞானம்
நாட்டுயர்வில் நடைமெலிந்து மகிழ்ந்தஞானம்
ஈட்டள்வில் மீட்டுயர்த்த விளைந்தஞானம்
கூட்டமைத்த சமாசம்காண் தசாப்தம்பாரே.

ஊரூராய் அலைந்துலைந்து சங்கம் சேர்த்து
உருப்படியாய் ஆக்கிவைத்த சமாசமின்று
உயர்ந்துநின்று பத்தாண்டு விழாவுங்கண்டு
உவகையுடன் களிக்குதையா விண்ணிற்பாரே.

மறந்ததில்லை நின்சேவை மானிலத்தில்
இறந்ததில்லை நின்தொண்டு தளைக்குதையா
குறைந்ததில்லை எம்மனமும் நன்றிசொல்ல
நிறைந்தமலர் நின்தனக்குச் சமர்ப்பணமே.

யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

# சமர்ப்பணம்



பத்தாண்டில் மகிழ வித்திட்ட முத்து

அமரர் திரு. ச. ஞானப்பிரகாசம்

# யாழ் மாவட்ட
# சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

( வரையறுக்கப்பட்டது )

## சமாச கீதம்

இராகம் : ஹம்சத்வனி | தாளம் : ஆதி

### பல்லவி

சிக்கனமே சிறந்த செல்வந் தரும் – எனும்
சீரறு நோக்கு கொள் சமாசமே வாழ்க

### அனுபல்லவி

ஒன்றாகி உணர்வோடு ஒருமித்து நாம் பாரில்
நன்றாகவே கூடி நலமாக வாழ்ந்திட

### சரணம்

யாழ்ப்பாண மாவட்டச் சிக்கன கடன் வழங்கு
கூட்டுறவுச் சங்கங்கள் சமாசம் தன்னால்
வாழ்வாங்கு வாழ்ந்திட வகைகண்டு உயர்ந்திட
வழிமுறைகள் பலவுளவே அழிவில்லையே அதைத்தருமெம்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்தி இரண்டிலே
அடியிட்டோம் எங்களின் மாபெரும் சங்கமோ
பாயிரங் கூறியே பலாபலன் கண்டிடப்
பத்து ரூபாய் தொடங்கிச் சேமிக்கச் செய்து வரும்.


வறியவர் விதவைகள் சுய தொழிலாளர்கள்
வறுமையை நீக்கவே வழி முறை காட்டியே
நெறிப்பட நேர்மையாய் நிரந்தர சேவையை
நிகரின்றிச் செய்துமே நிறைவிலே மலர்ந்திடும்.

உயர் கல்வி குறைவட்டிக் கடனதனால் பெற்றிட
உள மகிழ் கலையொடு கலாச்சாரம் வளர்த்திட
அயர்வின்றி அரிவையர் நியமமாய்ப் பயிற்சியின்
அறிவைப் பெற்றிட நிதியதுங் கொடுத்திடும்.

**யாழ்ப்பாணம் மாவட்ட**

**சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின்**
**எல்லைப் பரப்பில் உள்ள 14 பிராந்திய சபைகளை உள்ளடக்கிய**

**யாழ். மாவட்டப் படம்**



## பொருளடக்கம்

பக்கம்

ஆசிரியர் குழுவின் பேனாவிலிருந்து...... அ

ஆசிச் செய்திகள் :

திரு. சி. பற்குணம் I
திரு. கா. மாணிக்கவாசகர் II
திரு. செ. லிங்கநாதன் IV
திரு. மா. கனகசபை V
திரு. தி. சபாரத்தினம் VIII
திரு. ச. முருகநேசன் IX
திரு. பி. ஏ. சிரிவந்தெனியா XII
திரு. வி. கே. சுப்பிரமணியம் XIII
திரு. பொ. செல்வரட்ணம் XV
திரு. வை. செந்திநாதன் XVII
திரு. சா. செல்வரெட்ணம் XVIII

மலர்க் குழு அறிக்கை 1

அமரர் ஞானப்பிரகாசம் அவர்கள் 5
திருமதி. ருக்மணி ஆனந்தவேல்

கூட்டுறவுச் சங்கங்களில் ஒழுக்காற்று நடவடிக்கை 8
திரு. செ. லிங்கநாதன்

சங்கங்களின் பெயர்ப் பட்டியல் : 11

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவு
வேலணை உதவி அரசாங்க அதிபர் பரிவு
ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு
சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவு
சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு
உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவு
தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு
யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவு
நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு
கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு
சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவு
கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவு
பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு
வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு

நிறுவனங்களில் தலைமைவகித்தலின் பங்கு 23
திரு. ந. தேவராஜன் ஜெயராமன்

கூட்டுறவு அங்கத்துவக் கல்வி 29
திரு. பூ. க. இராசரத்தினம்

சி. க. வ. கூ. சங்கங்களின் உன்னத வளர்ச்சியில் மகளிர்பங்கு 32
சரோஜா சிவச்சந்திரன்

அமரர் திரு. ச. ஞானப்பிரகாசம் அவர்கள் 35
திரு. மு. க. முருகையா

கூட்டுறவில் மகளிர் பங்கு 37
திருமதி. தி. குணேந்திரன்

சி. க. வ. கூ. ச. வரலாற்றுப்பாதையில் யாழ் மா. சி. க. வ.
கூ. ச. சமாசத்தின் ஒரு தசாப்தகால அபிவிருத்தி 39
திரு. அ. மை. ராஜ்குமார்

பத்தாண்டுகளை ஊடறுக்கும் ஒரு பார்வை 58
திரு. சி. கந்தசாமி

வடகிழக்குப் பிரதேசத்தின் பொருளாதார சமூக அபிவிருத்தி 62
திரு. பிறேம்ருஜ்

யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு

கூட்டுறவுச் சங்க சமாசம்

10வது ஆண்டு நிறைவு விழாவை

பூர்த்தி செய்வதையிட்டு

எமது இதயம் கனிந்த

# நல்வாழ்த்துக்களை

தெரிவித்துக்கொள்கின்றோம்



வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம்

# ஆசிரியர் குழுவின் பேனாவிலிருந்து......

சிக்கனத்தை கடைப்பிடிக்கவும் சேமிப்பை விருத்தியடையச் செய்யவும் கூட்டுறவுக் கொள்கைகளைப் பின்பற்றி இவற்றின் ஊடாக ஏனைய அத்தியாவசிய தேவைகளின் வளர்ச்சிக்கு பாடுபடுவதில் யாழ் மாவட்ட சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் முன்நிலையில் நிற்கின்றது என்பதை உணர்த்தும் முக்கிய குறிக்கோளுடன் இன்று 10-வது ஆண்டு நிறைவு மலர் தங்கள் கையில் தவழுகின்றது.

இம்மலரும் நடைபெற்ற போட்டி நிகழ்ச்சிகளும், நடைபெறும் விழாவும் அங்கத்தவர்களை, பணிப்பாளர்களை, பணியாளர்களை, கூட்டுறவாளர்களை சென்ற காலத்தைத் திரும்பிப்பார்க்கவும், பெற்ற அனுபவங்களை வைத்து மேலும் அபிவிருத்திக்குரிய திட்டங்களை வகுக்கவும் உதவும் என்பதை எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதொன்றாகும். எமது மத்தியில் கூட்டுறவாளர் என்ற உணர்வு ஏற்பட்டு வருவதை அங்கத்தவர் தொகை, சேமிப்புத் தொகை அதிகரிப்பதிலிருந்து நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. கருத்து வேறுபாடுகள் இருப்பினும் அவற்றை இனங்கண்டு விளங்கி ஆக்கபூர்வமான விருத்தியில் ஈடுபடவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. மாபெரும் மாற்றங்கள் நிகழும் காலத்தில் நாம் வாழ்கின்றோம். கடந்த 25,000 ஆண்டுகளிலும் பார்க்க அடுத்த 15 அல்லது 20 ஆண்டுகளிலேயே மனிதன் தனது எண்ணப்போக்குகளைக் கூடுதலாக மாற்றவேண்டுமெனப் பேராசிரியர் போல்டின் கூறியுள்ளார். எனவே நாம் சிந்தனைப் போக்குகளை மாற்றி, ஒருங்கிணைத்து செயலாற்றும் உளப்பாங்கை வளர்த்துக்கொள்ள வேண்டும். கூட்டுறவுப் பண்பு மக்களின் செயற்பாடுகளில் பரிணமிக்க வேண்டும். கூட்டுறவாளர்களின் செயல்பாடுகள் கூட்டுறவுத் தத்துவங்களைக் காட்டும் கண்ணாடிகளாகப் பொலியவேண்டும்.

இத்தகைய சந்தர்ப்பத்தில் இம்மலரை நாம் சமூகத்தின்முன் படைப்பதனால் சமாசம் தமது பணியின் ஒரு பங்கை ஆற்றிவிடும் என்பது எமது நம்பிக்கை. எமது சமாசத்தின் நடவடிக்கைகள் கிராமிய மாற்றத்துடன் இரண்டறக் கலந்து வீரியமும் பெற்றுள்ளது. கிராமங்களில் தான் எமது பிரதேச வாழ்வு உறைந்திருக்கின்றது. உலகத்திலேயே மக்களின் இயற்கையான உறைவிடமாகவும் சமூக அமைப்பின் அடிப்படையாகவும் விளங்குகின்றது. மேற்கு நாடுகளில் தோன்றிய கூட்டுறவு சம்பந்தமான கோட்பாடுகள் எமது மத்தியில் ஜீரணித்துள்ளது. ஆனால் வெளிநாட்டு ஆவணங்களை வெட்டி ஒட்டிய முயற்சியாக எமது இயக்கம் முற்றாகக் காட்சியளிக்கவில்லை. அதை நாம் விரும்பவுமில்லை. சமத்துவத்தையும் மனித கௌரவத்தையும் மதித்து பொருளாதார, சமூக, கலாச்சார வளர்ச்சியை சமாசம் மேற்கொண்டு வருகின்றது பொருளாதாரப் போட்டி தனது முழுக் கவனத்தையும் ஈர்ப்பதால் கூட்டுறவுச் சங்கங்கள் தமது அறிவொழுக்க குறிக்கோளுக்கு போதிய அழுத்தம் கொடுக்க முடிவதில்லை என்ற கருத்து சர்வதேச ரீதியில் நிலவுகின்றது. ஆனால் அது மழுங்கடிக்கப்பட வேண்டும். தொழில் மயப்படுத்தப்பட்ட நாடுகளிலே கூட்டுறவு இயக்கம் பொருளாதார அமைப்பிலே கோலோச்சும் என்ற நம்பிக்கையை பலர் இழந்து வருகிறார்கள் என்ற கருத்தும் உண்டு. இதனால் கூட்டுறவு இயக்கக் கோட்பாட்டாளர்கள் கவலையுற்றிருக்கின்றனர் எனலாம். ஆனால் எமது பிரதேசத்தில் கூட்டுறவுச் செயற்பாட்டின் ஊற்றுக்கண்கள் அடைக்கப்படவில்லை. எமது கூட்டுறவாளர் பற்று, ஆர்வம், விசுவாசம், நம்பிக்கை ஆகியவற்றுடன் தொழிற்படுகின்றனர். எப்படி இருந்த போதிலும் கூட்டுறவு இயக்கத்தின் அறவொழுக்க மூலதனத்தைக் கரைந்து போக விடாது காப்பாற்றுவது அவர்களின் பாரிய பொறுப்பாகும்.

எமது சமாசம், விதிகளுக்கு அமைய அங்கத்தவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஆர்வம் கொண்டு உழைக்கின்றது. ஒன்றிணைந்த அபிவிருத்தித் திட்டங்களை கிராமிய மட்டத்தில் அமுலாக்குவதற்கு உறுதுணையாக இருந்து வருகின்றது. ஓர் வங்கி முறையை கிராமிய மட்டத்தில் ஏற்படுத்த, கிராமிய வளங்களைப் பயன்படுத்த ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. ஆசியாவின் ஆபத்தான பிரச்சனைகளில் ஒன்று கடன் பழு. மனிதன் கடனில் பிறந்து, கடனிலே வாழ்ந்து, கடனிலே மடிகிறான் என்று பொதுவாகக் கூறப்படுகிறது; சேமிப்பை ஊக்குவித்துக் கடன் பழுவிலிருந்து காப்பாற்ற முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றது. இச்செயற்பாடுகள் வெற்றியளிப்பதற்குரிய முக்கிய காரணம் அங்கத்தவர்கள் ஒருவரை ஒருவர் தெரிந்தவர்கள். தவறிழைக்கும் அங்கத்தவர்களை சேர்க்கமாட்டார்கள். எனவே தவறான கொடுக்கல் வாங்கல்களுக்கு இடமிருக்காது. இப்படியாகச் சங்கம் பாதுகாப்பைத் தேடியுள்ளது. அரச வங்கிகள் போன்ற கடன் நிலுவைகள் ஏற்படுவதற்குச் சாதகமான காரணங்கள்

ஏற்பட இடமில்லை. சேமிப்புப் பழக்கத்தை கொடுக்கல் வாங்கல் முறைகளை விருத்தியடையச் செய்யும் வினைத்திறனை எமது சமாசம் கொண்டுள்ளது. இம்மலரில் பல இடங்களில் கொடுக்கப்படும் தகவல்கள் சான்று பகரும்.

சுயஉதவி, பரஸ்பர உதவி, விடாமுயற்சி, அதிகவட்டி பெறாமை, சமூகப் பொறுப்புணர்வு, தன்னலமற்ற சேவை, சனநாயகப் போக்கு, சமத்துவம், கல்வி வளர்ச்சி, புரிந்துணர்வு, ஐக்கிய உணர்வு, அனைத்துலக நோக்கு போன்ற கூட்டுறவு விழுமியங்கள் இயன்றளவு கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. இதனால் இன்று உலகில் 38,000 சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க சமாசங்கள் உருவாகியுள்ளன. 560 இலட்சம் அங்கத்தவர்கள் உள.

நவீன முறைகளில் உயர்ந்த ஆக்கத் திறமையின் பயனாக முதலாளித்துவ முயற்சி கூட்டுறவுச் சங்கங்களையும் விட நல்ல விலைகளை வழங்க ஏதுவாக இருக்கின்றது. கூட்டுறவு சங்கங்கள் தமது ஆதாயத்தை உறுப்பினர்களிடையே பங்கிடுகின்றன. உறுப்பினர் சேர்வதற்கும், தொடர்ந்து விசுவாசமாக இருப்பதற்கும் முக்கிய காரணம் ஆதாயப்பங்கே. இதுவே கூ. இயக்கம் முதலாளித்துவ முயற்சியிலும் பார்க்க மேம்பட்டது என்பதற்குச் சான்றாகும்.

சங்கங்களின் தோற்றம் மட்டுமல்ல அவற்றின் இயங்கு முறையும் ஏனைய முயற்சிகளிலிருந்து வேறுபட்டவை என்ற உணர்வு மக்களிடையே வளரக்கப்பட வேண்டும். மனிதனால் உருவாக்கப்பட்ட எல்லா நிறுவனங்களிலும் காணப்படும் இவ்வுளவியல் மாற்றத்தை கூட்டுறவு இயக்கத்திலும் அவதானிக்கலாம். சங்கத்தை நிறுவுபவர் ஆர்வத்தோடு உழைக்கின்றனர். ஒன்றைப் படைத்து கட்டி எழுப்பும் மகிழ்ச்சி அவர்களை உந்துகிறது. ஆனால் இரண்டாவது தலைமுறையும் பின்னர் வரும் தலைமுறையும் ஏற்கனவே தயாரித்து அளிக்கப்பட்ட ஒன்றை கையேற்பதால் அதை அவ்வளவு இலட்சியப்படுத்துவதில்லை என்ற கருத்து அனைத்துலகக் கூட்டுறவு மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எந்தக் குறிக்கோளுக்காக ஒரு நிறுவனம் உருவாக்கப்படுகிறதோ அது துணிச்சல் மிக்க ஒன்றாய் அறவொழுக்கப் பெறுமதி மிக்க ஒன்றாய் இருக்கலாம். எனினும் அக்குறிக்கோளை எய்துவதற்கு எத்தனையோ இடைக்கட்டங்களைத் தாண்ட வேண்டும். பல தொழிற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். செயல் வேகத்திலே, ஒரு தொழிற்பாட்டிலே முழுக்க முழுக்க அமிழ்ந்து இறுதிக் குறிக்கோளை விட பிரமாண்டமானவையாகத் தோன்றலாம். அவற்றைப் பாதுகாத்து பலப்படுத்துவதே இலட்சியமாகத் தோன்றலாம். இதன் விளைவாக இறுதிக் குறிக்கோளுக்கு முரண்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள நேரலாம். இத்தகைய நிகழ்விற்கு அரசியற் கட்சிகள் நல்ல உதாரணங்கள். இக்கதி கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்படவிடாது கூட்டுறவாளர்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

எமது சமாசம் வளர்ச்சி பெற்று பெருமை அடைவதற்கு எமது முயற்சியும் ஊக்கமும் மாத்திரம் காரணமெனக் கூறமுடியாது. அங்கத்தவர்கள், கூட்டுறவாளர்கள், கூட்டுறவுத் திணைக்களத்தினர், பணிப்பாளர்கள், பணியாளர்கள் ஆகியோரின் அன்பும், ஆலோசனையும், ஆர்வமும் எமது வளர்ச்சிக்கு மூலவேராக அமைந்திருத்தலை நினைத்து பெருமிதமடைகிறோம்.

இம்மலர் நறுமணம் பரப்ப உறுதுணையாய் வழிகாட்டியவர்கட்கும், வாழ்த்துரை வழங்கிய பெரியோர்கட்கும், விளம்பரம் தந்துதவிய பெருந்தகையாளர், புகைப்படத்துறையினர், அச்சேற்று உதவிய கூட்டுறவுச் சபை அச்சகத்தார், ஒத்துழைப்பு நல்கிய மலர் வெளியீட்டுக் குழுவினர் ஆகியோருக்கும் எமது மனம் கனிந்த நன்றி.

## வடகிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள ஆணையாளர் அவர்களின்

# ஆசிச் செய்தி

யாழ்ப்பாணம் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தனது பத்தாவது ஆண்டு நிறைவை விழா வெடுத்துச் சிறப்பிப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன். தமது அங்கத்துவ சங்கங்களினதும், அங்கத்தவர்களினதும், தேவைகளை உணர்ந்து சேவையாற்றும் இச்சமாசம் மேலும் சிறப்பும், வளர்ச்சியும் அடைய வேண்டுமென மனப்பூர்வமாக வாழ்த்துகின்றேன்.

இச்சமாசத்தின் பணிகளுக்கு கூட்டுறவுத் திணைக்களம் தொடர்ந்தும் தனது நல்லாதரவுகளையும், சேவைகளையும் வழங்கிக் கௌரவிக்கும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நன்றி.

கூட்டுறவுச் சேவையிலுள்ள,
**சி. பற்குணம்,**
கூட்டுறவு ஆணையாளர்.

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்,
வடக்கு - கிழக்கு மாகாணம்,
உட்துறைமுக வீதி,
திருகோணமலை.

## யாழ் மாவட்ட அரச அதிபர் அவர்களின்

# ஆசிச் செய்தி

யாழ்மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் 02-03-1992ம் திகதி தனது பத்தாவது ஆண்டினைப் பூர்த்தி செய்துள்ளது மட்டுமல்லாமல் இப்போது நிறைவு விழா மலர் ஒன்றினையும் வெளியிடுகின்றது.

விரைவான மாற்றங்களினுல் பத்து ஆண்டுகள் என்பது ஒரு குறுகிய காலமாகவே இருக்கின்றது. ஆனுல் சமாசம் அடைந்துள்ள வளர்ச்சி உண்மையில் குறிப்பிட்டுக் கூறக் கூடியவாறு இருப்பது பாராட்டுக்குரிய விடயமாகும்.

சிக்கனமே சிறந்த செல்வம் என்று சொல்வார்கள். சிக்கன மாக வாழ்வதும், சேமிப்பை ஏற்படுத்தி தானும் தனது குடும்பம் நலம் பெறுவதுடன் நாட்டின் நலனையும் பேண வேண்டும். இவை எல்லாமே ஒன்றுக்கொன்று தொடர்புடைய விடயங்களாகும்.

சேமிப்பானது உரிய இடங்களில் மேற்கொள்ளப்பட்டால் தான் அதன் பயனும் உபயோகமாக இருக்கும்.

அந்த வகையில் சமாசம் முன்னேடியாகவும், நம்பிக்கை மிக்க தாகவும் இருப்பது போற்றுதற்குரியது. 1982ம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்ட போது 2300 அங்கத்தவர்களைக் கொண்ட 52 சங்கங்களை உள்ளடக்கியதாக இருந்த சமாசம் இப்போது 34000 அங்கத்தவர் களைக் கொண்ட 460 சங்கங்களை உள்ளடக்கியதாக விரிவு பெற்றதில் இருந்து இந்த உண்மையைப் புரிந்து கொள்ளலாம்.

சேமிப்பை ஊக்குவித்து அந்தச் சேமிப்பில் இருந்து திரட்டிய நிதியில் இருந்து அங்கத்தவர்களின் தொழில் வாய்ப்புக்கள், ஏனைய தேவைகளுக்குமான மூலதனத்தை குறைந்த வட்டியுடன் வழங்கி சுயதொழில் முயற்சியினை ஊக்குவிப்பது மிகவும் அவசியமான பணியாகும்.

சமகால நிகழ்வுகளினுல் ஏற்பட்ட பல்வேறு பொருளாதாரத் தளம்பல்களினுல் மக்கள் பாதிக்கப்படுகின்றுர்கள். இத்தகையவர்களுக்கு இது பெரிதும் ஆறுதல் அளிப்பதாகும்.

கூட்டுறவுக் கோட்பாடுகளுக்கு இணங்க அதன் அங்கத்தவர்களுக்கு ஏற்ற பொருளாதாரத் தேவைகளை ஓரளவுக்கேனும் பூர்த்தி செய்துவரும் இந்தச் சங்கங்களின் பணி மேலும் விரிவுபெற வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

கிராமங்களிலும் ஏனைய பகுதிகளிலும் வாழும் பொருளாதாரப் பலம் குறைந்த மக்களுக்கு, மேலும் இதுபோன்ற சங்கங்கள் பெரிதும் பயன்பெற வேண்டும்.

நன்றி.

**கா. மாணிக்கவாசகர்,**
அரசாங்க அதிபரும், மாவட்ட ஆணையாளரும்
யாழ்ப்பாணம்.

அரசாங்க செயலகம்,
கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

# யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அவர்களின்

# ஆசிச் செய்தி

கூட்டுறவு இயக்கம் ஐக்கிய நாணய சங்கங்களின் தோற்றத்துடன் எமது நாட்டில் வேரூன்றத் தொடங்கியது. நாட்டிலேற்பட்ட பொருளாதார, சமூக அரசியற் காரணிகளால் காலத்திற்குக் காலம் கூட்டுறவு இயக்கத்தின் அமைப்பு முறையிற் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டன. இம்மாற்றங்கள் கூட்டுறவு இயக்கத்திற் தாக்கத்தை ஏற்படுத்திய போதிலும் நாட்டின் சமூக, பொருளாதார மேம்பாட்டில் இன்றும் கூட்டுறவுக்கு ஒரு தனியிடம் இருந்து வருவதை மறுக்க முடியாது. இந்த நிலைமை யாழ். மாவட்டத்திற்கும் பொருத்தமுடையதாகும். யாழ் மாவட்டத்திற் கூட்டுறவு இயக்கம் பல துறைகளில் வியாபித்து முன்னணியிற் செயற்பட்டுள்ளது. இதற்கான முக்கிய காரணம் கிராமிய மட்டத்தில் உருவாக்கப்பட்ட ஐக்கிய நாணய சங்கங்களும் அச் சங்கங்கள் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட கூட்டுறவாளர்களும் ஆகும்.

யாழ். மாவட்டத்தில் எண்ணூற்றுக்கும் அதிகமான ஐக்கிய நாணய சங்கங்களும், சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களும் இருக்கின்றன. இச் சங்கங்கள் யாவற்றையும் பராமரிக்கும், மேற்பார்வை செய்யும் தாய்ச் சங்கமாக யாழ்ப்பாண மாவட்டச் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க சமாசம் இருந்து வருகின்றது. இச் சமாசம் 1982-03-02 திகதியிற் பதிவு செய்யப்பட்டதாகும். தற்போது 460 அங்கத்துவ சங்கங்கள் இச் சமாச மூலம் பல்வகைக் கடன் திட்டங்களின்கீழ் அங்கத்தவர்களுக்குக் கடன் வசதிகளைச் செய்து கொடுப்பதுடன் கிராமிய மட்டத்திற் சேமிப்புத் திட்டத்தை உருவாக்கி அமுல் படுத்தும் நிறுவனமாகவும் இருந்து வருகின்றது. கிராமிய மக்களிடையே சேமிப்புப் பழக்கத்தையும், கூட்டுறவு மீதான நம்பிக்கையையும் ஊட்டுமுகமாகப் பலவகைப் பயிற்சிகளையும், கருத்தரங்குகளையும் அதன் வெளிக்கள உத்தியோகத்தர் மூலமாக அமுல் படுத்துவதன் மூலம் கூட்டுறவு இயக்கம் மேலும் விரிவடைவதற்கான ஒரு வேலைத் திட்டத்தை அமுலாக்கி வருகின்றது

இச் சமாசம் தனது 10வது நிறைவு ஆண்டைக் கொண்டாடும் இவ்வேளையில் தொடர்ந்தும் பல்வகை அபிவிருத்தித் திட்டங்களில் ஈடுபட்டு எமது மக்களுக்குச் சிறப்புறச் சேவையாற்ற வேண்டுமென கேட்டுக்கொள்வதுடன் சமாசத்தின் எல்லா அபிவிருத்தி முயற்சிகளும் திறம்பட நடக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்..

**செ. லிங்கநாதன்,**
யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவிஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

கூட்டுறவு அலுவலகம்,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

# யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (கணக்காய்வு) அவர்களின்

## ஆசிச் செய்தி

### "கூட்டுறவு இயக்கத்துக்கு ஓர் முதுகெலும்பு"

கூட்டுறவு இயக்கத்திற்கு யாழ்ப்பாணம் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களின் சமாசம் முதுகெலும்பாகத் திகழ்கிறது என்றால் மிகையாகாது. இச்சமாசம் 1982 - 03 - 02 இல் ஆரம்பித்துக் கடந்த பத்தாண்டுகளில் மிகப்பெரிய வளர்ச்சியினை எட்டியுள்ளது.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி காலச் சூழ்நிலைக்கேற்ப இந்தச் சமாசம் பிரச்சனைகளுக்கு முகங்கொடுத்துக் கூட்டுறவாளர்களுக்கு எந்தெந்த வழிகளில் உதவி, கைதூக்கி விடலாமோ, அந்தந்த வழிகளைக் கையாண்டு நாட்டுக்குச் சேவை செய்கிறது. கூட்டுறவு இயக்கத்திற் பல வகைப்பட்ட சங்கங்கள் இருப்பினும் அடிமட்டத்திலிருக்கும் அங்கத்தவர்கள் ஒவ்வொருவருடனும் தனது அங்கத்துவ சங்கங்கள் மூலம் நேரடியாகத் தொடர்பு கொண்டுள்ளது, இச் சமாசமேயாகும். மொத்தமாக உள்ள 1200க்கு மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்களிற் சிக்கன கடன் வழங்கு சங்கங்கள் 800க்கு மேலாகும். இவைகளில் 460 சங்கங்கள் இச்சமாசத்தில் அங்கத்துவம் பெற்றுள்ளன.

வீடமைப்புக் கடன், சுயமுயற்சிக் கடன், விதவைகள் கடன், மிக வறிய மக்கள் கடன், விழாக் கடன், உயர் கல்விக் கடன், குறுங்காலக் கடன், அபிவிருத்திக் கடன், திட்டக் கடன் போன்ற பல கடன் திட்டங்களை அறிமுகப்படுத்தி அங்கத்துவ சங்கங்கள் மூலம் நிதி வழங்கி சாதாரண அங்கத்தவர்களைப் பொருளாதாரத் துறையில் மேம்பாடடைய உதவுகிறது. இச்சமாசம் இத்துறைகளிற் கடன்களை வழங்கிய வகையில் 1990 - 12 - 31இல்ரூபா 215, 40, 894, 17சதம் சங்கங்களிலிருந்து வருமதியாக உள்ளது. இப்பெருந் தொகையில்இருந்து இச்சமாசம் எவ்வளவு தூரம் கூட்டுறவாளர்களின் முன்னேற்றத்தில் உழைக்கிறது என்பது புலனாகும்.

சமாசம் தனது நிதியைப் பல வழிகளிற் பெற்றுக் கொள்ளுகிறது. கூட்டுறவுக் கொள்கைக்கேற்ப அங்கத்தவர்கள் சுயமாகப் பொருளாதார வலுவடையச் சேமிப்பை ஊக்குவிக்கிறது. மாதாந்தச் சேமிப்புத் திட்டம், நிலையான வைப்புத் திட்டம், மாணவர் சேமிப்புத் திட்டம், பரிசூதிய சேமிப்புத் திட்டம், பத்து ரூபா சேமிப்புத் திட்டம் போன்ற கவர்ச்சியான சேமிப்புத் திட்டங்களை அறிமுகப் படுத்தி ஊக்குவிப்பதோடு, ஒவ்வொருவர் எல்லோருக்கும், எல்லோரும்

ஒவ்வொருவருக்கும் என்ற கோட்பாட்டை வலியுறுத்தி நிற்கிறது. தனது நிதியைச் சேகரிக்கிறது. இது மட்டுமல்லாது சி. க. கூ. சங்க சம்மேளனத்திலிருந்தும் வெளிநாட்டு நிறுவனங்களிலிருந்தும் பெருமளவில் நிதியினைப் பெற்றுக் கொள்ளுகிறது. சமூகநலச் சேவையாக அங்கத்தவர் மரண சகாயநிதித் திட்டத்தினையும் நடைமுறைப்படுத்துகிறது. காலத்தின் தேவையைக் கருத்திற் கொண்டு விதைபொருள், உரப்பொருள், எரிபொருள், நீரிறைக்கும் இயந்திரம் ஆகியவற்றை வழங்கி அங்கத்தவர்களை வீட்டுத்தோட்ட உற்பத்திக்கு ஊக்குவிக்கிறது.

கூட்டுறவு இயக்கத்தின்பால் அறிவும் ஊக்கமும் பெறுவதற்கு அங்கத்தவர் மட்டத்திலும் நிர்வாக சபையினர் மட்டத்திலும் பல பயிற்சி வகுப்புக்களையும் கருத்தரங்குகளையும் திட்டமிட்டு, கல்வி விஸ்தரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது இதன் சிறப்பு அம்சமாகும்.

இச்சமாசத்தின் இன்னுமொரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையாக, மகளிர் குழுக்களைப் பிராந்திய மட்டத்தில் உருவாக்கிப் பல கைப்பணி உற்பத்தி முயற்சிகளில் ஈடுபடுத்தி சிறு கைத்தொழிற் பொருட்களைச் சந்தைப்படுத்துவதன் மூலம் தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கிறது.

சமாசத்தின் மேற்பார்வையில் முப்பது சி. க. கூ. சங்கங்கள் வங்கிச் செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றன.

1972 ஆம் ஆண்டு மக்கள் வங்கியை அரசு உருவாக்கி அதற்குள் திறம்பட இயங்கிவந்த யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கியை இணைத்துவிட்டது. அதன் பின்பு கூட்டுறவுத்துறை இரண்டாந்தாய் மனப்பான்மையிற் கவனிக்கப்பட்டு வருகிறது. கிராமிய அமைப்புக்களான சி. க. கூ. சங்கங்கள் ஆதரவின்றி நலிந்துகொண்டு போவதிலிருந்து, இச்சமாசம் கைதூக்கிக் காப்பாற்றிப் புத்தூக்கமளித்தமையினால், அண்மைக் காலத்தில் பிரமிக்கத் தக்கவாறு சி. க. கூ. சங்கங்கள் உருவாகி இரட்டிப்பாகியுள்ளன.

இச்சமாசத்தை நினைக்கும்போது இதை உருவாக்கி வளர்த்தவரான பெரியார் அமரர் திரு. சண்முகம் ஞானப்பிரகாசம் அவர்களையும் அவரது சேவையையும் யாவராலும் நினைக்காமலிருக்க முடியாது. கூட்டுறவு இயக்கத்தில், அவரது காலம் பொற்காலம் எனக் கணிக்கப்படலாம்.

அவரின் முக்கிய நோக்கங்களில் ஒன்றான கூட்டுறவு வங்கியை உருவாக்குவதற்கு இச் சமாசமும் பிற கூட்டுறவு அமைப்புக்களும் இணைந்து செயற்பட வேண்டுமென எதிர்பார்ப்போமாக.

தற்போதய போர்க்காலச் சூழ்நிலையிற்தான் கூட்டுறவு இயக்கத்தின் அருமையையும், முக்கியத்துவத்தையும் எல்லா மக்களும் உணர முடிகிறது. கூட்டுறவாளர்கள் நேர்மையாகவும், சேவைமனப் பான்மையுடனும் நடந்து முன்னோடிகளாக இருந்தால்தான் எல்லா மக்களுக்கும் நம்பிக்கை ஏற்படும். அப்பொழுதுதான் எல்லா மக்களும் கூட்டுறவில் இணைவார்கள். அதற்கு இச் சமாசம் தொடர்ந்து பணியாற்ற வேண்டுமென வாழ்த்துவோம்.

**மா. கனகசபை,**
*கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,*
*( கணக்காய்வு ), யாழ்ப்பாணம்.*

*கூட்டுறவு அலுவலகம்,*
*பலாலிவீதி,*
*யாழ்ப்பாணம்,*

## கூ. அ. உ. ஆணையாளர், (பனை, தென்னை அபிவிருத்தி) அவர்களின்

# ஆசிச் செய்தி

### 10-ஆவது ஆண்டு பூர்த்தி

தொன்மையான காலம் தொட்டு கூட்டுறவின் பெருமைகளை நிலைநாட்டுவதில் யாழ். மாவட்டம் முன்னோடியானது. இத்தகைய அபரித வளர்ச்சிக்கு ஆதாரமாகத் திகழ்ந்தவை ஆழவேர்விட்டு வளர்ந்த ஆரம்பகால ஐக்கிய நாணய சங்கங்களாகும்.

1982ம் ஆண்டின் பின் இச் சங்கங்களின் பரிணும வளர்ச்சி தற்போதைய வியாபித்த அகல கிளை பரப்பிய சிக்கன கடன் உதவு கூட்டுறவுச் சங்கங்களாகவும் அவைகளின் திரட்சியான வளர்ச்சியை ஒருங்கிணைத்துக் கொண்ட "சிக்கன கடன் உதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்" என்ற முத்தாய்ப்பில் கிராமிய பொருளாதார மிளிர்ச்சி துலங்கி நிற்கின்ற நிலை கூட்டுறவுத் துறையில் பங்கு கொண்ட சகலரதும் பெருமைக்குரிய விடயமாகும்.

இவ் உருவாக்கங்களில் மாவட்ட ரீதியாக, மாகாண ரீதியாக, தேசிய ரீதியாக எதிர்பார்க்கப்பட்ட இணைப்புக்களும் தனித்துவ தேர்ச்சியும் இடைப்பட்ட காலத்தின் ஸ்திரமற்ற சூழ்நிலைகளினால் தொய்வு நிலைக்கு உள்ளானது துரதிஷ்ட வசமானதாகும்.

இருந்தும் இச் சங்கங்களின் எதிர்காலம் இவை ஒத்த ஏனைய பொருளாதார மேம்பாட்டு நிறுவனங்களை விட பிரகாசமானதாக இருக்கும் என்பதற்கான சகல அறிகுறிகளும் தென்படுகின்றன.

மேலும் ஏனைய கூட்டுறவு நிறுவனங்களை விட சி. க. கூ. சங்கங்கள் இம் மண்ணின் சகலதரப்பு மக்களையும் பேதங்களற்ற சமத்துவ அந்தஸ்துகளை வழங்கும் அமைப்பு முறையினதாகச் செல்வாக்குப் பெற்று வருவது சிறப்பான அம்சமொன்றாகும்.


பிரமிக்கத்தக்க சேவைகளை இவ் இடர்பாடான காலத்திலும் தனது வியாபித்த அங்கத்துவ தனிச் சங்கங்கள் மூலம் நிறைவேற்றி வரும் சி. க. கூ. சங்கங்களின் சமாசம் நிறைவான ஆயுளைக் கொண்டு தொடர்ந்தும் உறுதியுடன் செயலாற்ற இப் பத்தாண்டு பூர்த்தி தினத்தில் எனது உளமார்ந்த வாழ்த்துக்களை சமர்ப்பித்துக் கொள்கின்றேன்.

தி. சபாரத்தினம்,
கூ. அ. உ. ஆணையாளர் (பனை, தென்னை அபிவிருத்தி)

கூட்டுறவு அலுவலகம்,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.



தலைவர்



திரு. ச. முருகநேசன்
( யாழ்; மாவட்ட சி. க. கூ. சங்கங்களின் சமாசம் )

## திரு. ச. முருகநேசன்
### தலைவர்
## யாழ் மாவட்ட சி. க. கூ. சங்க சமாஜம் அவர்களின

# ஆ சி ச் செ ய் தி

### தசாப்தத்தில் சமாசத் தடங்கல்

1982-ல் தனக்கென ஒரு சட்ட நபர் உரித்துடமையினை பெற்றதிலிருந்து சமாசம் பத்தாண்டுகளைத் தாண்டி வந்திருக்கிறது. இந்த மலரினை வெளியிடுவது சமாசத்தின் சாதனைகளை வெளிக் காட்டும் எண்ணத்தினாலன்று. ஒரு தசாப்த காலத்தின் அவசியங் களைச் சமாசம் சந்தித்து மீண்ட போது பெற்ற அனுபவங்கள் ஆவணப்படுத்தப்படுதல் எமது நிறுவனத்துக்கும் பொதுவாக கூட்டுறவு இயக்கத்திற்கும் கற்றறியப்பட வேண்டியவற்றைத் தொகுத் தலே நினைவில் முன்னிறுத்தப்பட்டிருந்தது.

யாழ் மாவட்டத்தில் நிலவுகின்ற சமூகப் பொருளியல் பண் பாட்டுச் சூழலில் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்கள் உதிரிக ளாக இயங்குவதனால் பின்னடைவுகள் பலவற்றையும் எதிர்கொள் வதற்கான வலிமையைப் பெறும் அவசியம் உணர்த்தப்பட்டது. இம் மாவட்டத்தினது நிதியளிப்பில் அரச வங்கிகளின் தனியான்மைப் போக்கினுக்கெதிரான நிறுவனமயப்பட்ட பொதுத்துறையினை உரு வாக்குதலுக்கு சிந்தனையளவில் ஒப்புதல்கள் நிரம்பின. அதன் வெளிப்பாடான உருவாக்கமே எங்கள் சமாசமாகியது. ஒரு வணிக வங்கிக்கான மாற்று ஏற்பாடாகச் சமாசத்தைக் கொள்ளுதல் சரியா காது, அடிப்படையில் வங்கி முறைமையினையே மனதிற் கொண்டும், அதே வேளையில் கிராமியத் துறையின் மேம்பாட்டை முன் எடுத் தலுக்கே முன்னுரிமையும் வழங்கும் ஒரு செயற்பாடே கருத்திற் கொள்ளப்பட்டது. கிராமிய மட்டத்தின் நிதி மிகையென்பது கிரம மான காலக்கூறுகளில் வரையறுத்த நிதி மட்டங்களால் திரட்டத் தக்கது ஒன்றாக விளங்கவில்லை. பெருமிகையுடைய நீண்டகாலக் கோரிக்கைகளுக்கான வைப்புகளை சிக்கன கடனுதவு முறையில் கவருதல் இயலாததாகும். ஆயினும் சிறுதுளிகளே பெருஞ் சமுத் திரத்தினை ஆக்குகின்றன என்ற கோட்பாடு இச்சங்கங்களுக்காகவே வரையப்பட்டது போலும். பத்தாண்டுகளுக்கு முன்னர் 15 உறுப் புரிமைச் சங்கங்களுடன் ஒரு முடிவற்ற பயணத்தில் சமாசம் இறங்கி இன்று தன் பத்தாண்டு இறுதியில் 460 உறுப்பினர்களுடன் நடந்து கொண்டிருக்கிறது. உறுப்புரிமை விரிவாக்கம் மட்டும் சமாசத்தின் வளர்ச்சியென நாம் ஏமாந்துவிடத் தயாராகவில்லை. ஆனால் இந்த ளவில் சிக்கன கடனுதவு சங்கங்கள் சமாசத்தினை வலுப்படுத்தக்

காட்டி நிற்கும் ஆர்வம் குறைவாகக் கணிப்பிடப்படக் கூடாதென் பதே எமது நிலைப்பாடு. கோடி ரூபாவுக்கு மேலான தொகையை இச்சங்கங்கள் ஒரு கூட்டுப் பாலைவனத்துக்கு திரட்டியிருப்பதும் அதேயளவினதான நிதியை மனக் கசப்புக்களின்றி தம்மிடையே நிதி வழங்கலுக்கென பகிர்ந்திருப்பதும் நிச்சயமானதொரு கூட்டுறவுத் தளத்தையே குறிக்கிறது. சமாசத்தின் முதன்மைப் பணியாக இந்த உணர்விறுக்கத்தையே நாம் சுட்டிக் காட்ட விழைகின்றோம்.

யாழ் மாவட்டத்திற் பல ஆண்டுகட்கு முன்னர் பிரதேச மட் டங்களில் நிறுவப்பட்டு இருந்த நாணய சங்க சமாசங்களின் மறை வுக்குப் பின்னர் நாணய சங்கங்களின் தொழிற்பாடு பெருமளவில் வீழ்ச்சிகண்டிருந்தது. முறையான தலைமைத்துவமும், நீண்ட பாரம் பரியமும் கொண்ட குறிப்பிடத்தக்களவு சங்கங்கள் நிலைத்து நின்ற னவேயாயினும் ஏனைய சங்கங்கள் வழிகாட்டலும் ஒருங்கிணைப்பு மற்றுமடிந்தன. அதன் விளைவாகப் புதிய தலைமுறையினரை அதி லும் கிராமிய இளந்தலைமுறையினருக்கு பட்டந்தீட்டும் வாய்ப்பும் ஒரு சேர மறுக்கப்பட்டது. சமூக உணர்வுடன் மானிட நேசத்தை நெஞ் சில் சுமக்க ஒரு பரம்பரையிருப்பினும் இதன் பக்கபலமான சக்திகள் நாட்டின் செழுமையான வளரச்சிக்காக உழைப்பதற்கான வழி யொன்று தூர்ந்திருந்தது.

சமாசத்தின் பணியில் இந்த தூரெடுத்து 'நன்னிலம்' விளங்க விடுதலுக்கு முழுக்கவனமும் செலுத்தப்படுகிறது. இந்தப் போன பத்தாண்டுகள் யாழ் மாவட்டத்தில் குருதியும், சோகமும், கவிந்த ஒரு காலமாகும். எமது வாழ்வின் துடிப்புகள் துளிர்விடுவதற்கான காலநிலை இங்கே நிலவவில்லை. தமது சொந்த நலன்களை மட்டுமே முன்வைத்தியங்கியோர் இக்காலத்தில் சமூகத்தில் முதல் நிலைகளை இழந்தனர். வாழ்ந்தால் சேர்ந்து வாழ்வோம் அன்றேல் மடிந்து போவோம் என்ற முடிவோடு இங்கே மக்கள் ஒன்றிணைந்து துன் பங்களைச் சுமக்கின்ற வேளையில் இவ்வுணர்வுகள் சமாசத்தினதும் இயக்கத்தில் உரிய இடத்தைப் பிடித்துக் கொண்டது. பலர் தமது சொந்தவாழ்வுக்கான உழைப்பை நல்கும் அதே அக்கறையுடன் இந்தச் சமாச வளர்ச்சிக்கும் பாடுபட்டுள்ளனர். இவர்களின் பயன் கருதா உழைப்பே இந்தப் பத்தாண்டுகளில் சமாசத்தைக் காத்து வளர்த்திருக்கிறது. இவர்களில் இந்நிறுவனப் பிதாமகர் அமரர் திரு. ச. ஞானப்பிரகாசம் அவர்கள் முளையிலே பயிர்காத்து மூன்றிலைப் பருவம் வரை தமது பேருழைப்பை ஈந்தமை நன்றியுடன் நினைவு கூரப்படாவிடில் எனது கடமை பூரணமடையாது. இந்தப் பெயர் குறிப்பிடாத பேர்வழிகள் தமக்கெனத் தனிச்சுவடுகளைப் பொறிக் காதவர்கள். என்னைப் பொறுத்தளவில் இந்த நினைவுமலர்ச் செடி யின் மண்ணடி வேர்கள் இவர்களே. இந்தமலர் வீசும் மணமெல்லாம் அவர்களின் தேகம் சொரிந்த வியர்வைகளே.

சமாசத்தின் தலைவரென்ற வகையில் மலர்பற்றிக் குறிப்பிட வேண்டியுள்ளது. நினைவுமலர் தனது பத்தாண்டு வாழ்வின் தடங்

களையும், வடுக்களையும் வருடிக் கொள்கிறது. ஒரு துறவி போல சமாசம் தான் கடந்து வந்த காலத்தில் சந்தித்த சம்பவங்களை, சமூக அவலங்களை, அவசியங்களைத் தன்னளவில் மட்டுமே இரை மீட்டுக் கொள்ளவில்லை. எமது சூழலிலிருப்போரும் எங்களைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என அறிவதற்காக இந்த மலர் இதழ்களை அகலவே திறந்துவிட்டிருக்கிறது. ஏனெனில் கோணல் பார்வை மனக் கோடலுக்கு வழி செய்கிறது என்பதை நாம் சரியாகவே புரிந்திருக் கிறோம். நடுநின்று சொல்லப்படும் சேதிகள் நாளைக்கு எமக்காக செல்வழியைக் காட்டும். எவர் சொல்கிறார்களென்பதை விட என்ன சொல்கிறார்களென்பதே இங்கு முதன்மை பெறுகிறது.

எமக்குத் தரப்பட்ட பத்திரத்தை இயன்றளவுக்கு மேற்கொண் டிருப்பதாகவே எண்ணுகிறோம். இந்த மலரில் சமாசத்தின் இயல் பினைக் காட்டவே எத்தனிக்கப்பட்டிருக்கிறது. இவைபற்றிய ஒவ் வொருவரதும் கருத்துக்களும், ஆலோசனைகளும் சமாசத்தின் எதிர்காலத்துக்கு உதவுவன என்பதால் ஆயிரம் மலர்கள் மலர வேண்டு மென நாடி நிற்கின்றேன்.

நன்றி.

ச. முருகநேசன்,
யாழ் மாவட்ட சி. க. கூ. ச. சமாசத் தலைவர்,
யாழ்ப்பாணம்.

யாழ் மாவட்ட சி. க. கூ. ச. சமாசம்,
யாழ்ப்பாணம்.

## இலங்கை சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச சம்மேளனத் தலைவர் அவர்களின்

# ஆசிச் செய்தி

வரைவுள்ள யாழ்ப்பாண மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் 10 ஆண்டு நிறைவையொட்டி வெளியிடும் சிறப்பு மலரில் ஆசிச் செய்தி ஒன்றை வழங்குவதில் பெருமையடைகிறேன்.

இலங்கையின் கூட்டுறவு வரலாற்றிலே, பல சாதனைகளைச் செய்த பெருமை யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கே உரித்தானதாகும். அதிலும் மிகக் கூடிய அங்கத்தவர்களை உள்ளடக்கி, வறிய மக்களது பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்வதில் யாழ் மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் மேற்கொண்ட, மேற்கொண்டு வருகின்ற நடவடிக்கைகள், யாழ் மக்களின் கூட்டுறவின் முன்னோடிகள் என்பதை வலியுறுத்துகிறது.

பல்வேறு நெருக்கடிகள் மத்தியிலும் அங்கத்தவர் தேவைகளைப் பூர்த்தி செய்வதே இலக்கு எனத் திடசங்கற்பம் பூண்டு செயற்பட்டு வரும் யாழ் மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் இலக்குகள் வெற்றியடைய எனது நல்லாசிகள்.

நன்றி.

பி. ஏ. கிரிவந்தெனிய.
கௌரவ தலைவர்
இலங்கை சி. க. கூ. சம்மேளனம்.

சி. க. கூ. சம்மேளனம்,
3|3, எட்மண்டன்ட் றோட்,
கொழும்பு - 06.

## யாழ் மாவட்ட
## சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச்
## சங்கங்களின் சமாசத்தின்

### முதல் தலைவர் திரு. வி. கே. சுப்பிரமணியம் அவர்களின்

# ஆசிச்செய்தி

யாழ் மாவட்ட சி. க. கூ. ச. சமாசத்தின் 10வது ஆண்டு நிறைவு மலருக்கு இச்செய்தியை அனுப்புவதில் பெருமிதமடைகின்றேன். 1982ம் ஆண்டு இச்சமாசம் ஆரம்பித்த காலத்தையும் தற்பொழுது இச்சமாசம் இருக்கும் உன்னதநிலையையும் ஒப்பிடும் போது இந்த சமாசம் 10 ஆண்டு காலத்தில் எவ்வளவு தூரம் முன்னேற்றமடைந்துள்ளது என்பதனை எண்ணி பெருஉவகை அடைகின்றேன். இந்த அளப்பரிய முன்னேற்றத்துக்கு காரண கர்த்தாவாகிய இறைவனையும், ஐ. நா. ச. இயக்கத்தையும் யாழ் மாவட்டத்தில் வளர்த்தவர்களாகிய அமரர் திரு. ச. ஞானப்பிரகாசம், திரு. சி. இரகுநாதன், திரு. எவ் ஏ. சந்திரசேகரா ஆர். சி. எஸ். குக், வி. நடராஜா, கே. பொன்னுச்சாமி, மட்டக்களப்பு கே. மாணிக்கம் ஆகிய முன்னாள் கூட்டுறவு ஆணையாளர்களையும், முன்னாள் வட பகுதி ஐக்கிய நாணய சங்க மேற்பார்வை சபைத் தலைவர் திரு. எஸ். வீரசிங்கத்தையும், ஆரம்ப கால இயக்குனர் சபையும், தற்போதைய இயக்குனர் சபையும், சமாச ஊழியர்களையும்; அங்கத்துவ சங்கங்களையும் வாழ்த்துவதில் பூரிப்படைகின்றேன். ஆரம்ப காலத் தலைவர் என்ற முறையில் அங்கத்துவ சங்கங்களுக்கு சில குறிப்புக்களை குறிப்பிட விரும்புகின்றேன்.

கூட்டுறவுத்துறையில் பல முன்னேற்றத் திட்டங்களை யாழ்ப் பாணத்தில் ஆரம்பித்த போதிலும், ஐ நா. சங்க இயக்கம் உலகின் கவனத்தை 1911ம் ஆண்டு தொடக்கம் ஈர்ந்து வந்துள்ளது. இம் முன்மாதிரியை பின்பற்றி உலக நாடுகள் பல ஐக்கிய நாணய இயக்கத்தில் ஈடுபட்டன. அப்படிப்பட்ட பொற்காலத்தில் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்தில் எங்கள் கூட்டுறவு வங்கியையும், ஐக்கிய நாணய சங்க மேற்பார்வைச் சபையையும் குலைத்து எங்கள் இயக்கத்தை அநாதரவான நிலைக்குக் கொண்டு வந்தன. கூட்டுறவு இலாக்காவும் எங்களைக் கைவிட்டது, பின்னர் நான் யாழ்ப்பாண மாவட்ட தேசிய கூட்டுறவுப் பிரதிநிதியாக

எங்கள் இயக்கத்தை மறுசீரமைக்க முயன்றும் காலம் சென்ற கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஆ மு. ஆலாலசுந்தரம் யாழ் மாவட்ட தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவராக கடமையாற்றிய போது அவரின் அயராத முயற்சியாலும், அமரர் திரு. ச. ஞானப்பிரகாசம் அவர்களின் உறுதுணையுடன் இச்சமாசம் திரு. ஆ. மு. ஆலாலசுந்தரம் அவர்களின் தலைமையில் 1981ம் ஆண்டு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இவ்வாறு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட சமாசமானது 1982-03-02ம் திகதி அமரர் திரு. ச. ஞானப்பிரகாசம் அவர்களால் பதிவு செய்யப்பட்டது. இவ்வாறு 1982ம் ஆண்டு சிறுவிதையாக விதைக்கப்பட்ட சமாசமானது இன்று பெரு ஆலவிருட்சம் போல் பல்லாயிரம் மக்களுக்கு நிழல் கொடுத்து அவர்களின் பொருளாதார, சமூக, கலைகலாச்சார மேம்பாட்டிற்கு நற்சேவை ஆற்றி வருவதை எண்ணி மகிழ்கின்றேன்.

இச்சமாசமானது மேலும் பல வகையான உன்னத திட்டங்களைத் தீட்டித் தான் நிர்ணயித்த இலக்குகளை அடைந்து, உன்னத வளர்ச்சியை அடைந்து வருங்கால சந்ததியின் பொருளாதார, சமூக, கலை, கலாச்சார அபிவிருத்திக்கும், உயர்ச்சிக்கும் உதவுவதோடு அங்கத்தவர்களிடையே புரிந்துணர்வும், பரஸ்பர நல்லுறவும், ஒருவர் எல்லோருக்காகவும் எல்லோரும் ஒருவருக்காகவும் என்ற ரீதியில் வாழக்கூடிய ஒரு நல்ல கூட்டுறவு சமுதாயத்தை உருவாக்க வேண்மென்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி.

**வி. கே. சுப்பிரமணியம்,**
*சமாச முன்னாள் தலைவர்.*

*கரணவாய் வடக்கு,*
*கரணவாய்.*

## திரு. பொ. செல்வரத்தினம்
## முன்னாள் தலைவர்,
## யாழ். மாவட்ட சி. க. கூ, சங்க சமாசம் அவர்களின்

# ஆசிச்செய்தி

கடந்த சில வருடங்களாக யாழ் மாவட்டத்தின் சிறப்பான அமைப்பாக இயங்கி வரும் யாழ். மாவட்ட சி. க. கூ, ச. சமாசத்தின் 10வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இவ்வேளையில் அதனைப் பாராட்டி வாழ்த்துக் கூறுவதில் இச் சமாசத்தின் முன்னாள் தலைவர் என்ற ரீதியில் பெருமகிழ்வு அடைகிறேன்.

10 வருடங்களின் முன்னர் சிறு விதையாக விதைக்கப்பட்ட இச் சமாசத்தின் செயற்பாடானது இன்று பெரும் ஆலம் விருட்சம் போல் மக்களுக்கு நிழல் கொடுப்பதை எண்ணி உவகை அடைகிறேன். சிறுதுளி பெருவெள்ளம் என்பது போல் ரூ. 10/- வீதம் சிறுகச் சிறுகச் சேர்க்கப்பட்ட நிதி இன்று கோடிக்கணக்கில் திரண்டு சமாசத்தை நிதிப்பலம் பொருந்திய ஸ்தாபனமாக யாழ் மாவட்டத்தில் திகழ்வதன் மூலம் கூட்டுறவுத்துறை சார்ந்தவர்களின் பொருளாதார, சமூக, கலை, கலாச்சார முன்னேற்றத்தில் இதன் பங்கு மிகப் பெரியதாக உள்ளது. இன்று தன்னாதிக்கம், தனித்துவம், சுயகௌரவத்துடன் செயல்பட்டு வருகின்றது. இச் சமாசமானது கூடிய விரைவில் கூட்டுறவுத்துறையில் வங்கி அமைப்பாக மாறும் என்று கூறப்படும் கூற்றில் எள்ளளவும் ஐயமில்லை எனக் கருதுகிறேன்.

இச் சமாசமானது தனது அங்கத்துவ சங்கங்களினதும் அதன் அங்கத்தவர்களினதும் தேவையை அறிந்து அதற்கேற்ற வகையில் நிதி உதவிகளை வழங்கி சமூகநலன் சேவைகளை செய்தும் கலை கலாச்சாரத்திற்கு புத்துயிர் ஊட்டியும் தனது பணியைச் செவ்வனே தனது அங்கத்தவர்களுக்கு செய்து வந்துள்ளது எனக் கூறுவதில் அது மிகையாகாது. " சிக்கனமே சிறந்த செல்வம் " என்ற விருது வாக்கியத்திற்கு அமைவாக அங்கத்தவர்களிடையே சிக்கனப் பழக்க வழக்கங்களை ஊக்குவித்து அதன் மூலம் அவர்களிடமிருந்து சேமிப்பைத் திரட்டி அவர்கள் சேமித்த நிதியிலிருந்தே அவர்கள் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய ஒரு வழிவகையை செய்ததுடன் ஒரு சில சங்கங்களை கிராமிய மினி வங்கிகளாக செயற்பட வைத்துள்ளதுடன், அவை தன்னிறைவு அடையவும் செய்துள்ளது. தற்போதைய

போர்க்கால சூழலில் வர்த்தக வங்கிகள் நிதிப்புழக்கம் இல்லாது திண்டாடிய காலத்திலும் அசாத்தியமான சூழ்நிலையிலும் கூட்டுறவு அமைப்புக்குரிய பாங்கான முறையில் அங்கத்தவர்களின் தேவைக்கு ஏற்ப நிதி உதவிகளை வழங்கி சேவை செய்துள்ளதுடன் இலட்சியத்திலிருந்து விலகாது அதற்கிசைவாக நடைபோட்டுள்ளது. இதற்கு அடிப்படையாக அமைந்தது அங்கத்தவர்களின் சேவை மனப்பான்மையும் ஒத்துழைத்தலும், ஊழியரின் அயராத உழைப்பும், இச்சமாசமானது இவ்வளவு தூரம் வளர்ச்சி அடையக் காரணமென எண்ணுகிறேன்.

எமது யாழ் மாவட்ட மக்களின் வாழ்வு வளமாக அமைவதற்கேற்ற வகையில் எதிர்கால நற்திட்டங்கள் தீட்டப்படும் செயற்படுத்துவதன் மூலமும், அங்கத்தவர்களின் வாழ்க்கைத்தரம் உயரவும் சமாசமானது யாழ் மாவட்டத்தில் ஒரு சிறந்த கூட்டுறவு வங்கியாக எதிர்காலத்தில் வளர்ந்து கூட்டுறவுக் கொள்கைக்கு அமைவாக சிறப்புடனே சேவையாற்ற வேண்டுமென ஆசி கூறுகிறேன்.

நன்றி.

பொ. செல்வரட்ணம்,
முன்னாள் தலைவர்,
யாழ் மாவட்ட சி. க. கூ. ச. சமாசம்

மன்றம்,
லோட்டன் வீதி,
மானிப்பாய் தெற்கு,
மானிப்பாய்.

## தலைவர்,
## யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை அவர்களின்

# ஆசிச்செய்தி

யாழ்ப்பாண மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் பத்து ஆண்டுகள் சேவையை நிறைவு செய்த தனையிட்டு யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுச் சபை மட்டற்ற மகிழ்ச்சியடைகிறது. மாவட்டத்தின் சகல பாகங்களிலும் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதில் ஆர்வத்தை ஊட்டி கூட்டுறவு இயக்க மூலம் மக்கள் சேமிக்கும் பழக்கத்தினை ஏற்படுத்தியது பெரியதோர் தொண்டாகும். நிதி தேவைப்படும் மக்களுக்குக் குறைந்த வட்டியில் நிதியினையும் வழங்கி வருவதுடன், மாணவர்கள் சேமிக்கும் பழக்கத்தினை மேற்கொள்ள பாடசாலை களிலும் சேமிப்புத் திட்டத்தைப் புகுத்தியது. இதற்கு அப்பாலும் சென்று வெளிநாட்டு நிறுவனங்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி அவை மூலமும் நிதியினைப் பெற்று மக்களுக்கு உதவி வழங்கியுள்ளது. குறிப்பிடத்தக்கதாகும். இவ்வுதவியினால் பயனுற அவாவிய தென் இலங்கைச் சம்மேளனத்துடனும் நீதி கோரி இச் சமாசம் முட்டி மோதியதுண்டு.

இச் சமாசம் மகளீர் குழுக்களை அமைத்து அவர்களின் கல்வி வளர்ச்சியில் அக்கறை காட்டி வருவதும், சங்க இயக்குனர்களுக்கு சங்க அலுவல்களில் பயிற்சி அளித்து சங்கங்களைத் திறம்பட நடாத்த உதவுவதும் சிறந்த அம்சங்களாகும். அண்மைக் காலத்தில் துரித வளர்ச்சியினை அடைந்து வரும் சங்கங்களில் இச் சமாசத்தின் சங்கங்கள் முக்கிய பங்கினை வகிக்கின்றன. இதற்கெல்லாம் உரமூட்டி உதவியது இச் சமாசமே. இச் சமாசமானது மேன்மேலும் வளர்ந்து தம் மக்களுக்கு உதவவேண்டுமென இறை ஆசி வேண்டி நிற்கின்றோம்.

**வை. செந்திநாதன்,**
*தலைவர்,*
*யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை.*

*மணிக்கூட்டு வீதி,*
*யாழ்ப்பாணம்.*

## வடமாகாண, தெ. ப. பொ. கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவர் அவர்களின்

# ஆசிச்செய்தி

யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தனது 10வது ஆண்டு நிறைவையொட்டி வெளியிடவிருக்கும் மலருக்கு ஒரு கூட்டுறவாளன் என்ற வகையில் ஆசிச் செய்தி வழங்குவதால் மனமகிழ்வடைகிறேன்.

கடந்த 10 ஆண்டு கால வளர்ச்சிப் பாதையில் சேவை முதிர்ச்சி கொண்ட எமது சி. க. கூ. ச. சமாசம் இம் மாவட்டத்தில் பல்வேறு துயரங்களின் மத்தியில் வாழும் மக்களுக்கு துணிவூட்டி, அவர்களைக் கூட்டுறவாளர்களாக்கி, சிந்திக்கத்தூண்டி, சிக்கனத்தின் அவசியத்தை உணர்த்தி, வேலையற்று வீண்பொழுது போக்கிய இளைஞர், யுவதிகளுக்கு சுயதொழிற் பயிற்சிகளை வழங்கி அத்தொழிற்பாட்டின் மூலம் அவர்களைப் புத்துணர்வு பெறச் செய்து, எமது பிரதேச வளங்களைப் பயன்படுத்த வழிகாட்டி, ஒரு புதிய பலம் மிக்க பொருளாதார வலுவுடைய சமுதாயத்தை உருவாக்கிய, தரம்மிக்க ஒரு கூட்டுறவு அமைப்பாக உயர்ந்து வளர்ந்துள்ளமை கண்டு பெருமைய்டைகின்றேன்.

இந்நிலையில் யாழ் மாவட்டத்தில் உள்ள தெ. ப. பொ. கூ. சங்கங்களின் பணியாளர்களும், அங்கத்தவர்களும், கூட்டுறவுக்குள் கூட்டுறவு, என்னும் சித்தாந்த அடிப்படையில் சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களுடன் இணைந்து நலன்களையும், சேவைகளையும் தமது தேவைக்கேற்ப பகிர்ந்து பரஸ்பர உதவி எனும் கூட்டுறவு இலட்சியத்திற்கமைய ஒழுகி செயல்பட்டு வருவதைக் கண்டு பெருமிதமடைகின்றேன். இந்நிலை மேலும் வளர வேண்டுமென எதிர்பார்க்கின்றேன்.

மேலும் இவ் கூட்டுறவு அமைப்பானது கடந்த காலத்தில் ஆற்றிய சேவைகள் போன்று புதிய வடிவங்களையுடைய சமூகநல அபிவிருத்தி திட்டங்களை இனம்கண்டு செயல்படுத்தி இங்கு வாழ் மக்களெல்லாம் பயன்பெற்று, கூட்டுறவின் தனித்துவத்தை உணரும் வகையில் சேவையாற்றி பயன்மிகு, வளம் மிகுந்த புதிய சிந்தனையுடைய சமூக அமைப்பினை உருவாக்கி அவை வளமோடு வாழ நல்வழிகாட்டி அரும்பெரும் தொண்டாற்றி, மாவட்ட, தேசிய, சர்வதேச மட்டத்தில் எமது மாவட்ட கூட்டுறவாளரின் செயற்றிறனை மதிக்கும் அளவிற்கு மேலும் வளரவேண்டுமென மகிழ்வோடு வாழ்த்துகின்றேன்.

சா. செல்வரெட்ணம்,
*தலைவர்,*
*வடமாகாண, தெ. ப. பொ. கூ.*
*சங்கங்களின் சமாசம்.*

*காங்கேசன்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

# குறைந்த விலையில் நிறைந்த பயன் வேண்டுமா ?

கூட்டுறவுச் சக்தியின் ஆக்கப்பயன்

## தரம் குன்ரு, சுவைமிகுந்த

உன்னத தயாரிப்பான

**★ பாண், ★ கேக், ★ கல்பணீஸ், ★ பிஸ்கட்;**
**வகைகள்**

குறித்த தவணையில் தரம் குன்ருது தேவைகள் பூர்த்தி செய்து
கொடுக்கும ஒரே நிறுவனம்

**பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கம்**
**பண்டத்தரிப்பு**





## 10வது ஆண்டை

**நிறைவு செய்யும் யாழ் சி. க. வ. கூ. சங்கங்களின்**
**சமாசம் வளர நல்லாசிகள்**

" உலகின் வளர்ச்சியடைந்த, வளர்ச்சியடைந்துகொண்டிருக்கின்ற
வளர்ச்சியடைய இருக்கின்ற மக்களுக்கும், நாடுகளுக்கும்,
வழிகாட்டியாக, பாலமாக, உறுதுணையாக, விளங்குவது
கூட்டுறவு இயக்கமே.

*பதிவு இல: ஜே / 1587*
*12 - 8 - 1971*

**ப. நோ. கூ. சங்கம்**
**சுன்னுகம்**

ஒருவர் எல்லோருக்காகவும்
எல்லோரும் ஒருவருக்காகவும்
என்ற தத்துவத்தின் அடிப்படையில்
சேவையாற்றி வரும்
யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு
சங்கங்களின் சமாசத்தின் சேவையானது
மேலும் தொடர வேண்டுமென
வாழ்த்துகின்றோம்.

ஊர்காவற்றுறை
ப. நோ. கூ. சங்கம்.

☎ 23794


# செல்லையா சிவபாதலிங்கம்

**வைரக்கல் நகைவியாபரம்**

191 H, 218H, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சிறந்த வேலைப்பாடுள்ள தங்க வைர நகைகளை விரும்பிய டிசைன்களில் தெரிவு செய்யலாம்.





ஓடர்கள் குறித்த தவணையில் சிறந்த முறையில் செய்துகொடுக்கப்படும்

மலர் குழு அறிக்கை

# நாம் கடந்துவந்த பத்தாண்டு பாதைதனைத் திரும்பிப் பார்க்கிறோம்

" அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு "

" ஒன்று பட்டால் உண்டு வாழ்வு
ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வு "

இம் முதுமொழிகள் கற்பித்தவைகளை அச்சாணியாகக் கொண்டு ஒழுகியமையே எம் இன்றைய வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்தது.

யாழ் மாவட்டத்தில் 75 வருடங்களின் முன் ஐக்கிய நாணய சங்கம் என்ற பெயரில் சில அமைப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு சேவையாற்றி வந்தன இவற்றின் பலாபலன்களை உணர்ந்த மக்கள் காலப்போக்கில் ஐக்கிய நாணய சங்கங்களை உருவாக்கினர் எனினும் அவை தனித்தனிச் சங்கங்களாகவே செயற்பட்டு வந்தன. வடபகுதி ஐக்கிய சங்க மேற்பார்வைச் சபை செயற்பட்டு வந்த காலகட்டத்தில் கூட்டுறவு மாகாணவங்கி அமைக்கப்பட்டு, அதன் மூலம் ஐக்கிய நாணய சங்கங்கள் நிதியுதவி பெற்று நல்வளர்ச்சி கண்டன. ஆனால் 1972-ம் ஆண்டு அரசாங்கம் இவ் வங்கியை மக்கள் வங்கிக்கு அரசுடமையாக்கிப் பிரகடனப்படுத்தியது. இந்த எதிர்பாராத இழப்பு ஐக்கிய நாணய சங்கங்களுக்கு பலத்த பாதிப்பை ஏற்படுத்தியது. இத்தகையான நிலைக்கு அவை தள்ளப்பட்டன. இவற்றிற்கு நிதியுதவி வழங்க வேறெந்த அமைப்பும் முன்வரவில்லை. அதன் பயன் இச் சங்கங்கள் வீழ்ச்சியடைய ஏதுவாகியது. இந்த வீழ்ச்சி நிலையினை அனாதைகள் ஆக்கப்பட்ட இச் சங்கங்களை மீண்டும் காத்து வளக்கில் நல்நோக்கத்துடன் ஒரு சில கூட்டுறவாளர்கள் ஒருங்கிணைந்து ஐக்கிய நாணய சங்கங்களுக்கு எவ்வழியில் இந்நிதியினைப் பெற்று வளர்க்கலாமெனச் சிந்தித்து செயற்படத் தொடங்கினர். இதன் பயனாகப் பிறரை நம்பி இருக்காமல் தாங்களே தம் சொந்தக் காலில் நிற்கக் கூடிய ஓர் அமைப்பை நிறுவ முனைந்தனர். " ஒன்று பட்டால் உண்டு வாழ்வு " என்ற நம்பிக்கையுடன் யாழ் மாவட்டத்தில் சிதறிக்கிடந்த ஐ. நாணய சங்கங்களை மாவட்ட ரீதியிலேயே ஒருங்கிணைத்து யாழ்ப்பாணம் மாவட்ட ஐக்கிய நாணய சங்கங்களின் சமாசமாக அமைப்பதென்ற முடிவுடன் 1981-ம் ஆண்டு ஆவணி மாதம் 23-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11-00 மணியளவில், யாழ் வீரசிங்க மண்டபத்தில் அக்கால யாழ் மாவட்ட தேசிய கூட்டுறவுத் தலைவர் திரு. ஆ. மு. ஆலாலசுந்தரம் (முன்னைநாள் பா. உறு) அவர்கள் தலைமையில் யாழ்ப்பாணப் பகுதிக்கான ஐக்கிய நாணய சங்கங்களின் சமாச அங்குரார்ப்பணக் கூட்டம் நடாத்தினர். இக்கூட்டத்தில் 54 ஐக்கிய நாணய சங்கப் பிரதிநிதிகளும், கூட்டுறவு உதவி ஆணையாளர்கள் திரு. ச. ஞானப்பிரகாசம், திரு. வி. நடராஜா ஆகியோரும் சமூகந் தந்து சமாசத்தை அமைப்பதற்கு அனுசரணையான ஆலோசனைகள், அறிவுரைகள் வழங்கியுதவினர். அன்று ஆரம்பிக்கப்பட்ட இச் சமாசம் 1982-ம் ஆண்டு பங்குனி மாதம் 02-ந் திகதி அக்காலத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகக் கடமையாற்றியவரும், சமாசத்தின் ஸ்தாபகருமாகிய திரு. ச. ஞானப்பிரகாசம் அவர்களால் யாழ்ப்பாணம் மாவட்ட ஐக்கிய நாணய சங்கங்களின் சமாசம் எனப்பதியப்பட்டது. அன்றிலிருந்து 1992-ம் ஆண்டு பங்குனி மாதம் 2-ம் திகதி வரையான தசாப்த கால வளர்ச்சியைத் திரும்பிப் பார்க்கிறோம்.

1982-ம் ஆண்டு சமாசத்தின் ஆரம்பகாலத் தலைவராக திரு. வி. கே. சுப்பிரமணியம் அவர்களும், உபதலைவராக திருமதி வேதவல்லி கந்தையா அவர்களும், செயலாளராக திரு. இ. திருநாவுக்கரசு

அவர்களும், பொருளாளராக திரு. டி. வி. எம் இராசசிங்கம் அவர்களும் தெரிவு செய்யப்பட்டு செயலாற்றி வந்தனர். ஆரம்பத்திலேயே சங்க அங்கத்துவர்களிடமிருந்து மாதாந்த சேமிப்பாக ரூ. 10/– சேகரிப்பு நிதிக்காகக் சேகரிக்கப்பட்டது. அத்துடன் மரணசகாயத் திட்டமும் அமுல்படுத்தப்பட்டது. இந்த ஆண்டிலேயே இலங்கை சி. க. கூ. சம்மேளனத்துடன் சமாசம் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டது.

1983 – 1984-ம் ஆண்டு செயற்படுத்துவற்குத் தலைவராக திரு. வீ பொன்னம்பலம் அவர்களும், உபதலைவராக திருமதி வேதவல்லி கந்தையா அவர்களும், செயலாளராகத் திரு. இ. திருநாவுக்கரசு அவர்களும், பொருளாளராக திரு. வை. வெங்கடாசல ஐயரும் தெரிவு செய்யப்பட்டு செயலாற்றி வந்தனர். இவ்வாண்டிலேயே சங்க அங்கத்தவர்களுக்கு உதவியாக அங்கத்தவர் கடன் என்னும் அடிப் படையில் கடன் வழங்கல் ஆரம்பிக்கப்பட்டது.

1984 – 85-ம் ஆண்டுக்காலத்தில் செயலாற்றுவதற்குத் தலைவராக திரு. வி. கே. சுப்பிரமணியம் அவர்களும், உபதலைவராக திருமதி வேதவல்லி கந்தையா அவர்களும் செயலாளராக திரு. க. மகாதேவன் அவர்களும், பொருளாளராக திரு. வை. வெங்கடாசலஐயர் அவர்களும் தெரிவு செய்யப்பட்டு செலாற்றி வந்தனர். இவ்வாண்டில் சாதாரண கடன், விசேட கடன், சுயமுயற்சிக் கடன் என்பன அறிமுகப்படுத் தப்பட்டு அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்டது.

1985 - 86-ம் ஆண்டுக் காலத்தில் செயலாற்றுவதற்குத் தலைவராக திரு. வி. கே. சுப்பிரமணியம் அவர்களும், உப தலைவராக திரு. வி. அம்பலவாணர் அவர்களும், செயலாளராக திரு. சி. நடராஜா அவர்களும், பொருளாளராக திரு. த. சீவரட்ணம் அவர்களும் தெரிவு செய்யப்பட்டு செயலாற்றி வந்தனர். இக்காலத்தில் முதல்முதலாக மரணசகாயக் கொடுப்பனவு வழங்கப்பட்டது.

1986 – 87-ம் ஆண்டுக் காலத்தில் செயலாற்றுவதற்குத் தலைவராக திரு. பொ. செல்வரட்ணம் அவர்களும், உபதலைவராக திரு. வி. கே. சுப்பிரமணியம் அவர்களும் செயலாளராக திரு. வை. வெங்கடாசலஐயர் அவர்களும், பொருளாளராக திரு. த. சீவரட்ணம் அவர்களும் தெரிவு செய்யப்பட்டு செயலாற்றி வந்தனர். இக்காலத்தில் வீடுதிருத்தக் கடன், விவசாயக் கடன் எனும் திட்டங்கள் அறி முகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டன. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் வீடமைப்புக் கடனைப் பெற்று அங்கத்துவ சங்கங்களின் அங்கத்தவர்களுக்கு வீடமைப்புக் கடன் வழங்கத் தொடங்கியது. அத்துடன் வீடமைப்புக் கடன் வைப்புத்திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டது.

1987 - 88-ம் ஆண்டுக் காலத்தில் செயலாற்றுவதற்குத் தலைவராக திரு. பொ. செல்வரட்ணம் அவர்களும், உபதலைவராக திரு. வி. கே. சுப்பிரமணியம் அவர்களும், செயலாளராக திரு. எம். கனகசபை அவர்களும், பொருளாளராக திரு. த. சீவரட்ணம் அவர்களும் தெரிவு செய்யப்பட்டு செயலாற்றி வந்தனர். இக்காலத்தில் சம்மேளனத்தினூடாகக் கடன் பெற்று வறியமக்கள் கடன், சுயமுயற்சிக் கடன் என்னும் திட்டங்கள் அறிமுகப்படுத்தி கடன் வழங்கப்பட்டது.

1988 - 89-ம் ஆண்டுற்காலத்தில் செயலாற்றுவதற்குத் தலைவராக திரு. ச. ஞானப்பிரகாசம் அவர்களும், உபதலைவராக செல்வி. த. நல்லதம்பி அவர்களும் தெரிவு செய்யப்பட்டு செயலாற்றி வந்தனர். இக்காலத்தில் சமாசத்தின் புதிய துணைவிதிகள் ஆக்கப்பட்டு ஏற்றுக்கொண்டு செயற்படுத்தப் பட்டது. அதற்கு அமைவாகவே தலைவர் பதவியும், உபதலைவர் பதவியும் தெரிவு செய்யப்பட்டது. கௌரவ செயலாளர் பதவியும், பொருளாளர் பதவியும் இல்லாமற் செய்யப்பட்டது. 1988-ம் ஆண்டு கார்த்திகை மாதத்தில் சமாசத்திற்கு 13 வெளிக்கள உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டனர். இதன் பயனாக சங்கங்களுக்கும் சமாசத்திற்குமான தொடர்பு அதிகரித்ததுடன் சமாசத்தின் நேரடிக் கண் காணிப்பின் கீழ் சங்கங்கள் செயற்பட ஆரம்பித்தன, வளர்ச்சியும் அடைந்தன. மேலும் இக்காலப்பகுதியில் நெதர்லாந்து நிறுவனமாகிய "கீவோஸ்" என்னும் ஸ்தாபனத்டமிருந்து நிதியுதவி சி. க. கூ. ச. சம்மேளனத்தினூடாகக் கிடைக்கப் பெற்று அங்கத்தவர்களுக்கு குறைந்த வட்டியில் வழங்கப்பட்டது. வெளிநாட்டுக் கடன், திட்டக் கடன், என்பனவும் சம்மேளனத்திடமிருந்து பெற்று வழங்கப்பட்டது. வெளி நாட்டுக்கடன் வைப்புத் திட்டமும் இக்காலத்தில் அமுலாகியது.

1989–90–ம் ஆண்டுக் காலத்தில் செயலாற்றுவதற்குத் தலைவராக திரு. ச. ஞானப்பிரகாசம் ... செல்வி க. நல்லதம்பி அவர்களும் தெரிவு செய்யப்பட்டு செயலாற்றி வந்த

னர். இக்காலத்தில் சமாசத்தின் அலுவலக ஊழியர்கள் படிப்படியாக சமாச செயயற்பாட்டு வளர்ச்சிக்கேற்ப அதிகரிக்கப்பட்டது. சமாசத்தின் ஆரம்ப காலத்தில் ஒரு கௌரவ செயலாளருடன் ஆரம்பித்த இச்சமாசமானது பின்னர் ஓர் நியமனப் பணியாளருடனும் அதனை அடுத்து மூன்று பணியாளர்களுடனும் செயற்பட்டு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. சமாசத்தின் முதற்பணியாளரும் நிர்வாகச் செயலாளருமாக செல்வி எம். எம். ரஜனி அவர்கள் 2-10-1982 முதல் 30-06-86 வரை பணி ஆற்றியுள்ளார். அதன் பின் 01-07-86 முதல் 30-06-88 திரு. லோ. வாசிகன் அவர்கள் நிர்வாக காரியதரிசியாக நியமனம் பெற்று பணியாற்றி வந்தார்கள் அதன் பின்னர் 01-07-88 – 28-02-89 வரை செல்வி சிரோன்மணி அவர்கள் மாவட்ட செயலாளராகப் பணியாற்றினார். 01-03-89-ல் திரு. த. நந்தகுமாரன் அவர்கள் மாவட்ட செயலாளராக நியமிக்கப்பட்டு பணி புரிந்தார். இக்காலத்தில் உயர்கல்விக் கடன், மிக வறிய மக்கள் கடன், விதவைகள் கடன் என்பன அறிமுகப்படுத்தப்பட்டு வழங்கப்பட்டு வந்தது. ஏற்கனவே உபகுழுவாக இயங்கி வந்த மகளிர் குழு மாவட்ட ரீதியில் மகளீருக்கான அமைப்பாக பிரத்தியேக நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டு தனியான அமைப்பாக இயங்கி மகளிருக்கான பங்களிப்பை அதிகரிக்கச் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இச்சபை 23-12-89-ல் தெரிவு செய்யப்பட்டு அதன் தலைவியாக திருமதி ந. ஜெகதீசன் அவர்கள் தெரிவு செய்யப்பட்டு செயலாற்றி வந்தனர். இச்சபை ~~மாதாமாதம்~~ மகளிருக்கான பயிற்சி வகுப்புக்களை மாதம் இருமுறை நடாத்தி வந்ததுடன் மகளிருக்கான சர்வதேச மகளிர் தினத்தை வருடந்தோறும் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றது. மகளிர் பங்களிப்பை சிறப்புற செயற்படுத்தியவர்களில் திருமதி வேதவல்லி கந்தையா அவர்களும், திருமதி பூ. கனகரட்ணம் அவர்களும், செல்வி த. நல்லதம்பி அவர்களும், திருமதி ஜே. ஜோசவ் அவர்களும், திருமதி எஸ். பரமானந்தன் அவர்களும் விசேடமாகக் குறிப்பிடத்தக்கவர்கள். 1992ந் திகதி தொடக்கம் மகளீர் குழுத் தலைவியாக திருமதி திருஞானசோதி குணேந்திரன் அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார். 1990-ல் மாணவர் சேமிப்புத் திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டது.

1990-91ம் ஆண்டுக் காலத்திலும் 1991-92ம் ஆண்டுக் காலத்திலும் செயலாற்றுவதற்கு இரு முறையும் தலைவராக திரு. ச. முருகநேசன் அவர்களும், உபதலைவராக திரு. க. மாகாதேவன் அவர்களும் தெரிவு செய்யப்பட்டு செயலாற்றி வருகின்றனர். 01-02-91-ல் இருந்து திரு. ஏ. எம். இராஜகுமார் அவர்கள் மாவட்ட செயலாளராக நியமக்கப்பட்டு பணி புரிந்து வருகின்றார்.

1990-ம் ஆண்டு ஆனி மாதத்தில் ஏற்பட்ட இராணுவ வன்செயலினால் பாதிப்படைந்த எமது அலுவலகம் 1-7-90 முதல் பாதுகாப்பிற்காக நீர்வேலி ப. நோ. கூ. சங்க கட்டிடத்திற்கு இடமாற்றம் செய்யப்பாட்டு இயங்கி வந்தது. பின்னர் 1-1-1991 முதல் மீளவும் யாழ்ப்பாணத்திற்கு தற்போதைய அலுவலகத்திற்கு மாற்றப்பட்டது. 1991ம் ஆண்டில் அமரர் திரு. ச. ஞானப்பிரகாசம் அவர்களின் ஞாபக பரிசுதிய சேமிப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு பரிசிழுப்பும் நடைபெற்று வருகின்றன. இக்காலப்பகுதியில் சி. க. கூ. சங்கங்களின் 8000 விவசாய அங்கத்தவர்களுக்கு விவசாய உள்ளீட்டுப் பொருள் உதவி வழங்கி ஊக்குவித்தது. இவ்வாண்டுகளில் சமாசத்தின் சேமிப்பானது பெருந்தொகையாக அதிகரித்தது. இவ்வாண்டுக் காலமே சமாசம் திறம்பட செயற்பட்ட ஆண்டாகும். தனது இலக்குகளை வெற்றிகரமாக சகல தடைகளையும் தாண்டி அடைந்தது என்பது வெளிப்படையான உண்மை ஆகும். 1990-ல் அபிவிருத்திக்கடன், விழாக்கடன், குறுங்காலக்கடன், இளைஞர் கடன் என்பனவும் அறிமுகப்படுத்தி செயற்படுத்தியதாகும்.

பின்வரிசையில் நிற்பவர்கள் இடமிருந்து வலம் :

செல்வி. சு. ஜெயகௌரி (உதவிச் செயலாளர்) செல்வி. சி. புஷ்பராணி (உதவிச் செயலாளர்)
திருமதி. ஈ. ஸ்ரீவள்ளிநாயகி ( இலிகிதர் ) திரு. வ. விக்கினேஸ்வரன் ( உதவிச் செயலாளர் )
திரு. மு. ஜெகதீஸ்வரன் (உதவிச் செயலாளர்) திரு. யோ. விஜயகுமார் ( உதவிச் செயலாளர் )
செல்வி. ப. மேரிமன்ரேசா ( உதவிச் செயலாளர் ) செல்வி. சு. துஷ்யந்தி ( இலிகிதர் )
செல்வி. க. மாணிக்கவசந்தினி (இலிகிதர் )

# கூட்டுறவு அங்கத்துவக் கல்வி

திரு. பூ. க. இராசரத்தினம் B. A., Dip. in - Education

அதிபர், யாழ் மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி

பணிப்பாளர், யாழ் மாவட்ட சி. க. கூ. சங்க சமாசம்

" கூட்டுறவு இயக்கம் கல்விநடைமுறைகளைக் கையாளும் பொருளாதார இயக்கம் மாத்திரமல்ல, அஃது பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கல்வி சார்ந்த இயக்கம்" என W. P. உவர்க்கின்ஸ் கூறியுள்ளார்.

கூட்டுறவு ஒரு வியாபார நிறுவனமும் அதே நேரத்தில் கல்வி நிறுவனமாகவும் இருக்க வேண்டும். இல்லாவிடின் அது தனது பிரதான பங்கை, சக்தியை இழந்து கொண்டிருக்க நேரிடும். "கல்வி ஒரு தத்துவம், கூட்டுறவில் ஒரு முக்கிய கூறாகும்" கூட்டுறவின் ஏனைய தத்துவங்களை அறிய, கூட்டுறவு அமைப்புக்களை விருத்தியடையச் செய்ய கல்வி முக்கியமாகும், கூட்டுறவு இயக்கம் மக்கள் மனதில் ஆரம்பித்து தொடர்ந்து வளர வேண்டும். கூட்டுறவாளர் இன்றி கூட்டுறவு இல்லை. கூட்டுறவாளர்கள் ஆக்கப்படுகின்றார்கள் கவிஞர்கள்போல் பிறப்பதில்லை. எனவே பல்வகை முறைகளைக் கையாண்டு கூட்டுறவுக் கல்வி வழங்கப்பட வேண்டும்.

கைத்தொழில் விரிவாக்கம் சமூக அமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்திவிடாது எதிர்த்து மக்கள் நன்மையடையக் கூடிய புதிய சமூக அமைப்பை ஏற்படுத்தும்படி றொபேட் ஒவன் மக்களைத் தூண்டினார். அவருடைய இலட்சியங்கள் சரித்திர வாய்க்காலில் உயிர்த்துடிப்புடன் ஓடி கூட்டுறவு இயக்கத்தில் இரண்டறக் கலந்துள்ளது. சமத்துவம், பரஸ்பர உதவி, கல்வி, சமூக உடமை போன்ற உன்னத இலட்சியங்களை வளர்த்து வருகிறது.

வழமையான குறைந்த வருமானம் பெறுகின்ற மக்கள் பொதுவான பொருளாதாரக் குறிக்கோளை அடைவதற்காக தன்னிச்சையாக ஒன்று சேர்ந்து தேவையான மூலதனத்தை ஒன்று திரட்டி ஜனநாயக ரீதியாகக் கட்டுப்பட்ட வியாபார ஒழுங்கமைப்பை நிறுவி, முயற்சிகளின் இடர்களையும் நன்மைகளையும் தாம் ஏற்றுக்கொண்டு அமைக்கப்பட்ட அமைப்பே கூட்டுறவாகும். "மக்கள் ஒவ்வோர் இடங்களிலும் சிறு சிறு சமூகங்களை அமைப்பது வாழ்வதற்கே. அவர்கள் தொடர்ந்து ஒன்று கூடி வாழ்வது நல்வாழ்வை வாழும் பொருட்டே" எனத் தத்துவஞானி அரிஸ்டோட்டல் கூறியிருப்பதை இங்கு நினைவில் கொள்வது பொருத்தம் ஆகும்.

**கல்வியின் தேவை :**

இலங்கையில் கூட்டுறவு இயக்கம் விரும்பத்தக்கது என்பதனால் அறிமுகம் செய்யப்பட்டது. மக்களின் விருப்பம் கேட்டு அறிமுகம் செய்யப்படவில்லை. சாதகமான சூழ்நிலை உருவாக்கப்படவில்லை; எனவே மக்கள் எல்லோரும் கூட்டுறவின் அடிப்படைத் தத்துவங்களை விரும்பி ஏற்கத் தயாரான நிலையில் இருக்கவில்லை. தேவையான கல்வி, பயிற்சி வழங்கப்படவில்லை. சிறந்த தலைமைத்துவம், விசுவாசம், பரவலாகத் தோன்ற வாய்ப்பு ஏற்படவில்லை சுயநலவாதிகளின் தலைமைத்துவம் குழப்பத்தையும் அதிதிருப்தியையும் ஏற்படுத்தின என்று லெயிட்டோ அறிக்கை கூறுகிறது. ஒரு சமூக பொருளாதார அமைப்புக்கு ஒரு பண்பு நிறைந்த பின்னணியும் தத்துவமும் இருக்க வேண்டும். மனித விழுமியங்களை நோக்கி இதற்கெனத் தனித்துவமான அணுகு முறைகள் கையாளப்பட வேண்டும். ஒருவருக்கொருவர் மாறி உதவி புரிவதா என்ற எண்ணக்கரு அலக்ஷியப்படுத்தப்பட்டது. இத்துடன் சிக்கல் நிறைந்த சட்டங்கள், விதிகள், நடைமுறைவிதிகள், சுற்று நிருபங்கள் போன்றவை

முகாமையில் ஈடுபட்டவர்கள் மீது நம்பிக்கை ஏற்படுத்த வழிவகுக்கவில்லை.

இன்று எக்காலத்திலும் இல்லாதவாறு கூட்டுறவு பல மாற்றங்களை எதிர்நோக்கி உள்ளது. நாங்கள் மாற்றங்கள் மத்தியில் வாழ்கின்றோம். அங்கத்தவர்கள் கூட்டுறவின் தொழிற்பாட்டில் பங்கு பற்றுதல் மாத்திரம் கூட்டுறவின் வாழ்வு தங்கியுள்ளது என்ற பிரச்சனையோடு நாம் நிற்க முடியாது. நவீன அமைப்பு முறைகள், முகாமைத்துவ முறைகள், வியாபாரத்தில் போட்டி போடும் முறைகள், உற்பத்தி முறைகள் போன்றவை பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும். கூட்டுறவு நாளுக்குநாள் வளர்ச்சி அடைகிறது. தொடர்ந்து ஆராய்ச்சி நடைபெறுகிறது. கூட்டுறவு வளர்ச்சி ஒரு தொடர்கதை எனவே தான் அங்கத்தவர்கட்கு குறைந்த அளவில் கல்வியும், பயிற்சியும் வழங்கப்படுகிறது, அங்கத்தவர்களை மறந்து கூட்டுறவுப் பொருளாதாரப் பலத்தை ஏற்படுத்த முடியாது. பணித்துறை ஆட்சியில் ( Bequeracy ) ஏற்படுத்தலாம். இதனால் தனியார் தொழில் முயற்சிக்கும் கூட்டுறவு முயற்சிக்கும் என்ன வேறுபாடு இருக்க முடியும்.

கூட்டுறவில் காணப்படும் ஜனநாயகத் தன்மையும் நெகிழ்வுத் தன்மையும் அங்கத்தவர்கள் பல வகைகளில் பங்குகளைப் புரிய வாய்ப்புக்கள் உண்டு. சாதாரண அங்கத்தவர்கள் நெறியாளர்களாக முகாமைத்துவ சபையில் அந்தஸ்து, பின்னணி எப்படியிருந்தாலும் அங்கம் பெற வாய்ப்புகள் உண்டு. வளர்முக நாடுகளில் அனேகமான அங்கத்தவர்கட்கு அறிவு நுட்பங்கள், அனுபவம் குறைவாக உள்ளன. இவர்கள் சிக்கலான பிரச்சினைகளைச் சுலபமாக இனங்கண்டு தீர்வு காணமுடியாத நிலையில் உள்ளனர். இதனால் கூட்டுறவு முயற்சிகள் கூட்டுறவு இலாகா மேற்பார்வை செய்து வருகின்றது.

அங்கத்தவர்களின் நன்மைக்காக கூட்டுறவு ஆரம்பிக்கப்படுகிறது. எனவே அவர்களின் கூட்டுறவு அமைப்பு தொழிற்பாடு பற்றிய அறிவு விசாலமடைய வேண்டும். அத்துடன் கூட்டுறவு விழுமியங்களை விளங்கியவர்களாக இருந்தால் அவர்களின் ஆர்வம் பங்களிப்பு அதிகரிக்க வாய்ப்புகள் உண்டு. ஒரு சமூகத்தின் தனிநபரின் வாழ்வின் தாக்கம் அவனின் மனித இனத்துக்குத்துக்குரிய பங்களிப்பின் அளவில், பயன்பாட்டில் தங்கியுள்ளது. தாக்கத்தின் ஆளமும் தன்மையும் பயன்பாட்டின் மகிமையை பிரதிபலிக்கும் சமூக மாற்றத்தின் தன்மைகளுக்கேற்ப அதன் இலக்குகளை எய்துவதற்கு ஏற்ற வகையில் கல்வியும் சக்திமிக்க சாதனமாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

கூட்டுறவின் தத்துவங்களை விளக்கிக் கொள்வதோடு கூட்டுறவு ஓர் உயிருள்ள சமூகப் பொருளாதார அமைப்பு என்ற உணர்வையும் நம்பிக்கையையும் அங்கத்தவர்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும். இலங்கையில் கூட்டுறவு இயக்கம் ஒரு பொருளாதாரப் புரட்சியை ஏற்படுத்த வேண்டும் என்று லெயிட்லோ அறிக்கையும் கூறுகிறது.

தேவைக்கேற்ற கல்வி :

( Need oriented Education )

தேவைக்கேற்ற கல்வி வழங்கப்பட வேண்டும். அங்கத்தவர்களின் தேவைகளை இனங்கண்டு பகுப்பாய்வு செய்து திட்டமிட்ட முறையில் போதனைகள் வழங்கப்பட வேண்டும். எப்படிக் கற்பிக்க வேண்டும், எவ்வகையான முறைகளைக் கையாள வேண்டும் என்பது முக்கியமாகும். ஒவ்வொரு மனித முயற்சியும் விசேட நுட்பமான அறிவை வேண்டி நிற்கின்றது. சிறப்புத் தேர்ச்சி ( Specialisation ) சில இடங்களில் தேவைப்படுகின்றது. கூட்டுறவு மரபுகளையும் பண்புகளையும் வளர்க்கக்கூடிய தேவை அறநெறிகளைக் கடைப்பிடிக்கும் பண்பு நிறைந்த கூட்டுறவு அங்கத்தவர்களை உருவாக்க வேண்டும். கூட்டுறவின் வளர்ச்சிக்கு உழைப்பது ஒரு சிறந்த பணி. ' என்கடன்பணி செய்து கிடப்பதே' இந்த இலட்சியத்தைக் கடைப்பிடிக்க உதவும். நிறைந்த கல்வியும், கனிந்த சொல்லும் உள்ள கூட்டுறவாளர்கள் உருவாக வேண்டும். பாடசாலைகளில் கூட்டுறவுச் சூழல்களை உருவாக்க வேண்டும். கூட்டுறவுத் தத்துவம் அதன் நடைமுறையிலும் ஆர்வமுள்ள ஆசிரியர்கள் தேவை. சர்வகலாசாலைகளிலும் கூட்டுறவு ஒரு பாடநெறியாக இடம்பெற வேண்டும். பல அபிவிருத்தியடைந்த நாடுகளில் சர்வகலாசாலைகளில் பட்டப்படிப்புகளுக்கு பாடநெறியாக உண்டு. அமெரிக்காவில் 40 மாகாணப் பல்கலைக்கழகங்களில் உண்டு.

கூட்டுறவு அங்கத்தவரும் மாறும் காரணியும் .

ஓர் அங்கத்தவர் இம்மாற்றங்கள் மத்தியில் குழப்பமடையலாம். அதற்காக மாற்றங்கள் தேவையில்லை என்று கூறமுடியாது மாற்றங்கள் இன்றி அபிவிருத்தி கிடையாது. தகுதி குறைந்த அங்கத்தவனுக்கு வினாவாகக் கற்பிக்க முனைந்தால் அவரால் கிரகிக்க முடியா

மல் போய் விடலாம். எனவே சிறந்த முறைகளைக் கையாள வேண்டும்.

தெளிவான இலக்குகள் :

அங்கத்தவர் கல்விக்கு தேவையான வளங்களும் வழிகளும் இருக்கவேண்டும். பாரிய கல்வித் திட்டம் அங்கத்தவர்கள் தேவையறிந்து தயாரிக்கப்படாத கல்வித் திட்டம் அடிமட்டத் தேவைகளை அறிந்து தயாரிக்கப்படாத கல்வித் திட்டம். ஒரு சில உத்தியோகத்தர்களினால் தயாரிக்கப்படும் கல்வித் திட்டம், பொருத்த மற்றவை ஆகும்: உள்ள ஆர்வத்தையும் பங்களிப்பையும் மழுங்கடிக்கச் செய்யும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய கசப்பான உண்மையாகும். வளங்கள் நன்கு பிரயோகிக்கப்பட வேண்டும். திட்டத்தின் பொருத்தப்பாடும், தரமும், இலக்குகளின் தெளிவும் முக்கியமானவை அக்கறை அற்று இருக்கும் படித்தவர்களையும் கவரக்கூடிய முறையில் திட்டம் அமைய வேண்டும்.

அங்கத்துவ முன்னிலைக் கல்வி :
( Pre-member Education )

கூட்டுறவை ஆரம்பிக்க முன் அங்கத்துவ கூட்டுறவுக் கல்வி ஆரம்பிக்கப்பட வேண்டும். அங்கத்துவம் பற்றி விளங்காமல் கூட்டுறவில் நுழைய அனுமதிப்பது புத்திசாலித்தனமாகாது சில ஆரம்ப விழாக்களையும். குறுகிய காலத்தில் மூடு விழாக்களையும் கண்டுள்ளன. பொதுவான கூட்டுறவு அறிவை வழங்கினால் அவர்கள் விருப்பத்துடனும் விளக்கத்துடனும் அங்கத்தவர்களாகச் சேருவார்கள். அவர்கள் மத்தியில் சந்தேகம் வெறுப்பு ஏற்படாது தடுக்கப்படுகின்றது. கிளைக்குழுவோ அல்லது பணிப்பாளர் சபைகளிலோ அங்கம் பெற விரும்புவர்கள் இரண்டு மூன்று தடவைகள் ஆவது கூட்டுறவுக் கருத்தரங்குகளில் பங்குபற்றிச் சான்றிதழ்கள் பெற்றவர்களாக இருப்பது விரும்பத்தக்கது.

அங்கத்துவ கல்வியைப் பெறுவதற்கு
அணுகுமுறைகள் :

கூட்டுறவு அங்கத்தவர்கள் பெரும்பாலும் முதியவர்கள். அவர்கள் அபிப்பிராயங்கள், கருத்துக்கள், அனுபவங்கள் உடையவர்கள். இவற்றை நாம் நெறிப்படுத்தி, வழிப்படுத்தி கற்றல் நிலையை உருவாக்க வேண்டும். கூட்டுறவு முயற்சிக்கு பங்கு பற்றுதலும், கற்றலில் பங்கு பற்றும் முறைகளும் இன்றியமையாதவை. பங்கு பற்றுபவர்கள் தாமாகவே தமது அனுபவங்கள், கருத்துக்கள், நுட்பங்கள் வாயிலாக நல்ல ஒரு கற்றல் நிலையை உருவாக்கி பங்குபற்றுபவர்கள் மத்தியில் ஆர்வத்தையும், விளக்கத்தையும் ஏற்படுத்த முடியும். குழுக்களாகப் படித்தல் ( Group Discussion ) ஆராய்தல், பங்கு ஏற்று நடித்தல் ( Roleplay ), கல்விச் சுற்றுலா, விவாதங்கள், சம்பவ ஆய்வு ( Case Study ) மதிப்பீடு ( Evaluation ), பின்னூட்டல் (Feed back) நிரல்படுத்தல் ( Ranking Exercise ), திட்டங்கள் தயாரித்தல் போன்ற இன்னோரன்ன முறைகள் பங்கு பற்றும் கற்றல் முறைக்கு உதவியாக இருக்கும். அங்கத்தவர்களைத் தீர்மானம் எடுப்பதிலும் முன்னேற்றமடையச் செய்வதிலும், பொதுவான கூட்டுறவுத் தொழிற்பாடுகளிலும், பங்குபெறத் தூண்டும் அங்கத்துவக் கல்வித் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. குழுக் கலந்துரையாடல், சம்பாசித்தல், கட்புல செவிப்புல சாதனங்கள் உபயோகித்தல், வரைபடங்கள், ஐக்கியத்தை விளக்க ஒரு கட்டுத்தடி, நாட்டுப் பாடல்கள், பழமொழிகள் பாரம்பரிய நடைமுறைகள் போன்றவற்றைக் கொண்ட நிகழ்ச்சி நிரல் தயாரிப்பது சாலவும் பொருத்தமாகும். கூட்டுறவு சம்பந்தமான பத்திரிகைகள், சஞ்சிகைகள், சலனப் படங்கள், வானொலிப் பேச்சுக்கள், தொலைக்காட்சி நிகழ்வுகள், விழாக்கள், போட்டிகள். பொருட்காட்சிகள், நேர்முகமாகவும் மறைமுகமாகவும் அங்கத்தவர்கள் கல்வியை சிறப்பாக வளர்க்க உதவும். படிப்புக் குறைந்த அங்கத்தவர்கட்கு எண்கணிதம். நிலுவை இயந்திரங்களைப் பிரயோசனப்படுத்தல், பற்றுச்சீட்டுகள், சுலபமான கணக்கு வைக்கும் முறைகள், நிதிக்கூற்று போன்றவற்றைக் கற்பித்தல் அவசியமானவை என்ற கருத்தை சர்வதேசக் கூட்டுறவு ஒன்றியம் முன்வைத்துள்ளது. செயல் அமர்வுகள் ( Work Shep ) அங்கத்தவர்களை ஈடுபடச் செய்து அவர்களின் இலக்கை அடைய வழிவகுக்கும். உதாரணமாக செயர் அமர்வுகள் நான்கு மாதங்களுக்கு ஒருமுறை, இரண்டு வருடங்களுக்கு தொடர்ந்து ஒழுங்கு செய்யப்பட்டால் அங்கத்தவர்கள் படிப்படியாக பிறர் உதவியின்றி தாமாகவே திட்டமிடவும், செயற்படவும் கற்றுக்கொள்வார்கள். விசுவாசமாகவும் நேர்மையாகவும் அர்ப்பண உணர்வோடு அங்கத்தவர்களாகக் கடமையாற்றுவார்கள். மோசடிகள் அற்றுப்போய்விடும்.

பல அபிவிருத்தி அடைந்த நாடுகளிலே மேற்படி அணுகுமுறைகள் கையாளப்பட்டு வருகின்றன. எனவே எமது நாட்டிலும் அங்கத்தவர்கட்கு பொருத்தமான கல்வி மேலும் வழங்கப்பட்டால் பலரைக் கூட்டுறவுத் துறையில் பங்குபற்றி ஆர்வத்தோடு உழைக்கச் செய்யலாம். கல்வியாகிய கருவியின் கடமையோ கரையற்றது. அது காலத்துக்கும் இடத்துக்கும் ஏற்ப ஒவ்வொரு கடமைக் கூறுகளிலும் முக்கியத்துவம் பெற்று வருவதைக் கல்வி வரலாறு எடுத்து இயம்புகிறது.

யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்க ளின் சமாசம் தனது 10வது ஆண்டு நிறைவினை கொண் டாடும் இவ்வேளையில் அதனை பெருமிதத்துடன் வாழ்த்து வதில் பெரு நிறைவடைகின் றோம்.



தென்மராட்சி கிழக்கு ப. நோ. கூ.
சங்கம்
கொடிகாமம்

உள்ளூர் உற்பத்திக்கு ஊக்கமளிப்போம்!
எமது வளங்களை நாமே பயன்படுத்துவோம்!!

தரமான
சுவையான
பனை வள உற்பத்திகள்

- பனம் பாணி
- பனை வெல்லம்
- கல்லாக்காரம்
- ஒடியல்
- புழுக்கொடியல்
- பனாட்டு

இவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

பருத்தித்துறை-புலோலி தெ. ப. பொ. உ, வி கூ. ச.
மந்திகை - புலோலி

# சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் உன்னத வளர்ச்சியில் மகளிர் பங்கு

சமூக நிறுவனங்களின் பங்கில், சமூக பொருளாதார அபிவிருத்தியைக் கட்டியெழுப் பும் பணியில் கூட்டுறவு இயக்கம் ஒரு முக்கிய இடத்தை வகித்துள்ளது. அரசியல், சமூக பொருளாதார தடைகளின்றிப் பல வழிகளிலும் மக்கள் பங்குபற்றும் ஒரேயொரு சமூக நிறுவனம் கூட்டுறவு இயக்கமே. கூட்டுறவில், ஒற்றுமை அடிப்படையில் மக்கள் தமது பங்களிப்பைச் செலுத்துவதோடு மக்களின் நோக்கங்கள், கருத் துக்கள் கவனத்திற் கொள்ளப்படுகின்றது. அத்துடன் இது ஜனநாயக அடித்தளத்தைக் கட்டி எழுப்பும் நிறுவனமாக மக்கள் தீர்மானங் களை எடுக்க வழி செய்வதோடு செயற்பாடு களை நிர்வகிக்கும் தன்மையினையும் கொண் டுள்ளது. கூட்டுறவு அமைப்பில் ஒரு நபருக்கு ஒரு வாக்கு என்ற அடிப்படையில் மட்டுமன்றி அங்கத்தவர் அமைப்பு, கொள்கைத் திட்டமிடல், மேற்பார்வை, முகாமை யாவற்றிலும் ஜனநாய கம் கோரப்படுகிறது. மக்களின் நேரடித் தேவைகளை அறிந்து செயற்படுவதனால் சுய உதவி வாய்ப்புக்கள், சமூக மாற்றம், சமூகக் கல்வி மேம்பாடு என்பனவற்றின் ஊடாக பாரிய சமூகப் பங்களிப்பை வழங்குகின்றது.

உலகின் பல நாடுகளிலும் கூட்டுறவு இயக்கம், அந்நாடுகளின் அபிவிருத்தியில் பெரும் பங்காற்றியுள்ள சில நாடுகளில் பொதுத்துறை, தனியார் துறைக்கு அடுத்தபடியாக கூட்டுறவுத் துறை முக்கியம் பெறுகின்றது. கூட்டுறவு அரசாங்கத் தலையீடின்றிச் செயல்படல் அவசியம். சில நாடுகளில் அரசாங்கமே கூட்டுற வைக் கட்டுப்படுத்துகின்றது. இதனால் கூட்டுற வின் ஜனநாயகத் தத்துவங்கள் அளிக்கப்பட்டு, அரசாங்க முகவர் நிலையங்களாகக் கூட்டுறவு செயல்பட ஆரம்பிக்கும். இலங்கையின் கூட்டுறவு வரலாற்றில் இன்றுமிக முக்கிய இடத்தை சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் வகித்து வருகின்றன. இவ்வமைப்பை மேலும் வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உண்டு. எமது நாட்டின் பொருளாதார அமைப் பிற்கும், அபிவிருத்திக்கும் சி. க. கூ. சங்க முறை ஏற்றதாக உள்ளது. ஆகவே தான் உலக நாடுகள் இத்திட்டத்திற்கு ஆதரவு அளித்து வருகின்றன. எந்த ஒரு தொண்டர் அமைப்பும் கொண்டிராத சிறப்பு அம்சங்களை இக்கூட்டுறவு அமைப்பு கொண்டுள்ளது. ஆகவே அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் சமூக பொருளாதார அபிவிருத் திக்கு இன்றியமையாத அமைப்பு கூட்டுறவு அமைப்பாகும்.

இலங்கையில் கூட்டுறவு வரலாற்றில் சி. க. கூ. சங்கங்களின் பணி மிக உன்னத மானது. கடந்த 77 வருடங்களாக இலங்கையில் கிராமிய மக்கள் மத்தியில் பரவி, மக்கள் இயக்கமாக வளர்ந்துள்ளது. 1906-ம் ஆண்டு சி. க. கூ. சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்ட போதி லும் 1911-ம் ஆண்டில் கூட்டுறவுச் சட்டவாக் கத்தின் பின்னரே சங்கங்களுக்கு சட்ட அந்தஸ்து கிடைத்தது. கண்டி மாவட்டத்தின் தும்பறை வெளி என்ற இடத்தில் ஆரம்பிக்கப்பட்ட முத லாவது சி. க. கூ. சங்கத்துடன் இதன் வரலாறு தொடங்குகின்றது. அன்று சிறு விவசாயக் கடன் வழங்குவதே இதன் முக்கிய பணியாக இருந்தது. 1940-ல் 1302 சங்கங்கள் நாடுபூராவும் பதிவு

செய்யப்பட்டன. 2-ல் உலக யுத்தம் ஆரம்ப காலம் வரை சி. க. கூ. சங்கங்களின் கணிச மான வளர்ச்சியை அவதானிக்க முடிகின்றது. யுத்தம் ஆரம்பமாகியதும், அத்தியாவசியப் பொருட்களின் சீரான விநியோகத்தை மைய மாகக் கொண்டு நுகர்வோர் சங்கங்கள் விருத்தி யடைந்தன. இதனால் சி. க. கூ. சங்கங்கள் கவனிப்பாரற்றுப் போயின. 1958-ல் பலநோக் குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பம் ஆகி அரசாங்கக் கடன் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டன. இதன் வளர்ச்சியும் சி க. கூ. சங்க வளர்ச்சியைப் பாதித்தது. 1978-1988 காலப்பகுதியில் சி. க. கூ. சங்கங்கள் மீண்டும் புத்துயிர் பெற்று மாவட்ட ரீதியில் சி. க. கூ. சங்கங்கள் ஒன்றிணைக்கப்பட்டன. இதன் பின்னர் மாவட்ட சமாசங்கள் ஆரம்பிக்கப்பட்டு தேசிய ரீதியில் சி. க கூ சங்கங்கள் இணைந்து சங்க சம்மேளனம் 1980-ல் உருவாகியது 1978க்குப் பின்னர் சி. க. கூ. சங்கங்களின் நடவடிக்கைகள் புதிய பரிமானங்களை எடுத்தன. இன்று இலங்கையில் ஏறத்தாழ 6000 பதிவு செய்யப்பட்ட சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கங்கள் உள. 27மாவட்டங்களிலும் சிக்கன கடன் கூ. சமாசங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1988-ல் 60.000 அங்கத்தவர்கள் இச்சங்கங்களில் அங்கத்தவராகவும் இருந்தனர். சேமிப்பு நிதி 400 மில்லியனானவும் உயர்ந்துள்ளது. யாழ் மாவட்டத்தில் 398 சி. க. கூ. சங்கங்கள் உள.

இச்சங்கங்களின் வளர்ச்சியில் மகளிர் பங்கு மகத்தானதாகும். ஏனைய மாவட்டங்களை விட யாழ் மாவட்டத்தில் சி. க. கூ. சங்கங்களில் பெண்கள் வகிக்கும் பங்கு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. 1982-ல் 42 சி. க. கூ. சங்கங்களாக இருந்ததன் எண்ணிக்கை 1988-ல் 355 ஆக உயர்ந்துள்ளது. அங்கத்தவர் தொகையிலும் மகளிர் பங்குபெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. 1983-ல் 800 ஆக இருந்த மகளிர் அங்கத்துவ தொகை 1992-ல் 22,000 ஆக அதிகரித்தது. இச்சங்கங்களில் மகளிரின் உயர் பங்களிப்பை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது. மகளிர் தமது குடும்பப் பொறுப்புக்கள் மத்தியிலும் சி. க. கூ. சங்கப் பணிகளில் பங்குதாரராகி சங்க வளர்ச்சிக்கு உதவுவது பாராட்டத்தக்கது. மகளிரை இவ்வகையில் ஊக்குவித்து அவர்கட்கு தன்னம்பிக்கையை வளர்க்க சி. க. கூ. சங்கம் எடுக்கும் நடவடிக்கைகள் வரவேற்கத்தக்கதே. ஆரம்ப காலங்களில் குறிப்பாக 82 - 86 வரை யிலான காலப்பகுதியில் சி. க கூ. சங்கங்களில் ஆண்களின் பங்களிப்பே அதிகமாகக் காணப் பட்டது. 1986-ல் இருந்து 87, 88 ம் ஆண்டுகளி லிருந்து பெண்கள் பங்களிப்பு 80% மாக அதிக ரித்துக் காணப்பட்டது. இவ்வதிகரிப்பிற்கு பல காரணிகள் உண்டு. சி. க. கூ. சங்கங்களில் மகளிர் பங்களிப்பை இணைக்க வேண்டுமெனத் தீவிரமாகப் பிரச்சாரம் செய்யப்பட்டது. கூட்டுறவு இயக்கத்தில் நீண்ட கால அனுபவம் மிக்கவராகி விளங்கிய அமரர் ச. ஞானப்பிர காசம் அவர்கள் இப்பிரசாரத்தில் பெரும் பங்காற்றி வெற்றியும், அவ்விலக்கை அடைய வழி செய்தார். மேலும் யாழ் மாவட்டத்தில் படித்த பெண்கள் மத்தியில் காணப்பட்ட வேலை வாய்ப்பின்மை, பொருளாதார நெருக்கடிகள், இவ்வாறு பெண்களை இச்சங்களில் இணைக்க இலகுவாயிற்று. மேலும் நாட்டில் நிலவிய போர்க்காலச் சூழ்நிலை காரணமாக நிலவிவரும் பொருளாதார தாக்கங்கள், மட்டுமன்றி ஆண் களின் பங்களிப்பும், ஈடுபாடும் கூடக் கணிசமான அளவில் குறைவடையத் தொடங்கியது அதிக மான ஆண்கள் போர்ச் சூழ்நிலை காரணமாக வெளிநாடுகட்கு இடம் பெயர்ந்தமை, தவிர்க்க முடியாத இறப்புக்கள், இளம் விதவைகளின் பெருக்கம் என்பனவும் காரணங்களாக அமைந் தன. இந்தவகையில் சி. க. கூ. சங்கங்களில் அதிகரித்து வரும் பெண்களின் பங்களிப்பு மூலம் சங்கங்கள் அளப்பரிய சேவைகளை கிராம மட்டத்தில் செயலாற்ற உதவியுள்ளது மகளிரின் எண்ணிக்கை அதிகரிப்பை அடுத்து சங்கங்களில் மகளிர் அமைப்புக்கள் உருவாக்கப்பட வேண்டு மென்ற கோரிக்கைகள் எழுந்தன. இவ்வமைப்பு ஒன்றை உருவாக்க முன்னணியில் நின்று உழைத் தவர்களுள் திருமதி வேதவல்லி கந்தையா அவர்கள் குறிப்பிடத்தக்கவர். 1986-ல் தற்காலிக மகளிர் அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டு திருமதி நவநீதன் ஜெகதீசன் அவர்கள் அதன் தலைவியாகத் தெரிவு செய்யப்பட்டார். இதனைத் தொடர்ந்து 1989-ல் மகளிர்குழுக்கள் விஸ்தரிக்கப்பட வேண்டியதன் தேவையை உணர்ந்து மாவட்ட ரீதியில் மகளிர் குழுக்கள் தெரிவு செய்யப்பட்டு அவற்றின் பிரதிநிதிகள் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலிருந்து குழுக்களைத் தெரிவுசெய்து பின்னர் பிராந்தியக் குழு அங்கத்தவர்கள் சேர்ந்து மாவட்ட மகளிர் குழு உருவாக்கப்பட்டது. நாணயமாகச் செயற் படும் தன்மை பெண்களிடம் கூடுதலாகக் காணப்பட்டதனுல் பெண்கள் சி. க. கூ. சங்கங் களில் கூடுதலாக ஈடுபடுத்தப்பட்டனர்.

சேமிப்புக் பழக்க வழக்கங்களை ஊக்கு விக்கும் விசேட பண்புகளை சி. க. கூ. சங்கங்கள் கொண்டுள்ளதால் மகளிரூடாக இவற்றை இலகுவில் செயற்படுத்த முடிந்தது. முன்னேறி

வரும் எமது சமூதாயத்தில் சமூகத்திற்கேற்ப வாழ்க்கையை மாற்றியமைத்துக்கொள்ள எமக்கு உதவுவது நமது சேமிப்புப் பணமே! ஆகவே எமது வருமானத்தில் ஒரு பகுதியை சேமித்தல் மூலம் தனிமனித வாழ்வு சிறப்புற்று நாட்டின் எழிற்சி என்பன ஏற்பட வழியுண்டு.

சி. க கூ. சங்கங்களில் கூடுதலான பெண்கள் ஈடுபட்டமையினால் அவர்கள் மத்தியில் இச் சேமிப்பு பழக்கம் ஊக்குவிக்கப்பட்டது. சி. க. கூ. சங்கங்கள் வறிய மக்களுக்கு ஏற்ற திட்டங்களைச் செயல்படுத்த நிதி அவசியம். இந்நிதியைச் சங்கங்கள் அங்கத்தவர் பிரவேசக் கட்டணம், வைப்புப் பணம், இலாபங்கள் மூலம் பெறுகின்றன. ஆகவே குறைந்தநிதி அமைப்பு முறையில் பல சிறு செயற்றிட்டங்களை ஆக்குவதற்குச் சிறந்த முகாமை இங்கு அவசியம். ஆகவே மகளிருக்குக் கல்வி, பயிற்சித் திட்டங்கள் அவசியம். இச்சவால்களை ஏற்றுக் கொண்டு பல பயிற்சிப் பாசறைகளையும், தலைமைத்துவக் கருத்தரங்குகளையும் யாழ் மாவட்ட மகளிர் குழுக்கள் ஒழுங்கு செய்து நடாத்தி வருகின்றன. மாதம் இருமுறை பிராந்திய ரீதியில் இடம் பெறும் கருத்தரங்குகள் மூலம் மகளிருக்குச் சங்கத்தின் தத்துவங்கள் கடன்வழங்கு முறைகள், திட்டங்கள், நிதி நிர்வாகம் போன்ற விடயங்களோடு மகளிர் சுய வேலை வாய்ப்புக்காக வேலை வாய்ப்புக்களும் ஆராயப்படுகின்றன. சி. க கூ. சங்கங்கள் இன்று நாட்டில் நிலவும் பொருளாதார நிலையில் புதிய சங்கங்களை ஏற்று பல துறைகளில் ஈடுபட முன்வந்துள்ளன. இப்புதிய பொறுப்புக்கள், மேலும் சங்கங்கள் புதிய பரிமாற்றத்தில் வளர்ச்சியுற வழிவகுக்கும். குறிப்பாக விதவைகளுக்கான கடன் திட்டங்களை புனர்வாழ்வுத் திட்டங்கள் போன்றன இன்று சி. க. கூ. சங்கங்களின் செயற்பாடுகளில் இடம் பெற்றுள்ளன.

மேலும் இச்சங்கங்கள் பெண்கள் மத்தியில் வேலைவாய்ப்பு வசதிகளைப் பெருக்க வழிவகைகளைச் செய்துள்ளது ஒருவர் பெறும் கடனைக் குறித்த நேரத்தில் தவறுது மீளச் செலுத்தி திரும்பவும் கடன் பெறும் வாய்ப்பு உண்டு. தேசிய வீடமைப்புச் சபை சி. க. கூ. சங்கங்களினூடாக வீடமைப்புக் கடன் திட்டங்களைச் செயல்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. மகளிர் அமைப்புக்களுக்கு மேலதிக வருமானம் பெறக் கூடிய பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இலங்கையில் கைவினைப் பொருள் உற்பத்தியில் 65% பெண்களே ஈடுபட்டுள்ளனர். எமது பிரதேசத்தில் பனம் பொருட்களிலிருந்து பல உற்பத்தித்திறன் மிக்க கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்ய முடியும். இவை மட்டுமன்றி மேலதிக வருமானம் பெறக்கூடிய தேனீ வளர்ப்பு, விலங்குப் பண்ணை, கோழிப் பண்ணை போன்ற செயல்திட்டங்களை மகளிர் அமைப்புக்கள் செயல்படுத்துதல் அவசியம். மேலும் விவசாய உற்பத்திகள் பெருகும் காலத்தில் அவ்வுணவுப் பொருட்களைப் பாதுகாத்து பதனிட்டு வைப்பதன் மூலம் பொருளாதாரத்தில் பெரும் பங்கை வகிக்கின்றனர்.

மக்களின் சுய முயற்சி மேம்படுத்தப்படுவதற்கு முதல் அவசியமாகின்றது. இதனை நிவர்த்தி செய்யும் முகமாக இன்று சி. க. கூ. வங்கிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அரச வங்கிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது சி. க. கூ. வங்கிகளின் சிறப்பு மேலோங்கி நிற்கின்றது. மக்களின் சேமிப்பு நிலையை உயர்த்தவும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி கடன் தேவைகளை குறைந்த வட்டியில் வழங்கவே துரிதமாக இவ்வங்கிகள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் சி. க. கூ. சங்கங்கள் சேமிப்பு வைப்புக் கணக்குகளை அறிமுகம் செய்துள்ளன. அங்கத்தவர்கள் குறிப்பாக பெண்கள் இதன் மூலம் கூடிய பலனைப் பெறுவதோடு நிதி சுழற்சியடையவும் வழி செய்கின்றது. மேலும் சிறுவர்களின் பாதுகாப்புக் கல்வி மேம்பாட்டைக் கருத்திற்கொண்டு சிறுவர் சேமிப்பு வைப்புக்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இன்று தனியாக மகளிர் நடாத்தும் 84க்கு மேற்பட்ட சங்கங்கள் யாழ் மாவட்டத்தில் காணப்படுகின்றன.

இவ்வாறு சிறந்த முறையில் மகளிர் பங்களிப்பிற்கு உதவி வழங்கும் சி. க. கூ. சங்கங்கள் மகளிர் பங்களிப்பை மேலும் ஊக்குவிக்கும் பல திட்டங்களில் முனைப்பாக ஈடுபடுதல் அவசியம். பெண்களுக்கு ஆளுமை, வளர்ச்சி, போசாக்கு, பிள்ளை பராமரிப்பு வசதிகள் போன்றவற்றிலும் உதவலாம். நாட்டின் தேவையை உணர்ந்து பரந்த ரீதியில் திட்டங்களைச் செயல்படுத்தல் அவசியம். தேவையான நேரத்தில் கடன் வழங்கல், கடன் பெற்ற நோக்கை அடையச் செய்தல், சரியான நேரத்தில் அறவிடுதல், சங்க வளங்களை அதிகரித்தல், கல்வி யூடாகக் கூட்டுறவு அம்சங்களை வளர்த்தல் என்பன இவ்வமைப்பை மேலும் பலப்படுத்தி ஜனநாயகத்திற்கு சமூகமான அடித்தளத்தை அடைய வழியமைக்கும்.

**சரோஜா சிவச்சந்திரன்** எம். ஏ.
பணிப்பாளர்,
மகளிர் அபிவிருத்தி நிலையம்.

## அமரர் திரு.

# சண்முகம் ஞானப்பிரகாசம் அவர்கள்

## "ஒப்பாரும் மிக்காரும் இல்லாத் தலைவர்"

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று".

என்ற பொய்யாமொழிக்கேற்ப அமரர் திரு. ச. ஞானப்பிரகாசம் அவர்கள் அரச பொது எழுதுநர் சேவை மூலம் மக்கள் சேவையை ஆரம்பித்து இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியெய்திய பின் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவி ஆணையாளராகக் கல்முனை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் மன்னார் ஆதியாம் மாவட்டங்களில் பணியாற்றிய பின் வடக்கு கிழக்கு மாகாணங்களின் மூத்த உதவி ஆணையாளராகக் உயர்வு பெற்று சேவையாற்றி அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றவர்.

இவரது அரச சேவைக் காலத்தில் அலுவலுடன் தொடர்பான கூட்டுறவுச் சேவை மூலம் நலிவுற்ற கஷ்டமுறும் மக்களுக்குப் பணியாற்றுவதற்கு திடசிந்தனை கொண்டிருந்தார். இலங்கையில் கூட்டுறவு இயக்கம் தோன்றி 75 ஆண்டுகளைப் பூரணப்படுத்தி விட்டது. உற்பத்தித் தேவைகளுக்கு கடன் வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட சங்கங்களுடன் கூட்டுறவின் தோற்றுவாய் ஆரம்பமாகி பண்டசாலை, விளைபொருள், உற்பத்தி விற்பனவு கடற்றொழிலாளர், பாற்பண்ணை, போக்குவரத்து நெசவாளர், வங்கி வைத்தியசாலை மற்றும் அனைத்து தொழில் முயற்சிகளுக்குமான கூட்டுறவுச் சங்கங்கள் தொழிற்பட்டன. இலங்கையின் கூட்டுறவு வளர்ச்சியில் மகுடம் தரித்தாற் போல் வடபகுதிக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைந்திருந்தன. இலங்கையில் கூட்டுறவு இயக்கம் காலத்திற்குக் காலம் மாறுபடும் அரசியல் சூறாவளியினால் சிக்குண்டிருந்தமையே சுயேச்சையாகவும், சுதந்திரமாகவும் சர்வதேச அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கூட்டுறவு கொள்கையின் அடிப்படையில் துரித வளர்ச்சி காணமுடியாதிருந்தது எனலாம்.

1971-ல் கூட்டுறவு இயக்கம் மறுசீரமைக்கப்பட்ட போதும் 1977 – 78-ம் ஆண்டில் கோடிக்கணக்கான ரூபாய்களை அரசு விவசாயக் கடனாக வழங்கியபின் விளைபொருள் உற்பத்திக் கடன்கள் நிறுத்தப்பட்டது.

கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி வழங்கிய தேசிய வங்கியான மக்கள் வங்கியும் சிக்கன கடனுதவு சங்கங்களுக்கு கடன் வழங்க மறுத்த நேரத்தில் கூட்டுறவாளர்களிடம் இருந்தே நிதியைத் திரட்டி ஓர் வங்கிச் சேவையை நடாத்த யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவாளர்களுக்கு 1982-ல் உதவி ஆணையாளராகப் பணிபுரிந்த காலத்தில் வேண்டுகோள் விடுத்தார் அமரர் திரு. ச. ஞானப்பிரகாசம் அவர்கள். யாழ்ப்பாணம் மாவட்டத்தின் அனைத்துக் கிராமங்களிலும் அவரது காலடி பதிந்தது. சேமிப்பதின் அவசியம் சிறு அமைப்பான சிக்கன கடனுதவு சங்கங்களுக்கு புத்துயிர் அளிக்கவேண்டி, கிராமங்கள் தோறும் கூட்டுறவுக் கொள்கையின் ஒன்றான உறுப்பினர்கட்கான கல்வி வளர்ச்சியில் போதிய கவனத்தை அன்னார் மேற்கொண்டார். தனது ஓய்வு நேரமெல்லாம் கூட்டுறவின் வளர்ச்சிக்காக செயலாக்கினார். இதன் பலாபலனே 1982-03-02-ந் திகதியில் யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் என்ற நாமத்தில் தாமே பதிவாளரின் கடமைகளை நிறைவேற்றி சமாசத்தினை அன்றிருந்த இளைப்பாறிய உதவி ஆணையாளர் அமரர் திரு. க. சி. பொன்னுத்துரை அவர்களினால் வரைவுபெற்ற துணை விதியுடன் பதிவு செய்தார்.

தமிழில் இக்கூட்டுறவு அமைப்பிற்கு யாழ் மாவட்ட ஐக்கிய நாணய சங்கங்களின் சமாசம் வ-து எனவும் பெயர் வழங்கலாயிற்று. இவ் அமைப்பின் மூலம் அமரர் திருமதி வேதவல்லி கந்தையா அவர்களின் அயராத முயற்சியினால் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வாழ் அனைத்து மகளிரும். கூட்டுறவுச் சேமிப்பை வளர்க்க ம சி. க. கூ. சங்கங்களை உருவாக்கினார். 1920, 1930, 1940களில் பதிவு பெற்றிருந்த வரலாறு

கிறப்பிக்கும்` சங்கங்களும் புத்துயிரூட்டப்பட்டு செயற்படலாயின.

இந்நிலையில் இலங்கையின் ஏனைய மாவட்டங்களிலும் சி. க. கூ. ச. சமாசங்களும் தேசிய ரீதியிலான சம்மேளனமும் தோன்றின. யாழ்ப்பாணம் மாவட்ட சமாசத்திற்கும் ஏனைய மாவட்ட சமாசங்களுக்கும் பதிவு செய்யப்பட்ட துணைவிதிகளில் மாறுபாடு காணப்பட்டது. யாழ்ப்பாணம் மாவட்ட சமாசம் அமரர் திரு. ச. ஞானப்பிரகாசம் அவர்களின் வழிகாட்டலில் சேமிப்பினை வளர்ப்பதில் துரித வளர்ச்சி கண்டது. உறுப்பினர்கள் தங்கள் கடன்தேவைகளை நாணயமாகப் பெற்று மீளச் செலுத்தலாயினர். இக்காலகட்டத்தில் இலங்கையில் உள்நாட்டுப் போர்நிலை ஆரம்பமானது. போர்க்கால நிகழ்வுகளிலும் சி. க. கூ. சங்கங்கள் வெற்றி நடைபோட்டன. 10 இலட்சம் வீடமைப்புக்காக கடனுதவுவதில் அரசும் சி. க. கூ சங்கங்களை மேலும் பதிவு செய்வதில் அக்கறை கொண்டு இருந்தது.

உள்நாட்டுப் போர் நிலை காரணமாகச் சம்மேளனம் வெளிநாட்டுக் கூட்டுறவு நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு நிதியுதவிகளைப் பெற்றது, இந்நிலையில் அமரர் திரு. ச. ஞானப்பிரகாசம் அவர்கள் இளைப்பாறி தமது சேவையை சம்மேளனத்திற்கும், யாழ்ப்பாணம் மாவட்ட சமாசத்திற்சம் நல்கினார். சம்மேளனத்துடன் இணைந்ததன் மூலம் வடக்குக் கிழக்கில் அனைத்து மாவட்டங்களிலும் சி க கூ. ச. சமாசங்களை உருவாக்கினார். சம்மேளனத்தின் உள்ளார்ந்த நோக்குகளையும் கண்டறிந்தார். தேசிய நிறுவனங்களுக்கே உரித்ரான ஒடுக்குமுறைப் பண்பாடுகளைச் சுட்டிக் காட்டி வடக்கு கிழக்குக்கு எனப் பெற்ற நிதி வடக்குக் கிழக்கு அல்லாத பகுதிகளுக்குச் செல்வதனைத் தடுத்து, நிறுத்த, குரல்கொடுக்க முயன்ற வேளையில் முரண்பாடு காரணமாகச் சம்மேளனத்துடனான தொடர்பை நீக்கிக் கொண்டார்.

இந்நிலையில் ஏனைய மாவட்ட சமாசங்களுக்கான துணைவிதி போன்று யாழ்ப்பாணம் மாவட்ட சமாசத்தினதும் துணைவிதி அமைய வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. மக்கள் மத்தியில் நிறைந்த அனுதாபத்தினையும், செல்வாக்கையும் பெற்றிருந்த போதும் திணைக்களத்தின் செயல்பாடு அமரர் திரு. ஞானப்பிரகாசம் அவர்களின் சேவையை மதிப்பிடவில்லை. இந்நிலையில் உறுப்புரிமைச் சங்கங்களின் பெரும்பான்மைப் பலத்தைப் அமரர் திரு. ஞானப்பிரகாசம் அவர்கள் பெற்று புதிய துணைவிதிகளை ஏற்று பதிவு செய்ததுடன் 1988-ல் தலைமைப் பதவியும் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட சி. க. கூ. ச. சமாசம் வரையுள்ளது. எனச் சரியான தமிழ் பதத்தினையும் சமாசம் பெயர் கொண்டுள்ளது.

இவரது தலைமையில் மாணவர் சேமிப்பு, நிலையான வைப்பு, மகளிர் சேமிப்பு வங்கிச் சேவை, சுயதொழில் வாய்ப்புக்கான முன்னோடித் திட்டங்கள் ஆகியன செயல்ரூபத்தில் முன்வைக்கப்பட்டு வேறெந்த மாவட்டங்களிலும் இல்லாத அளவில் செயலாக்கமும் பெற்றது.

தன்னலமற்றதும், இடையறா முயற்சியும், விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கும் கொண்டவர் கூட்டுறவாளர்களை நேசித்து அன்பாகப் பழகி அரவணைத்தவர் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற வாக்கிற்கிணங்க சமூகத்தில் சமரசசன்மார்க்க நெறியில் வாழ்ந்து காட்டியவர். எந்தவொரு அபிவிருத்தி முயற்சிக்கும் ஒரு வழியைப் பின்பற்றக்கூடாது, எதற்கும் இரு வழியைப் பின்பற்ற வேண்டும் எனக் கூறும் பெருந்தகை, சம்மேளனம், சமாசங்களின் தேவைகள் அனைத்தும் தங்களூடாகப் பெறப்பட வேண்டுமென எண்ணங் கொண்டுள்ள போது கனடிய ஸ்தானிகருடன் தொடர்பு கொண்டு சமாசத்திற்குத் தேவையான இரட்டிப்பு இயந்திரம் (ரோனியோ) போன்றவைகளைப் பெற்றுக் கொடுத்தவர். தலைமைப் பதவியை அன்னாருக்கு வழங்க வேண்டுமென அன்பர்கள் பலர் முனைந்த போது அதற்கு மாற்றுத் திட்டத்தினை வகுத்து உதவி ஆணையாளர் வெற்றி கண்டபோது, மனம் சலிக்காது சாதாரண நிர்வாக உறுப்பினராக இருந்து செயலாற்றியவர். பதவி கிடைத்தால் ஒரு சிலர் இரு கொம்பு முளைத்தது போல் செயலாற்றுகின்றனர் என எடுத்துக் கூறும் பெருந்தகை தாம் தலைமைப் பதவியை ஏற்றபோது நிர்வாகத்திற்குரிய கடமைகளை உபகுழுக்களின் ஆலோசனைகளைப் பெற்று நிறைவேற்றக் கூடியவாறாக, கல்வி, கடனவழங்கல், ஆளணி, நிதி மகளிர் குழு, வறியமகளிர் கடன், சுயமுயற்சிக் கடன், வீடமைப்புக் கடன், மரண சகாயம், உட்துறை கணக்காய்வு, திட்டமிடலும் மதிப்பீடும் ஆகிய உபகுழுக்களை அமைத்து அதிகாரப் பரவலாக்கலை நடைமுறைப்படுத்தினார் இளம் சமுதாயத்தினர் கூட்டுறவுத் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்க வேண்டுமென வலியுறுத்திக் கூறியே இவர், சமாசத்தின் தலைமைத்துவத்தை இளைய தலைமுறையினரிடமே ஒப்படைத்ததன் இலட்சியத்தை நிறைவேற்றி ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தலைவராக அவர் பூதவுடல் மறைந்த போதும் புகழுடன் ஒவ்வொரு கூட்டுறவாளர்கள் மனதிலும் இடம் பெற்றுள்ளார்.

அவரின் பணியைப் போல் நாம் ஒவ்வொருவரும் பணிபுரிவோமானால் கூட்டுறவின் மூலம் கிடைத்தற்கரிய பல செல்வங்களையும் நம் தமிழர் சமுதாயம் பெறும் என்பதற்கு ஐயமோ அச்சமோ இல்லை.

"கூட்டுறவு நாட்டுயர்வு"

**மு. க. முருகையா,**
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்.

## ★ பத்தாண்டு மலரில் புகழ்வீசும்

★ வித்தான சிக்கன கூட்டுறவின் சிறப்போங்க
வாழ்த்துகிறோம். ★

---

மாநகரில் தழைத்தோங்கி இருபத்தொரு வருட காலமாக

**யாழ் நகரில் மக்களுக்கு அயராது சிறப்புற சேவையாற்றி வரும்**

# யாழ். ப. நோ. கூ. சங்கம்

மக்களின் அடிப்படை தேவைகளை நன்குணர்ந்து மேலும் தனது சேவைகரங்களை உயர்த்தி உள்ளது

---

தேனீர் உட்பட
அறுசுவை உணவு வகைகள்,
சிற்றுண்டிகள்
உங்கள் மன நிறைவு பெற
அள்ளி வழங்குகிறது

## யாழமுதம்

உழைப்போர் உணவகம்
ஸ்ரான்லி வீதி, - யாழ்ப்பாணம்

---

**அனலாக்கி வழங்குமிடம்**

## ( விறகுகாலை )

ஸ்ரான்லி வீதி, - யாழ்ப்பாணம்

நிறைதகனத்திற்கும் அதிகூடிய சக்தி
பெறவும், குறைந்த விலையில்
தரமான விறகுகளை, பலதரப்பட்ட வகையில்
சில்லறையாகவும் மொத்தமாகவும்
பெற்றுக்கொள்ள சிறந்த இடம்

---

நவநாகரீக ஆடைகளையும்
பாடசாலை உபகரணங்களையும்
அத்தியாவசிய
உணவுப்பொருட்களையும்
சிரமமின்றி பெற்றுக்கொள்ள அரிய இடம்

## வானவில்

மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

---

யா. ப. நோ. கூட்டுறவு

## பதிப்பகம்

மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

அழைப்பிதழ், சஞ்சிகை, புத்தகம்
அலுவலக படிவங்கள், போன்றன அழகாகவும்
விரைவாகவும் விரும்பிய அளவில் விரும்பிய
நிறத்தில் அச்சுப் பதித்துக்கொள்ளலாம்

---

நம்பிக்கையான நண்பன் உங்கள் வாழ்க்கையின்
ஒளிவீச சேமிப்பு விளக்கை
துலக்கமடையச் செய்கிறது
உங்கள் பெயர்களில் எமது வங்கியில் சேமிப்புக்
கணக்கை உருவாக்கி பயனடையுங்கள்

யாழ். ப. நோ. கூ சங்கம்

## கிராமியவங்கி

291, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

---

**யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவு சங்கம்**

291, ஸ்ரான்லி விதி, யாழ்ப்பாணம்

யாழ். மாவட்ட சி. க. கூ. ச. சமாசத்தின்

# முன்னாள் தலைவர்கள்



திரு. V. K. சுப்பிரமணியம்
( 1982 — 1983 )
( 1984 — 1986 )



திரு. V. பொன்னம்பலம்
( 1983 — 1984 )




திரு. பொ. செல்வரட்ணம்
( 1986 — 1988 )



அமரர். திரு. ச. ஞானப்பிரகாசம்
( 1988 — 1990 )

## பயிற்சி வகுப்பு



கல்வி விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் நடைபெறும்
உதவிச் செயலாளர்கள் பயிற்சி வகுப்பு

## மகளிர் குழு உறுப்பினர்கள்



இடமிருந்து வலம் :

திருமதி. ர. நாகராஜா, திருமதி. ப. சரோஜினிதேவி,
திருமதி. கு. திருஞானசோதி ( தலைவி )
திருமதி. ஜோ. ஜெபமணி, திருமதி. ம. ஞானசோதி
திருமதி. கே. சண்முகசுந்தரம்

# கூட்டுறவில் மகளிர் பங்கு

சமுதாயம் என்பது பல குடும்பங்களைக் கொண்ட ஒரு தொகுதியாகும். இதில் குடும்பத்தின் ஆணிவேராக இருந்து குடும்பம் என்னும் அமைப்பைப் பேணிக் காப்பவள் பெண்ணாகும். அத்தகைய பெண்கள் இணைந்து சமூகத் தொண்டாற்றும் போது ஒரு மேம்பட்ட சமூகம் உருவாக வாய்ப்பு ஏற்படுகிறது. இத்தகைய ஒரு மேம்பட்ட சமூகத்தை உருவாக்க வேண்டுமென்ற உயர் இலட்சியத்துடன் மகளிர் குழுக்கள் உருவாக்கப்பட்டன. எமது நாடு உட்பட பல நாடுகளில் மகளிர் குழுக்கள் கூட்டுறவுத் துறையில் அதிசேவைகளைப் புரிந்து வருவதை யாவரும் அறிவர்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு பெண்கள் பரவலாக பகிரங்கமாகச் சேவை செய்தமை மிகக் குறைவாகக் காணப்பட்டது. காலம் செல்ல பெண்களின் பங்களிப்புப் பற்றிச் சிந்திக்க சில காரணிகள் ஏதுவாக இருந்தன. சமயம், இலக்கியம் போன்றவை பெண்களின் முக்கியத்துவத்தை உணர்த்தின. தாய்மை மதிப்புக்குரியது. வணக்கத்துக்குரியது என்பதை பல சமயங்கள் எடுத்துக் காட்டின: குழந்தைகளைப் பெற்றெடுத்து வளர்க்கத்தான் பெண், அடுப்படியில் வேலை செய்யத்தான் பெண் என்ற நிலைப்பாடு தொடர்ந்து நிலைக்க முடியவில்லை. துணிவு விடாமுயற்சி, பெருந்தன்மை. தலைமைத்துவப் பண்புகள் பெண்களை விழிப்படையச் செய்தன ஏனைய நாடுகளில் நடைபெற்ற பெண் விடுதலை இயக்கங்களின் நிகழ்வுகள் காலவோட்டத்தில் இலங்கையிலும் பெண் தலைமைத்துவத்தில் அதிகதாக்கத்தை ஏற்படுத்தியது.

பெண்கள் கல்வித்துறையில் முன்னேற்றம் அடைந்து வருகிறார்கள். ஆனால் கிராமங்களில் பெண்களின் கல்வி வளர்ச்சியும் விழிப்புணர்ச்சியும் மேலும் விருத்தியடைய வேண்டும். எனினும் கணிசமான அளவு பெண்கள் சமூக முன்னேற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது பாராட்டுக்குரியதாகும். இந்த ஈடுபாடு குறிப்பாகக் கூட்டுறவுத் துறையில் அதிக பலாபலன்களைப் பெற வழிவகுக்கும். என மூதிய கூட்டுறவாளர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். சமூகத்தில் ஆண், பெண் உறவு, கணவன் மனைவி உறவு, குடும்பங்களில் காணப்படும் தன்மை, சொத்துரிமை பற்றிய கொள்கைகளில் மாற்றங்கள் ஏற்படும்.

யாழ் மாவட்டத்தில் கூட்டுறவில் மகளிர் பங்கு அடிமட்டத்தில் ஏற்படச் சில பெரியார்கள் பாடுபட்டு வந்துள்ளனர். இவர்களில் காலம் சென்ற திருமதி வேதவல்லி கந்தையாவை நாம் குறிப்பிட்டாக வேண்டும். பெண் அடிமை தீரும் வரை மண் அடிமை தீருதல் முயற்கொம்பே எனக் கூறித்தான் வாழ்ந்த கிராமத்திலேயே மகளிர் குழுக்களை ஆரம்பித்து வைத்தார். மக்கள் விழிப்படைய வேண்டுமானால் பெண்கள் உட்பட அனைவரும் விழிப்படைய வேண்டும். சி. க. கூ. ச. சமாசம் மகளிர் குழுக்கள் அமைப்பதற்கு வேண்டிய ஆலோசனைகளும் வழிவகைகளையும் வகுத்துக் கொடுத்தது.

மகளிர்க்கான கருத்தரங்குகள், பயிற்சி வகுப்புக்கள். கல்வி உத்தியோகத்தரின் வழிகாட்டலுடன் பல இடங்களிலும் நடைபெற்று வருகின்றன. பெண்களின் தலைமைத்துவப் பண்புகள் விருத்தியடைய மகளிர் குழுவின் ஒன்றியம் முனைந்து வருகின்றது. கூட்டுறவுக் கொள்கைகளை அமுலாக்கி இக்குழுக்கள் பல பணிகளில் ஈடுபட்டு வருகின்றன கூட்டுறவு மகளிர் குழுக்கள் பல பிராந்தியங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. சில கிராமியப் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதற்கு ஆர்வத்துடன் உழைக்கின்றன. பெண்கள் கூடுதலாக இருப்பதால் இவர்கள் புது மலர்ச்சியுடன் சேவையாற்ற முன்வர வேண்டும். இலங்கையில் கிராமிய பொருளாதார வளர்ச்சிக்குப் பெண்களின் பங்களிப்பு அதிகம் உண்டு என ஜேர்மன் தேசக் கூட்டுறவாளர் செல்வி பெற்றா றொபீச் கூறியுள்ளார். மீனவப் பெண்களின் பங்கு குறிப்பிடத் தக்க அளவு முன்னேற்றம் அடைந்துள்ளது எனவும், கூட்டுறவு இயக்க வரலாற்றில் ஓயாத கடல் அலைகள் போல் கடமையாற்றுகிறார்கள். எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நுகர்ச்சிப் பொருட்களைப் பெரும்பாலும் பெண்களே கொள்வனவு செய்கிறார்கள். சிறந்த பொருட்களையும் அவசியமான பொருட்களையும் தரம் அறியும் திறமை அவர்களிடம் உண்டு. எனவே பலவகைப்பட்ட கூட்டுறவு நிறுவனங்களில் அவர்களின் பங்களிப்பு மேலும் அதிகரிக்கப்பட வேண்டும்.

பெண் அபிவிருத்தியின் மையம் என்று விளங்கிக் கொண்டால் மட்டும் போதாது. ஆண் குறிப்பாகக் கணவன் பெண்களைக்

கூட்டுறவுச் சேவையில் ஈடுபட வழிவகைகள் செய்து கொடுக்க வேண்டும். பரம்பரை இடைவெளி நீங்க வேண்டும். பெண்கள் தொழில் புரியலாம், ஊதியம் பெறலாம் ஆனால் ஏன் சமூக சேவையில் ஈடுபடக் கூடாது. மேலைத்தேய நாடுகளில் பெண்களின் பங்களிப்பு பன்மடங்கு வளர்ந்து கொண்டே செல்கின்றது. மனித இனத்தின் ஒரு பாதியை இருளில் விட்டு எந்த நாடாவது உதயத்தைக் காண முடியுமா. சொத்துரிமை வர்க்கங்களின் சித்தாந்தங்களால் சிறைவைக்கப்பட்ட பெண் இனத்தின் சிந்தனைகள் சுதந்திரத்தை தரிசிக்கத் தொடங்கிவிட்டன.

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்தலால் அறிவோங்கி இவ்வையகம் தழைக்கும்" என்றார் பாட்டுக்கோர் புலவன் பாரதி.

யாழ் மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையில் மகளிர் சேவையில் திருப்புமுனை ஏற்பட்டுள்ளது. அதிக அங்கத்தவர்கள் சேர்ந்துள்ளார்கள். திட்டங்களும் செயற்பாடுகளும் அதிகரிக்கின்றன. சி. க. கூ. சங்க சமாசமும், யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபையும் வேண்டிய ஆதரவையும் ஊக்கத்தையும் அளித்து வருகின்றன.

இன்று 23 000 அங்கத்தவர்களைக் கொண்ட மகளிர் குழு யாழ் மாவட்ட சமாசத்தில் உண்டு. சமூக நலன், சமுதாயப் புனர்வாழ்வு, உள்ளூர் உற்பத்தியைப் பயன்படுத்தி உற்பத்தியில் ஈடுபடுதல், சேமிப்பை விருத்தி செய்தல், இளம் மகளிர் வாழ்வுத் திட்டம் தேவையென உணர்ந்து அவர்களின் செயற்திறனையும் ஆக்கத்திறனையும் வெளிக்கொணரவும், கலை பண்பாட்டு வளர்ச்சியை மேம்படுத்தல் போன்ற இன்னோரன்ன பல நோக்கங்களுக்காக மகளிர் குழுக்கள் உழைத்து வருகின்றன. கூட்டுறவு மகளிர் குழுக்கள் இம்முயற்சியில் வெற்றிநடை போடுவதை யாரும் மறக்க முடியாது.

மனித சமூகத்திற்கு மதிப்பளிக்கும் பண்புக் கூறுகள் பல உள. அவற்றுள் ஒன்றே மனித சமுதாயத்திற்கு, குறிப்பாகக் கூட்டுறவு சமுதாயத்திற்கு பாரதி கண்ட புதுமைப் பெண்ணிற்கு இலக்கணமாய் பல வகைகளிலும் சேவை புரிந்து வரும் மகளிர் குழுக்களை பாராட்டாமல் இருக்க முடியாது. அவர்கள் சேவை நன்கு பெருகி கூட்டுறவு சமுதாயத்தை மேலும் மேம்பாடு அடைய வேண்டுமென வாழ்த்துகிறேன்.

**திருமதி தி. குணேந்திரன்,**
மகளிர் குழுத் தலைவி,
யாழ் மாவட்ட சி. க. கூ. ச. சமாசம்.

---

1. ஒற்றுமையாய் உழைத்திடுவோம் - நாட்டில்
   உற்ற துணைவராய் வாழ்ந்திடுவோம்.

2. கூட்டுறவு ஒரு மென்மையான மலர்
   அது பொருத்தமான மண்ணில் தான் வளரும்.

3. சிறிய எலும்பின் பாரிய அறிவு நாளைக்கெனச் சேமிப்பு
   சிறிய எலும்புகள் ஒன்று சேர்ந்து பெரிய கோபுரங்களைக் கட்டுதல்.

4. உன்னால் முடிந்ததைத் திறமையாகச் செய்
   பின்னால் வரும் விமர்சன மழை உன்னைத் தாக்காமல்
   பார்த்துக்கொள்.

5. நாங்கள் அனுமதி அளித்தாலே ஒழிய
   எமது அமைதியை எவரும் குலைத்து விட முடியாது.

யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு
கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின்

## 10வது ஆண்டு

நிறைவு விழாவை முன்னிட்டு
எமது நல் வாழ்த்துக்கள்

**அளவெட்டி-மல்லாகம் ப. நோ. கூ. சங்கம்**

கூட்டுறவாளர் வீதி. அளவெட்டி

---

## 10வது ஆண்டு

## விழாவைக் கொண்டாடும்

## யாழ் மாவட்ட சி. க. கூ. சங்க

## சமாசத்துக்கு

## எமது உளங் கனிந்த
## நல்வாழ்த்துக்கள்

**காரைநகர் பலநோக்குக் கூ. சங்கம், காரைநகர்.**

**சாவகச்சேரி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம்**

**சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட தரமான பனை வெல்லம், பனம் கற்கண்டு, பனம் சீனி, பாணி என்பனவற்றை எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.**

பனம் சார் கைப்பணி உற்பத்திப் பொருட்களையும் உணவுப் பொருட்களையும் நியாய விலையில் பெற்றுக்கொள்ள

**● இன்றே விஜயம் செய்யுங்கள் ●**

**புற்பதி விற்பனை நிலையம்**

இல: 2 பஸ் நிலையம்
சாவகச்சேரி.




யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களின் சமாசம்

**10வது வருட**

நிறைவு விழாவை கொண்டாடும் வேளையில் அதனை வாழ்த்துவதில்

**மகிழ்ச்சியடைகிறோம்**



**மானிப்பாய் கோவிற்பற்று ப. நோ. கூ. சங்கம்**
**மானிப்பாய்**



யாழ்மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்க


சமாசத்தின் பத்தாவது ஆண்டு நிறை

## விழா வாழ்த்து

ஏழிலான தமிழீழத்தில் பல கைத்தொழிலில் ஈடுபட
வழிகாண முடியாது வாடிய அந்நிலையில்
மக்கள் துன்புற்றுச் செயலிழந்து நின்றார்கள்
மொழி பேசும் தமிழர் நாம் படும் இன்னல் கண்டு
சமூக பொருளாதார கலை கலாச்சாரத்தினை
மேம்படுத்தும் நோக்கங்கொண்டு
சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின்
சமாசம் நல்லதொரு அமைப்பின் கீழ்
தரு உதவி ஆரம்பம் எண்பத்திரெண்டாம் ஆண்டு
மருவிய பங்குனி மாதம் இரண்டாம் நாளே !

செயல்திட்டம் அமைத்து அதை செயல்படுத்தும் தமிழர்
உயர்ச்சிபார் என்று கொடி காட்டி சுயதொழில்
வாய்ப்புக்கடன். உயர்கல்வித் திட்டக்கடன்
மேலும் பல திட்டக்கடன் அழித்தே
ஐயமேன் இதோ வாரீ வறுமைக் கடன் கொடுப்பனவும்,
சால நமை அணுகி வரும் சாவுக்கு ஒரு கடனும்
நாளிலத்தில் நாம் என்று தலை நிமிர்ந்து செல்ல
கால நிலை அறிந்து கை கொடுத்த சமாசத்தால் நாம் உயர்வோம்!

சான்றுமை மிகுந்தோங்க வட பிராந்திய
சுருட்டுத் தொழிலாளர் சங்கம் ஈன்றெடுத்த
நிர்வாக சபை எங்கள் மனமுவந்தே
பதினோராம் ஆண்டில் கால் எடுத்து வைக்கும்
யாழ் மாவட்ட சிக்கனக் கடன் வழங்கு
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமே !
நீ மாற்றாண்டு காலம் வாழ்கவென
வாழ்த்துகின்றோம் வாழ்க ! வாழ்கவே !



**வடபிராந்திய சுருட்டுத்**

**தொழிலாளர் சங்கம்**

நிர்வாக சபையினர்

10வது ஆண்டு நிறைவைக்
கொண்டாடும்
யா/மா. சி. க. கூ. ச சமசத்திற்கு
எமது உளங்கனிந்த
வாழ்த்துக்கள்

பல்வேறு கடன் திட்டத்தின் கீழ்
அங்கத்தவர்களுக்கு
சேவையாற்றுகிறது
சாதாரண சேமிப்பு, மாணவர் சேமிப்பு
அங்கத்தவரல்லாதோர் சேமிப்பு
நிலையான வைப்பு ஆகிய சேமிப்பு
திட்டங்களாக உடையது

உரும்பிராய் கற்பக விநாயகர்
மகளிர் ஐக்கிய நாணய சங்கம்
உரும்பிராய்

பதிவு எண் J/1722 பதிவு திகதி 13-5-83

10 ஆண்டு நிறைவை
கொண்டாடும் சி. க. கூ. சங்க
சமாசத்தை பல்லாண்டுகாலம்
வாழ்ந்து
சேவை ஆற்ற வேண்டுமென
ஆசிகூறி வாழ்த்துகிறோம்



ஞானப்பிரகாச சி. க. கூ.
சங்கம்
மண்டைதீவு


☎ 24339

அருள் முருகன் நகைமாளிகை
ARUL MURUGAN JEWELLERS
தங்க வைர நகை வியாபாரம்

96/1, Kasturiar Road,
JAFFNA.

96/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.






உறுதியும் உத்தரவாதமும் உள்ள 22 கரட் தங்க நகைகளைப்
பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்



## மாவட்டச் செயலாளர்



திரு. அ. மை. இராஜ்குமார்
( யாழ். மாவட்ட சி. க. கூ. சங்கங்களின் சமாசம் )

# சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க வரலாற்றுப்பாதையில் யாழ் மாவட்ட சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின்

# ஒரு தசாப்தகால அபிவிருத்தி

**அ. மை. ராஜ்குமார்** பி பி. ஏ.
மாவட்ட செயலாளர்,
யாழ் மாவட்ட சி. க. கூ. சங்க சமாசம்

கூட்டுறவுத் துறையில் வரலாற்றை முன்னோக்கிப் பார்க்கும் போது முதன்முதல் 1852-ம் ஆண்டு இங்கிலாந்தில் கூட்டுறவுச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதன் பின் 1865-ல் அமெரிக்காவிலும், 1867-ல் ஜேர் மனியிலும், 1900-ம் ஆண்டில் ஜப்பானிலும், 1904-ம் ஆண்டு இந்தியாவிலும், 1911-ம் ஆண்டு இலங்கையிலும் அறிமுகப்படுத்தப் பட்டதை அறியக்கூடியதாக உள்ளது. கூட்டுறவுச் சட்ட அறிமுகப்படுத்தலுக்கு முன்பே சட்ட வாக்கம் இன்றி 1844-ம் ஆண்டு இங்கிலாந்தில் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் முதன்முதல் உதயமாகியது. ஜேர்மனியில் முதன்முதல் 1850-ம் ஆண்டில் மட்டுப்படுத்தப்பட்ட சிக்கன கடனுதவு சங்கங்கள் உருவாக்கப்பட்டன. இச் சங்கங்களின் மூலகர்த்தாவாக திரு. சூள்ஸ் டெலிக்ஸ் இருந்து இச்சங்கங்களை வழிநடத்தி செயற்படுத்தி வந்தார். 1862-ம் ஆண்டில் மட்டுப்படுத்தப்படாத சங்கங்கள் உருவாக்கப் பட்டு திரு. றைபேசன் என்பவரினால் வழி நடத்தப்பட்டு வந்தது. திரு. றைபேசன் அவர் களின் மட்டுப்படுத்தப்படாத சங்கங்களே சிறந்தது என்ற அடிப்படையில் மட்டுப்படுத்தப் படாத சி. க. கூ. சங்கங்கள் கிராமப் புறங்களில் நல்வளர்ச்சி பெறத்தொடங்கின. ஏனைய நாடுகளிலும் இச்சங்கங்கள் பரவத் தொடங்கி அங்கங்கும் வளர்ச்சியடைந்தன. ஜப்பானில் 1900-ம் ஆண்டில் கடன் வழங்கு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இந்தியாவில் 1904-ம் ஆண்டில் சி. க. கூ. சங்கங்கள் ஆரம்பிக்கப் பட்டன. இலங்கையில் முதன்முதல் 1906-ம் ஆண்டில் கண்டி மாவட்டத்தில் தும்பறைவெளி என்னும் இடத்தில் சட்டரீதியற்ற பதிவு செய்யப்படாத சி. க. கூ. சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையில் முதலாவது பதிவு செய்யப்பட்ட கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம் 1912-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 13-ம் திகதி மாத்தறை மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட வெல்ல படபத்து கிராமத்தின் சங்கமாகும்.

இலங்கையில் கூட்டுறவு வரலாற்றைத் தொடக்கி வைத்த பெருமை சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களுக்கே உரியதாகும். கிராமிய மக்கள் மத்தியில் மாத்திரமின்றி நாடுபூராகவும் இது ஓர் மக்கள் இயக்கமாக இன்று பரிணமித்துள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. 1906-ம் ஆண்டில் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டாலும் கூட 1911-ம் ஆண்டு கூட்டுறவுச் சட்ட வாக்கத்தின் பின்னே சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு சட்டரீதியான அந்தஸ்து கிடைத்தது எனலாம். ஆரம்பகாலம் முதல் இன்றுவரை சி. க. கூ. சங்கங்கள் எதிர் கொண்ட இடர்பாடுகளையும், பெற்றுக்கொண்ட முன்னேற்றங்களையும் காலத்தின் தன்மைகளையும் சி. க. கூ. சங்கங்களின் நிலையையும் கருத்திற் கொண்டு சி. க. கூ. சங்க வரலாற்றினை நான்கு பகுதிகளாகப் பிரித்து நோக்கலாம்.

1. 1906-ம் ஆண்டு தொடக்கம் 1941-ம் ஆண்டு வரை தனிப்பட்ட ரீதியான வளர்ச்சியை அடையாளம் காணுகின்ற விஸ்தரிப்பு காலம்.
2. 1942-ம் ஆண்டு முதல் 1977-ம் ஆண்டு வரை வீழ்ச்சியடைந்த காலம் - பின்னோக்கிச் செல்லும் பலவீனமடைந்த காலம்.
3. 1978-ம் ஆண்டு முதல் 1981-ம் ஆண்டு வரை புத்துயிர் பெறும்காலம் ஊக்குவிக்கும் காலம்.
4. 1982-ம் ஆண்டு முதல் 1992 வரை அபிவிருத்திப் பாதையில் முன்னேறி பயிற்சியளிப்பு நிறுவன சக்தி பெற்றுக் கொண்ட காலம்.

## 1. 1906 - 1941 :

இலங்கையில் முதல்முதல் ஆரம்பித்த சி. க. கூ. ச. சங்கம் சிறிய கிராமிய விவசாயிகளுக்கு கடன் வசதி ஏற்படுத்தும் நோக்கம் கொண்டதாகவே இருந்தது. யாழ்ப்பாண மாவட்டத்தை பொறுத்தவரை முதல்முதலாகப் பதிவு செய்யப்பட்ட ஐக்கிய நாணய சங்கமானது 1916 - 09 - 05-ந் திகதி கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கரவெட்டி ஐக்கிய நாணய சங்கமாக JE / 62 / 5. 9. 1916 என்னும் பதிவிலக்கம் பெற்றுப் பதியப்பட்டது. இச்சங்கத்தில் ஆரம்பகால அங்கத்தினராக 20 பேர் இருந்தனர். இதன் ஆரம்பகால தலைவராகவும், சங்க ஸ்தாபகராகவும் அதன் வழிகாட்டியாகவும் இராசவாசல் முதலியார் திரு. க சின்னத்தம்பி அவர்கள் பணியாற்றி உள்ளார். இவரது சேவை 17 - 06 - 1961 வரை நீடித்திருந்தது. இச்சங்க ஆரம்ப காலச் செயலாளராக திரு. கா. வேலாயுதம் அவர்களும் செயலாற்றியுள்ளார். தற்சமயம் இச்சங்கத்தில் 90 அங்கத்தவர்கள் இருக்கின்றனர். இச்சங்கத்தின் தனிநபர் உச்சக் கடன் எல்லை ரூ. 800/- ஆகும். இச்சங்கம் தனித்துத் தனது சொந்த மூலதனத்துடன் 75 வருடங்களாக இயங்கிவருகின்றது என்னும் பெருமைக்குரியதாகும்.

1940-ம் ஆண்டு வரையும் இலங்கையில் 1302 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு இருந்தது. கூட்டுறவு இயக்கம் ஆரம்பமான காலம் தொட்டு கிராமிய அபிவிருத்தி தொடர்பான முக்கியபணி கூட்டுறவுக் சங்கங்களிடம் ஒப்படைக்கப்பட்டது விவசாயத்தை விருத்தி செய்வதற்காக நிதிநிறுவனங்களின் பொறுப்பை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட விவசாய வங்கிக்குழு 1911-ம் ஆண்டில் கூட்டுறவுக் கடனுதவுச் சட்டத்தைச் சிபார்சு செய்தது. கடனுதவு சங்கங்களின் முகப்புரையில் அவற்றின் நோக்கங்களாக சிக்கனம், சுயஉபகாரம் விவசாயிகள், சிறு அளவிலான கைத் தொழிலாளர்கள், இதர மட்டுப்படுத்தப்பட்ட வருமானம் உள்ளவர்களின் மத்தியில் கூட்டுறவை விருத்தி செய்தல் ஆகிய விடயங்கள் குறிப்பிடப் பட்டுள்ளது. சி. க. கூ. சங்கங்கள் ஆரம்பிக்கப் பட்ட ஆரம்பகாலம் தொடங்கியே விவசாயம், கிராமிய ஏழை மக்கள். கிராமிய அபிவிருத்திப் பணிகள் என்பவற்றிற்காக வைப்புக்களைத் திரட்டும் போது கூடிய கவனம் செலுத்தப்பட்டதோடு இந்நிறுவனங்களின் நோக்கங்களிலும் மேற்கூறிய விடயங்களுக்காக கூடுதலான முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. அதன்படி இந்நாட்டில் உருவாகிய, சமூகத்தோடு தொடர்புடைய முதலாவது நிதிநிறுவனம் சி. க. கூ. சங்கம் என்பது தெளிவாகின்றது. அரச ஆதரவு பெற்ற விவசாய விருத்திக்கான கடன் திட்டங்கள் 1947-ல் ஆரம்பிக்கப்படும் வரை கிராமியப் பிரிவில் கடன் தேவைகளை பூர்த்தி செய்த, கிராம மட்டத்தில் செயற்பட்ட ஒரேயொரு சிறப்பான நிறுவனம் சி. க. கூ. சங்கங்களாகும். இவ்வியக்கம் ஆரம்ப கட்டத்தில் அரச உதவியுடன் செயற்பட்டமையாலும் அங்கு கணிசமான அளவு விஸ்தரிப்பு ஏற்பட்டுள்ளது.

## 2. 1942 - 1977 :

1942-ம் ஆண்டுவரை இந்நாட்டு கூட்டுறவு இயக்கத்தில் முதலிடத்தையும் பெற்றிருந்து இவ்வாண்டு இறுதியில் வரையுள்ள, வரையற்ற சி. க. கூ. சங்கங்களின் எண்ணிக்கை 1786 ஆக அதிகரித்திருந்தது. 2-ம் உலகமகா யுத்தத்தின் பின்னர் நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்க அமைப்புக்கு கூடிய கவனம் செலுத்தப்பட்டமையால் சி. க. கூ. சங்க இயக்கம் சிறிதளவு பின்னோக்கிச் சென்றது. சங்க எண்ணிக்கையும் அங்கத்தவர் களும் பெருமளவு குறைந்தன. 1942-ல் ஆரம்பித்த 2வது உலக மகாயுத்தம் நாடுகளுக்கிடையே அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப் பாட்டை உருவாக்கியது. அதன் காரணமாக மிக வேண்டப்படுவதான இவ்வத்தியாவசியப் பொருட்கள் தேவைகளை மக்களுக்குக் கொடுத்துதவிப் பூர்த்தி செய்ய வேண்டியது அரசாங்கங்களின் மிக முக்கியமானதும் அவசரமானதுமான கடமையாகக் கருதப்பட்டது. இதன் அடிப்படையில் இலங்கை அரசும் தம் தேசமக்களது அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் நுகர்ச்சிச் சங்கங்களை உருவாக்கும் பணியில் ஈடுபடலாயிற்று. நாட்டின் பல பாகங்களிலும் நுகர்ச்சிச் சங்கங்கள் உருவாக்கப்பட்டு அத்தியாவசியப் பண்டங்கள் இந் நுகர்ச்சிச்சங்கங்களூடாகவிநியோகம்செய்யும்பணி துரிதப்படுத்தப்பட்டது. 1942-ல் 845ஆக இருந்த நுகர்ச்சிச் சங்கங்கள் 1945-ல் 4004 ஆக உயர்ந்தது என்பதனை ஆராயும்போது அரசு இக்கால கட்டத்தில் நுகர்ச்சிச் சங்கங்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் வழங்கியிருக்கிறது என்பது புலனாகின்றது. கூட்டுறவு இலாகாவின் ஒத்துழைப்பினால் நுகர்ச்சிச் சங்கங்கள் துரித கதியில் வளர்ந்து செல்ல சி. க. கூ. சங்கங்கள் அக்கால கட்டங்களில் கவனிப்பாரற்று நலிவுற ஆங்காங்கே ஒரு சில சங்கங்கள் நல்ல விடாமுயற்சி கொண்ட கூட்டுறவாளர்களினால் எதிர்நீச்சலுடன் வழி நடத்தப்பட்டு வந்தன. 1958-ம் ஆண்டு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு அரசாங்கத்தின் கடன் திட்டங்களை நடை முறைப்படுத்தும் அமைப்புக்களாக இயங்கத்

தொடங்கின. இந்நடவடிக்கையினாலும் சி. க கூ. சங்கங்களினது வளர்ச்சி மேலும் வெகுவாகப் பாதிக்கப் பட்டது. அங்கத்தவர்களிடமிருந்து சிக்கன சேமிப்பாகப் பெறப்படுகின்ற சிறிய வைப்புத் தொகைகளைக் கொண்டு வழங்கப் படுகின்ற கடன் வசதிகளை விட பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மூலமாகக் கிடைக்கின்ற கடன் வாய்ப்புக்கள் கூடுதலாகக் காணப்பட்டதனால் சி. க. கூ. சங்க அங்கத்தவர் மத்தியில் கூடிய பலனைப் பெறும் விருப்பு ப நோ. கூ. சங்கங் களின் பக்கம் கவர்ச்சி ஏற்பட்டது எனலாம். 1942 முதல் 1978 வரையுள்ள காலப்பகுதியில் பல. நோ. கூ. சங்கங்கள் அரசாங்க ஆதரவுடன் அரசாங்கத்தின் கடன் திட்டங்களைச் செயற் படுத்துகின்ற அமைப்பாக அத்தியாவசியப் பண்டங்களை விநியோகிக்கின்ற பங்கீட்டுக் கடையாகச் செயற்பட்டு சிறிது முன்னேற்றம் அடைந்து வந்தது. அதே வேளையில் அங்கத் தவர்களாலேயே சுயமாக நடாத்தப்பட்டு தொடர்ந்தும் தனது அங்கத்தவர்களுக்கு சிறிய அளவிலான கடன் உதவிகளைச் சி. க. கூ. சங் கங்கள் தொடர்ந்து வழங்கிக்கொண்டு வந்தன. இரண்டு அமைப்புக்களின் வளர்ச்சியை ஒப்பிட்டு நோக்கும் போது மிகப் பெரிய வேறுபாட்டைக் கண்டுகொள்ள முடியும். இக்கால கட்டத்தையே சி க. கூ. சங்கங்களின் மந்த காலம் எனச் சொல்லலாம்.

## 3. 1978 - 1981 :

பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மூலம் அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்ட கடன் திட்டங்கள் அரசாங்கத்தினால் நிறுத்தப்பட்ட தைத் தொடர்ந்து சி. க. கூ. சங்கங்கள் மீளு யிர் பெறத் தொடங்கி மீண்டும் வளரத் தொடங்கியது. கிராமிய விவசாயிகளின் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அமைப் புக்களான இவ்வமைப்புக்கள் வளரத் தொடங் கின. இந்நிலைக்கு 1978-ம் ஆண்டு கேகாலை மாவட்டத்தில் வல்கம என்ற இடத்தில் நடை பெற்ற கூட்டுறவாளர்களின் தேசிய மகாநாடு காரணம் என்றால் அதுமிகையாகாது. அங்கு மிங்குமாக சிதறிக்கிடந்த சி. க. கூ. சங்கங்களை மாவட்ட ரீதியில் ஒருங்கிணைத்தும் மாவட்டங் களை தேசிய ரீதியில் ஒருங்கிணைப்பதும் அத்தியாவசியமானதென இம் மாநாட்டில் உணரப்பட்டது. இதற்கு அமைவாகச் 1978-ம் ஆண்டு கேகாலை மாவடத்தில் சமாசத்தின் அங்குரார்ப்பணத்துடன் 1980-ம் ஆண்டு வரை 5 மாவட்ட சமாசங்களும் உருவாக்கப்பட்டது. 1980-ம்ஆண்டில் தேசிய ரீதியில் சி. க. கூ. சங்கங் களை இணைத்து சங்க அங்கத்தவர்களுக்கு கூட்டுறவுக் கல்வி பயிற்சி, தொழில் நுட்ப உதவி கள், கண்காணிப்பு ஆலோசனைகள், அபிவிருத் தித் திட்டங்கள் போன்றவற்றை வழங்கவும் அரச தனியார் நிறுவனங்களுடன் சங்கங்களின் பிரதிநிதியாக தொடர்பு கொள்ளவும் இலங்கை சி. க. கூ. சங்க சம்மேளனம் 1980-ம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. 1985-ம் ஆண்டு 16 மாவட்ட சமாசங்களும், 1988-ம் ஆண்டில் 26 மாவட்ட சமாசங்களும், 1989-ம் ஆண்டில் திருகோணமலையில் ஆரம்பிக்கப்பட்ட சமாசத் துடன் மொத்தம் 27 சி. க. கூ. சங்க சமாசம் இலங்கையில் உருவாக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றது.

## 4. 1982 - 1992 :

யாழ் மாவட்டத்தில் சிதறிக்கிடந்த சி. க. கூ. சங்கங்களில் 52 சங்கங்கள் ஒருங் கிணைந்து 02-03-1982-ம் ஆண்டில் யாழ் மாவட்ட ஐக்கிய நாணய சங்கங்களின் சமாச மாக சட்ட ரீதியான அமைப்பாகி உதயமாகி யது. இவ்வாறு உதயமாகிய சமாசமானது பல எதிர்ப்புக்கள் இடர்கள் மத்தியிலும் எதிர்நீச்ச லடித்து வளர்ந்து ஒரு தசாப்த காலத்தைக் கடந்து இலட்சியத்துடனும், சேவை நோக்குட னும், வெற்றிப் பாதையில் தனது நிர்ணயித்த இலக்கை நோக்கிச் சென்று பெருமை அடைகி றது. ஒற்றுமையின் சின்னமிது ஓங்கி வளர்ந்த விருட்சமிது. இதன் நிழலை நாம் இன்று அனு பவித்துக் கொண்டிருக்கின்றோம்.

இக்காலப் பகுதியில் தான் சி. க. கூ. சங்கங்கள் நிறுவனமயப்படுத்தப்பட்டதுடன் அங் கத்தவர்களுக்கு கல்விப்பயிற்சிகளையும் திறம்பட நடத்தி வந்ததுடன் அங்கத்தவர்களின் சமூகப் பொருளாதார, கலை கலாச்சார அபிவிருத்தி யிலும் கூடிய கவனம் செலுத்திவந்துள்ளது. என்றால் அது மிகையாகாது. சி. க. கூ. சங்க சமாசத்தின் நோக்கமானது யாதெனில் கூட்டு றவுக் கொள்கைக் கோட்பாடுகளுக்கு இணங்க அதன் உறுப்பினர்களுக்கு ஏற்ற பொருளாதார சமூக கலாச்சார தேவைகளை நிறைவு செய்வதும் உறுப்பினர்களுக்கிடையில் சிக்கனம் இருவயி ளைத்த உதவி தன்னுதவி தொடர்பாக கருத் துக்களையும் பிரயோகத்தையும் விருத்தி செய் வதும் உறுப்புரிமைச் சங்கங்களின் நடவடிக்கை களை இலகுவாக்குவதும் உறுப்புரிமைச்சங்கங் களின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு வேண்டிய உதவிகளையும் செய்வதும், உறுப்புரி மைச்சங்கங்களின் ஒருமித்த கருத்துக்களையும் வெளிப்படுத்துவதற்கு வழிவகைகளை ஏற்படுத் திக் கொடுத்தலும் அவற்றின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு வேண்டிய வியாபார நட

வடிக்கைகளில் ஈடுபடுத்தலும் கூட்டுறவுச்சட்டத்திற்கும் விதிகளுக்கும் சமாசத்துணைவிதிகளுக்கும் அமைவாக மாவட்டத்தின் நாலுவித அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் உறுப்புரிமைச் சங்கங்களை பிரதிநிதிப்படுத்தலும் அதனூடே ஒரு கூட்டுறவுச் சமுதாயத்தினை உருவாக்குதலும் ஆகும். இந்நோக்கத்தை அடைவதற்கு பின்வருவனவற்றுக்கமைவாகச் சமாசம் செயற்பட வேண்டியுள்ளது என்பது வெளிப்படை ஆகும்.

தொழிற்பாட்டு படிமுறைகள்
நடைமுறை விதிகள்
துணைவிதிகள்
கூட்டுறவு விதிகள்
கூட்டுறவுச் சட்டம்

அமைப்பு :

சி. க. கூ. சங்கமானது தனிநபர் ஒருவருடன் தொடங்கி உலகரீதியான அமைப்பு வரையில் தொடர்புடைய விரிவாக்கம் கொண்டதாகும். இச்சங்கிலித் தொடர்பு தனிநபர் ஒருவருடன் தொடங்கி பல தனி நபர்களை ஒருங்கிணைந்து ஒருசங்கமாக உருவாகி அவ்வாறு உருப்பெற்று பல சங்கங்கள் ஒன்றுசேர்ந்து குறிச்சிரீதியாகவோ அல்லது கிராமங்களின் ரீதியாகவோ கொத்தனி அமைப்பாகவும் ஒருபிராந்தியத்தில் அல்லது ஒரு உதவிஅரசாங்க அதிபர் பிரிவில் உள்ள சங்கங்கள் ஒன்று சேர்ந்து பிராந்திய சபையாகவும் மாவட்டத்தில் உள்ள பிராந்திய சபைகள் ஒன்று சேர்ந்து மாவட்ட சமாசமாகவும் மாவட்ட சமாசங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு தேசிய சம்மேளனமாகவும் ஆசிய நாடுகளில் உள்ள சம்மேளனங்கள் ஒருங்கிணைந்து ஆசிய கடனுதவு கூட்டுறவு சம்மேளனம் எனவும் உலகரீதியில் கண்டங்களில் உள்ள கூட்டு சம்மேளனங்கள் ஒருங்கிணைந்து உலக கடனுதவு சபையாகவும் ஒரு கோவையில் இணைக்கப்பட்டுள்ளன.

யாழ் மாவட்டத்தில் உள்ள 464 சங்கங்களில் இருந்து ஒவ்வொரு பிரதிநிதி என்ற ரீதியில் பொதுச்சபை உறுப்பினர்கள் உள்ளனர். இப் பொதுச்சபையிலிருந்து 14 பிராந்தியத்திற்கும் ஒரு பிராந்தியத்துக்கு ஒருவராக 14 பேரும், பொதுவாக ஒரு பிரதிநிதியும் ஆகமொத்தம் 15 பிரதிநிதிகள் யாழ் மாவட்ட சி. க. கூ. சங்க


உலகம் கடன் வழங்கு கூ. சபை
ஆசிய கடன் வழங்கு கூ. சம்மேளனம்
சம்மேளனம்
மாவட்ட சமாசம்
பிராந்திய சபை
கொத்தனி அமைப்பு
சங்கங்கள்
தனிநபர்கள்

சமாசத்தில் நிர்வாக சபைக்குத் தெரிவு செய்யப்படுவார்கள். அந்தப் பிராந்தியத்தின் பிரதிநிதிகள் அந்தந்தப் பிராந்தியத்தினால் முன்மொழியப்பட்டும், வழிமொழியப்பட்டும், தேர்தல் மூலம் மாவட்ட ரீதியிலான வாக்களிப்பு மூலம் தெரிவு செய்யப்படுகின்றனர். பொதுவான பிரதிநிதி மாவட்ட ரீதியில் பொதுவாக முன்மொழிந்து, வழிமொழிந்து தேர்தல் மூலம் மாவட்ட பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்படுகின்றார். இவ்வாறு தெரிவு செய்யப்படும் நிர்வாக சபை மாதத்தில் இரு தடவைகள் கூடி தனது நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. அத்துடன் தனது நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக உபசபைகளும் உருவாக்கப்பட்டு அவற்றிடமும் சில பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ் உபசபைகள் பிரச்சனைகளை இனம் கண்டு அவற்றுக்கான தீர்வுகளை சிபார்சு செய்வதுடனும் சமாச செயற்திட்டங்களை நடத்துவதற்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்குவதும் நிர்வாக சபைக்கு உறுதுணையாகவும் செயலாற்றி வருவதாகும். தற்பொழுது பின்வரும் உபசபைகள் உருவாக்கப்பட்டு செயல்படுகின்றன.

1. நிதி உபசபை
2. கடன் வழங்கல் உபசபை
3. உள்துறை எண்பார்வை உபசபை
4. ஆளணி ஒழுங்காற்று உபசபை
5. மரணசகாய உபசபை
6. வறியமக்கள் திட்டமிடல் உபசபை
7. கல்வி மாணவர் உபசபை.
8. விசேட உபசபைகள்

இவ் உபசபைகளுக்கு 2 நிர்வாக சபைப் பிரதிநிதிகளும் 3 பொதுச்சபை உறுப்பினர்களும்

## யாழ். மாவட்ட சி. க கூ. ச. சமாசத்தின் அமைப்புக் கோட்டுப்படம் பின்வருமாறு அமைந்துள்ளது



## யாழ். மாவட்ட சி. க. கூ. ச. சமாசத்தின் உள்ளக அமைப்பு :

யாழ் மாவட்டத்தில் சி. க. கூ. ச. சமாசத்தில் தற்பொழுது அங்கத்தவர் தொகை 34,000 ஆகும். சங்கங்களின் தொகை 464 ஆகவும், கொத்தணிகளின் தொகை 44 ஆகவும், பிராந்திய சபைகள் 14 ஆகவும் விஸ்தரிப்புப் பெற்றுச் செயலாற்றி வருகின்றது.

## யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாட்டிலுள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் பெயர்களும், கொத்தணி அமைப்புகளும்

**யாழ்ப்பாண மாவட்ட சமாசம்**

↓

**உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் 14**


நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறை, சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பழை, யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், சாவகச்சேரி, கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி

↓

**கொத்தணி அமைப்புக்கள் 44**

| | |
|---|---|
| 3 | புங்குடுதீவு, வேலணை, அல்லைப்பிட்டி |
| 3 | காரை மேற்கு, காரை கிழக்கு, ஊர்காவற்றுறை |
| 3 | அராலி, சுழிபுரம், வட்டுக்கோட்டை |
| 4 | மானிப்பாய், பண்டத்தரிப்பு, இளவாலை, சண்டிலிப்பாய் |
| 3 | ஏழாலை, இணுவில், சுன்னாகம் |
| 5 | தெல்லிப்பழை, தெல். மேற்கு, அளவெட்டி |
| 3 | யாழ்மத்தி, யாழ்.கிழக்கு, யாழ்.மேற்கு |
| 3 | அரியாலை, கொக்குவில், நல்லூர் |
| 7 | உரும்பிராய், நீர்வேலி, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, தம்பாலை, கோப்பாய் |
| 4 | கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம், மறவன்புலோ |
| 3 | கரவெட்டி, அல்வாய், உடுப்பிட்டி |
| 2 | பொலிகண்டி, புலோலி |
| | நாகர்கோவில், மருதங்கேணி, உடுத்துறை |

## எமது சமாச உபகுழுக்களின் உறுப்பினர்கள்




இருப்பவர்கள் இடமிருந்து வலம் :

திருமதி. ப. சரோஜினிதேவி, திரு. வி. ஸ்ரீசக்திவேல், திரு. ஆ. த. ஆறுமுகம்
திரு.ச. முருகநேசன் ( தலைவர் ), திரு. வை. வெங்கடாசல ஐயர்,
திரு. ஜி. எம். ஆர். மகாராஜன், திருமதி. ருக்மணிதேவி ஆனந்தவேல்

நிற்பவர்கள் இடமிருந்து வலம் :

திருமதி. ஜோ. ஜெபமணி, திரு. பொ. சத்தியமூர்த்தி, திரு. வ. குலசிங்கம்
திரு. பொ. சந்திரசேகரம்பிள்ளை, திரு. அ. மை. இராஜ்குமார்
திரு. பொ. சிவராஜா, திரு. பூ. க. இராஜரட்ணம், திரு. சி. பொன்னம்பலம்
திருமதி. கு. திருஞானசோதி

## கல்வி விஸ்தரிப்பு திட்டத்தின் கீழ் விரிவுரையாற்றும் விரிவுரையாளர்கள்



இருப்பவர்கள் இடமிருந்து வலம் :

திரு. ந. குமரேசபசுபதி (அதிபர்-வலயக் கல்லூரி) திரு. பூ. க. இராஜரட்ணம் (கூட்டுறவு பணியாளர் பயிற்சிக் கல்லூரி) திரு. அ. மை. இராஜ்குமார் ( மாவட்ட செயலாளர் - யாழ் மாவட்ட சி. க. கூ. ச. சமாசம் ) திரு. ச. முருகநேசன் ( தலைவர்-யாழ் மாவட்ட சி. க. கூ. ச. சமாசம் ) திரு. செ. லிங்கநாதன் ( கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ) திரு. இ. சுப்பிரமணியம் ( விரிவுரையாளர் - வலயக்கல்லூரி ) திரு. சு. சிவசுப்பிரமணியம் ( செயலாளர் யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை )

நிற்பவர்கள் இடமிருந்து வலம் :

திரு. பொ. சண்முகசுந்தரம் (விரிவுரையாளர்-கூட்டுறவுப் பணியாளர் பயிற்சிக் கல்லூரி)
திரு. து. பிரபாகரன் (விரிவுரையாளர் - கூட்டுறவுப் பணியாளர் பயிற்சிக் கல்லூரி)
திரு. வ. விக்கினேஸ்வரன் (நிதிமுகாமையாளர்-யாழ் மாவட்ட சி. க. கூ. ச. சமாசம்)
திருமதி. கு. திருஞானசோதி (மகளிர் குழு தலைவி-யாழ் மாவட்ட சி. க. கூ. ச. சமாசம்)
திருமதி. செ. வேதவல்லி (கல்வி உத்தியோகத்தர் - யாழ் மாவட்ட கூட்டுறவு சபை)
செல்வி. தி. லோகேஸ்வரி கல்வி உத்தியோகத்தர்-யாழ் மாவட்ட சி. க. கூ. ச. சமாசம்)

நியமிக்கப்பட்டு செயலாற்ற வழி செய்யப்பட்டுள்ளது. இவற்றில் கடன் வழங்கும் உபசபை மாதத்தில் இருமுறை கூடி நடவடிக்கைகள் மேற்கொள்கிறது. அத்துடன் சமாசத்தின் செயற்பாட்டுக்கேற்ப ஏனைய உபசபைகளும் கூட்டப்பட்டு பணியாற்றி வருகின்றது. மேலும் இதன் செயற்பாட்டை விரிவுபடுத்துவதற்கும். விரைவு படுத்துவதற்கும் ஏற்ற வகையில் மாவட்டச் செயலாளர், நிதி முகாமையாளர், காரியாலய உத்தியோகதர்களும், வெளிக்கள உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுடன் 44 மாற்றுமுகவர்களும் தொண்டர் அடிப்படையில் சேவைசெய்து வருகின்றனர்.

யாழ் மாவட்ட சி க. கூ. ச. சமாசத்தில் மகளீர்க்கான பிரத்தியேக நிர்வாகசபை ஒன்றும் தெரிவு மூலம் 15 உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டு மகளீர் விவகாரச் செயற்பாடுகளையும், மகளீரின் பங்களிப்பையும் அதிகரிக்கச் செய்வதோடு சேமிப்பு பழக்கவழக்கங்கள் அதிகரிக்கச் செய்வதற்கு வேண்டிய பிரசசார வேலைகள் மேற்கொள்வதற்கும், கலைகலாச்சார வளர்ச்சிக்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும மகளீரின் தலைமைத்துவ பண்புகளை அதிகரிக்கச் செய்து அவர்களையும் சமூக நடவடிக்கைகளில் முன்னின்று உழைக்கக் கூடிய தொழிறபாட்டையும் மேற்கொள்ள வேண்டிய கடமையையும் இவ்வமைப்புக்கு ஒப்புவிக்கப் பட்டுள்ளது.

யாழ் மாவட்ட சி. க. கூ. சங்க சமாசத்தில் 14 உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு பிராந்திய சபை தெரிவு செய்யப்பட்டு செயல்படுகின்றன. இச்சபையின் தெரிவு அவ்வப் பிரிவிலுள்ள சங்கங்கள் ஒன்று கூடி ஒவ்வொரு சங்கத்திற்கு ஒரு பிரதிநிதி என்ற அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு அவர்களில் ஒரு தலைவரும் தெரிவாகி பிராந்திய நிர்வாக சபையாக அமைக்கப்படுகின்றது. இப்பிராந்தியசபை சமாசத்திற்கு ஓர் ஆலோசனைச் சபையாகவும் சங்கங்களுக்கும் சமாசத்திற்கும் ஓர் இணைப்பு பாலமாகவும் சமாசத்தின் கல்வி திட்டங்களை பிராநதிய மட்டத்தில் அமுல்படுத்தும் ஓர் நிறுவனமாகவும் அப் பிராந்தியத்தில் இலைமறை காயாக இருக்கும் கலைகளை வெளிக்கொணர்ந்து அவற்றின் ஆற்றல்களை வளர்த்து பயன்பெற உதவும் அமைப்பாகவும செயறபட்டு வருகின்றன. எதிர்காலத்தில் இச்சபை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஓர் பிராந்தியவங்கி அமைப்பாக மாறும் சாத்தியக் கூறு உடையதாகும்.

**சமாசப்பணியில் ஊழியர்களின் பங்களிப்பு :**

யாழ் மாவட்ட சி க கூ. சங்க சமாச மானது ஆரம்ப காலத்தில ஒரு கௌரவ செயலாளருடன் ஆரம்பிக்கப்பட்டு செயறபட்டு வந்தது. அதனை அடுத்து ஒரு ஊழியர் நிர்வாக காரியதரிசியாக நியமிக்கப்பட்டு செயறபட்டது. பின்னர் 3 ஊழியர்களுடன் செயற்பட்டு வந்தது. 1988-ம் ஆண்டில் நிதிமுகாமையாளர் ஒருவரையும், கணக்குப் பதிவாளர் ஒருவரையும நியமித்து செயலாற்றி வந்தது. 1988-ம் ஆணடு நவம்பர் மாதம் சமாசத்தின் நடவடிக்கைகளை விஸ்தரிப்பதற்கு ஏதுவாக வெளிக்கள உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு நிறுவனமான சீ. ஏ - ஏ என்ற ஸ்தாபனத்தின் நிதி உதவி சம்மேளனம் மூலம் வழங்கப்படும் என்ற நிபந்தனையின் கீழ் அப்பொழுது யாழ் மாவட்டத்திலிருந்து 13 உ. அ. பிரிவுகளுக்கும் 13 வெளிக்கள உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டனர். இக்காலத்திலேயே நெதர்லாந்திலுள்ள ' கீவோஸ் " என்ற நிறுவனத்தின் நிதியுதவி யாழ் மாவட்ட சி. க. கூ. ச. சமாசத்திற்கு சம்மேளனத்தின் ஊடாக வழங்கப்பட்டது. இதன் காரணமாக சி. க. கூ. சங்கங்கள் பெருமளவு வளர்ச்சியைக் கண்டன. இவ்வளர்ச்சிக்கு வெளிக்கள உத்தியோகத்தர்களின் செயற்பாடும் பெருந்தொகையான நிதி அங்கத்தவர்களுக்கு மிகக் குறைந்த வட்டியில் வழங்கப்பட்டு பலன் பெற்றதனாலும் இத்துரித வளர்ச்சியமைய ஏதுவானது. இதன் காரணமாகவும் சமாசத்தின் சேமிப்பில் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டதைக் காணக்கூடியதாக இருந்தது. அத்துடன் இவ்வெளிக்கள உத்தியோகத்தவர்களின் செயலாற்றலின் பயனாக பல செயலிழந்த சங்கங்கள் புனரமைக்கப்பட்டும், புதிய சங்கங்கள் பல உருவாக்கப்பட்டும் அவற்றின் அங்கத்தவர்கள் தொகை அதிகரிக்கச் செய்ததுடன் அவர்களின் ஒழுங்கான சேமிப்பு பழக்க வழக்கங்களைத் தூண்டியும், சங்கங்களின் செயற்பாடுகளைக் கண்காணித்தும் அவற்றிற்கான ஆலோசனைகளை வழங்கியும் சங்கத்தையும் சமாசத்தினையும் நல்லதோர் வளர்ச்சிப் பாதைக்கும் உயர்ச்சிக்கும் இட்டுச் செல்ல விததிட்டனர்.

இவ்வாறு அங்கத்துவ சங்கங்ளின் நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட்டதனால் சங்கங்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் அதிகரிக்கப்பட்டதன் பிரகாரம் சமாசத்தின் அலுவலகத்தையும் விஸ்தரிக்கவேண்டிய தேவை ஏற்பட்டது. இதன் பிரகாரம் 1989-ம் ஆண்டிலிருந்து அலுவலக ஊழியரின் தொகையும் படிப்படியாக அதிகரிக்கப்பட்டது. தற்போது 25 ஊழியர்கள் கடமையாற்றுகின்றார்கள். கணக்கு வைப்பு முறைகளைச் சீர்திருத்திச் செம்மையாசப் பேணவும், சமாசத்தின் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தவும் உதவியது. ஆரம்ப காலத்தில் மாவட்டச் செயலாளரின் சம்பளம் உதவு தொகையாகவும், நிதி முகாமையாளர், வெளிக்கள உத்தியோகத்தர்களின் சம்பளம், பிரயாணப்படி என்பன வட்டியில்லாக் கடனாகவும் 5 வருடங்களின் பின் மீளளிக்கப்பட வேண்டுமென்ற நிபந்தனையுடன் சம்மேளனத்தினால் வழங்கப்பட்டது. காலப் போக்கில் சமாசம் சம்மேளனத்தன் உதவியை எதிர்பாராமல் தனது சொந்த வருமானத்தில் ஊழியர்களின் சம்பளத்தையும், ஏனைய செலவீனத்தையும் கொடுத்துச் சொந்தக் காலிலே நின்று செயற்படும் திறன் பெற்றுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. இவ்வளர்ச்சிக்கு அங்கத்தவர்களின் ஒத்துழைப்புப் பெருக்கமும் ஊழியர்களின் தன்னலம் கருதாத சேவையூக்கமுமே காரணமாகும். எதிர் காலத்தில் மேன்மேலும் சமாச

அலுவல்கள் விஸ்தரிக்கப்பட்டுச் செல்வது தவிர்க்க முடியாது என்பதுடன் ஊழியர்களின் தொகை, காரியப்பழுவுக்கு ஏற்ப அதிகரிக்கப் பட்டு விரிவுபடுத்தப்படும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை என்பது புலனாகின்றது.

சமாசத் தொழிற்பாடு :

யாழ் மாவட்ட சி. க. கூ. சங்க சமாசம் மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற தத்துவத்துடன் தனது தொழிற்பாடுகளை அங்கத்தவர்களின் தேவைகளையும், நோக்கங் களையும் பூர்த்தி செய்யும் வாஞ்சையுடன் பின் வரும் செயல்திட்டங்களை செயல்படுத்தி வரு கின்றன.

1. 1. சேமிப்புத் திட்டம் :

1982-ம் ஆண்டுமுதல் ரூ. 10/- மாதாந்த சேமிப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டு சேமிப்புக்கள் அங்கத்தவர்களிடம் இருந்து கிரமமாகச் சேகரிக்கப்பட்டது. இவ்வாறு சேகரிக்கப்படும் நிதியிலிருந்தே அங்கத்தவர்களுக்குக் கடன்கள் வழங்கியுத வியது. 1982-ம் ஆண்டு முடிவில் சேம மொத்தம் ரூ. 27, 009/- ஆக இருந்தது ஆனால் இன்று இந்தச் சேம மொத்தம் ரூ. 14944472-53 ஆக அதிகரித்துத் திரண்டுள்ளது.

2. வீடமைப்பு வைப்புத் திட்டம் :

1986-ம் ஆண்டு வீடமைப்புக் கடன் வழங்கும்போது கடனுக்கெதிராக பாது காப்புத் திட்டமாக வழங்கப்படும் கடனில் 10% வீடமைப்பு வைப்பு மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. 1986-ம் ஆண்டில் ரூ 12700/- ஆக இருந்த இவ் வைப்பு தற்போது ரூ. 617400/- ஆக அதிகரித்துள்ளது.

3. வெளிநாட்டுக் கடன் வைப்புத் திட்டம் :

1989-ம் ஆண்டு 2-ம் கட்ட வெளிநாட்டு கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட போது இவ்வைப்பு ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாறு திரட்டப்படும் நிதி சம்மேளனத் தில் வைப்பாக வைக்கப்படுள்ளது. ஏனெ னில் இக்கடனை சம்மேளனத்திடமிருந்து கடனாகப் பெறுவதற்கு 10% வைப்பு சம்மேளனத்திடம் வைப்பில் இடப்பட வேண்டிய தேவை ஏற்பட்டால் அவ்வாறு செய்யப்பட்டது. இந்த வைப்பின் மொத்தம் ரூ. 438, 100/- ஆகும்.

4. மாணவர் சேமிப்புத் திட்டம் :

இத்திட்டம் 1990-ல் ஆரம்பிக்கப்பட் டது. இதன் நோக்கம் மாணவர் மத்தியில் சேமிப்புப் பழக்கத்தை உருவாக்கவும், பிரத் தியேக செலவீனத்தை அவர்கள் கட்டுப் படுத்தி சேமிப்பு ஊக்குவிப்புப் பழக்கத்தைக் கொண்டு வரவும் அதன் பயனாக தமது கல்விக்குத் தேவைப்படும் செலவீனத்தை இச்சேமிப்பிலிருந்து பெற்று ஈடுசெய்யவும், அதனால் மாணவரின் பெற்றோரின் சுமையை ஓரளவு குறைக்கவும் வழி செய்வ தாகும். இச்சேமிப்பினால் சமுதாயத்தில் ஏனையவர்களுக்கும் இந்நிதியிலிருந்து பயன் பெற்றுக் கொள்ளக் கூடியதான வாய்ப்பும் இருக்கும். இச்சேமிப்பு 1990-ம் ஆண்டு ரூ. 126,000/- ஆக இருந்தது. தற்போது அதாவது 31-03-1992-ல் ரூ. 167, 300/- ஆக மாணவர் சேமிப்பு உயர்ந்துள்ளது. இம்மாணவர் சேப்பில் சேர்ந்துள்ளவர்கள் உரிய வயதெல்லை வந்தபின் சி. க. கூ. சங்கங்களில் அங்கத்தவர்களாக சேர்ந்து கொள்ள இங்கு வாய்ப்பு உண்டு இம் மாணவர் சேமிப்பில் மாணவர்களை சேர்ப் பதற்கு மாணவர் சேமிப்பு முகவர்கள் நியமிக்கப்பட்டு அவர்களுக்குச் சேமிப்பின் வட்டியில் 4%ம் தரகாக வழங்கப்படுகின்றது. இந்நாட்டின் இக்கால பாதிப்பு நிலை காரண மாக சமாசம் எதிர்பார்த்த இலக்கை இத் திட்டத்தில் அடையவில்லை என்றே கருது கின்றோம். தற்போது 36 பாடசாலை களில் மாணவர் சேமிப்புத் திட்டம் அமுல் நடத்தப்படுகின்றது

5. பரிசூநிய சேமிப்புத் திட்டம் :

சேமிப்புத் திட்டத்தில் இன்னுமோர் புதிய முயற்சியாக 1991-ம் ஆண்டு தை மாதம் 14-ந் திகதி அமரர் திரு. ச. ஞானப்பிரகாசம் அவர்கள் ஞாபகார்த்த மாக பரிசூநிய சேமிப்புத் திட்டம் அறிமுகப் படுத்தபட்டது. 1991 முடிவில் இச்சேமிப்பு திட்ட மூலம் ரூ 266380/- சேமமாக திரட்டப்பட்டது. 1992-ம் ஆண்டு பங்குனி வரை ரூ. 369310/- சேமமாக திரட்டப் பட்டுள்ளது. 5 வருட கால எல்லையைக் கொண்ட இத்திட்டம் மாதாமாதம் ரூ. 10/- வீதம் சேகரிக்கப்பட்டு ஒவ்வொரு மாதமும் குலுக்கல் மூலம் அதிஸ்டசாலிகள் தேர்ந் தெடுக்கப்பட்டு ரூ. 600/- பரிசாக வழங்கப் பட்டுவருகின்றது. இத்திட்ட கால முடிவில் சேமிப்பாளர் அனைவருக்கும் சேமிப்புத் தொகை ரூ. 600/- உடன் வட்டியாக ரூ. 150/- வும் சேர்த்து ரூ. 750/- வழங்கப் படும்.

மேற் கூறப்பட்ட சேமிப்புத் திட்டங்க ளின் வாயிலாகப் பெறப்பட்டு திரண்ட மொத்த சேமிப்பு ரூ 16236600/- ஆகும். எமது சமாசத்தின் மொத்த மூலதனத்தில் 49%மாக அங்கத்தவர்களின் மொத்த சேமம் உள்ளது.

2. 1. மரண சகாயத் திட்டம் :

1982-ம் ஆண்டிலேயே மரண சகாயத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது இத்திட்டத் தில் அங்கத்தவர்களின் வயதிற்கேற்ப மாதாந்த சந்தாவினைப் பெற்று ஒரு வருட சந்தா செலுத்திய பின் அங்கத்த வர் ஒருவர் மரணமடைந்தால் அவரின் பின்னுரித்தாளிக்கு ரூ 2000/- வழங்கப் படும். 1982-ம் ஆண்டில் ரூ. 499/- ஆக இருந்த மரண சகாய நிதி 31-03-92-ல் ரூ. 520111/- வாக அதிகரித்துள்ளது. 1985-ம் ஆண்டில் மரண சகாயக் கொடுப் பனவு ரூ. 1000/- வழங்கப்பட்டது. 31-03-1992 வரை மரண சகாயக் கொடுப் பனவு ரூ. 153000/- வழங்கப்பட்டுள்ளது.

சி. க. கூ. ச சமாசத்தின் செயற் திட்டங்களின் வளர்ச்சிப் போக்கினைப் பின்வரும் அட்டவணையிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

| வருடம் | பங்கு | சேமிப்பு | மரண சகாயம் | வீடமைப்பு வைப்பு | வெளிநாட்டு வைப்பு | மாணவர் சேமிப்பு | பரிசூதிய சேமிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 1982 | 4060-00 | 27009-45 | 499-00 | | | | |
| 1983 | 7915-00 | 292325-30 | 12876-00 | | | | |
| 1984 | 9045-00 | 567966-39 | 34993-00 | | | | |
| 1985 | 9900-00 | 823166-97 | 45931-75 | | | | |
| 1986 | 17105-00 | 1126333-59 | 75452-34 | 12730-50 | | | |
| 1987 | 34840-00 | 1742430-63 | 111357-13 | 166594-95 | | | |
| 1988 | 37840-00 | 2921800-58 | 153613-00 | 262867-04 | | | |
| 1989 | 40240-00 | 3696295-73 | 213030-97 | 476044-78 | 605633-79 | | |
| 1990 | 57450-00 | 7787429-97 | 388521-13 | 545432-06 | 490301-41 | 126046-71 | |
| 1991 | 87270-00 | 13665033-36 | 490257-87 | 607889 57 | 409515-58 | 166154-28 | 266300-00 |
| 1992 (பங்குனி) | 92820-00 | 14944472-53 | 520115-07 | 617409 74 | 438103-52 | 167307 27 | 369310-00 |

**3. 1. கடன் வழங்கல் திட்டம் :**

*1982-ம் ஆண்டு யாழ் மாவட்ட சி. க. கூ. ச. சமாசமானது பதிவு செய்யப்பட்டிருப்பினும் 1983-ம் ஆண்டில் தான் சங்கங்களுக்கு சமாசத்தினால் கடன் வழங்கப்பட்டது. முதன்முதலில் சமாசத்தினால் அங்கத்தினர் கடன் என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. 1983-ம் ஆண்டில் ரூ. 127,000/- கடனாக வழங்கப்பட்டது. 1984-ம் ஆண்டில் ரூ. 368,000/- வும், 1985-ம் ஆண்டில் ரூ. 588,000/- வும் வழங்கப்பட்டுள்ளது. 1986-ம் ஆண்டில் " சாதாரண கடன் " என்ற அடிப்படையில் ரூ. 591,000/- சங்க அங்கத்தவர்களுக்குக் கடனாக வழங்கப்பட்டது. இதன் பின் ஏனைய வெவ்வேறு கடன் திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன. இன்று வரை ரூ. 56, 859, 545 /- கடனாக வழங்கப்பட்டது இவற்றின் விபரக் குறிப்பு பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.*

| வருடம் | அங்கத்தவர் கடன் | சாதாரண கடன் | சுயமுயற்சிக் கடன் | வீடமைப்புக் கடன் | வீடு. திரு. கடன் | விவசாயக் கடன் | வறிய மகளிர் கடன் | வெளிநாட்டுக் கடன் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1983 | 127000 | | | | | | | |
| 1984 | 368900 | | | | | | | |
| 1985 | 588000 | | 3500 | | | | | |
| 1986 | | 591000 | 109500 | 141500 | 25000 | 10000 | | |
| 1987 | | 697100 | 37000 | 1475000 | 55000 | 10000 | 178000 | |
| 1988 | | 1788000 | 472100 | 843500 | 125000 | 16300 | 2000 | 634000 |
| 1989 | | 3025500 | 3502300 | 2899000 | | | | 9324750 |
| 1990 | | 2856250 | 4857700 | 383500 | | | | 524000 |
| 1991 | | 4713675 | 4623000 | 218500 | | | | 589000 |
| 1992 (பங்குனி) | | 1702200 | 1043800 | 5000 | | | | 45000 |

| வருடம் | வறிய மக்கள் கடன் | திட்டக் கடன் I | திட்டக் கடன் II | மிக வறிய மக்கள் கடன் | உய. க. கடன் | விழாக் கடன் | விதவைகள் கடன் | இளைஞர் கடன் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1988 | 155500 | 170000 | | | | | | |
| 1989 | | | 253300 | 364000 | 241500 | | | |
| 1990 | | | | 188900 | 76500 | 175000 | 536150 | 100000 |
| 1991 | | | | 52600 | 77500 | 350000 | 313000 | |
| 1992 (பங்குனி) | | | | 76000 | 16500 | | 104000 | |

| வருடம் | விசேட கடன் | குறுங்காலக் கடன் | அபிவிருத்திக் கடன் | வியாபாரக் கடன் | விவசாயக் கடன் |
|---|---|---|---|---|---|
| 1986 | 341850 | | | | |
| 1987 | 389100 | | | | |
| 1988 | 1055900 | | | | |
| 1989 | 891100 | | | | |
| 1990 | | 1003500 | 124500 | | |
| 1991 | | 733000 | | 200000 | 45000 |
| 1992 (பங்குனி) | | 110300 | | | 104000 |

| | அங்கத்தவர் கடன் | சாதாரண கடன் | சுயமுயற்சிக் கடன் | வீடமைப்புக் கடன் | வீடு. திரு. கடன் | விவசாயக் கடன் | வறிய மக் கடன் | வெளிநாட்டுக் கடன் |
|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்தம் | 1084170 | 15373725-00 | 14648900 00 | 5966000-00 | 205000 | 36300 | 180000 | 11116750-00 |
| அறவீடு | 1084170 | 8017375-96 | 6803951 75 | 810618-49 | 205000 | 36300 | 180000 | 8832556-05 |
| மீதி | | 7356349-04 | 7844948-25 | 5155381-51 | — | | — | 2284193·95 |

| | வறிய மக். கடன் | திட்டக் கடன் I | திட்டக்கடன் II | மிக வறிய மக. கடன் | உயர் கல்விக் கடன் | விழாக் கடன் | விதவைகள் கடன் | இளைஞர் கடன் |
|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்தம் | 155500-00 | 170000 | 253300 | 681500 | 412000 | 525000 | 953150-00 | 100000 |
| அறவீடு | 150879-14 | 170000 | 189050 | 316700 | 205640 | 366840 | 294805-00 | 43220 |
| மீதி | 4620-86 | — | 64250 | 364800 | 206360 | 158160 | 658345-00 | 56780 |

| | விசேட கடன் | அபிவிருத்திக் கடன் | குறுங்காலக் கடன் | வியாபாரக் கடன் | விவசாயக் கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| மொத்தம் | 2677950-00 | 124500 | 1846800 | 200000 | 149000 | 56859545-00 |
| அறவீடு | 2677950-00 | 23500 | 869565 | 100300 | 5220 | 31383641-39 |
| மீதி | - | 101000 | 977235 | 99700 | 143780 | 25475903-61 |

மேற்குறிப்பிடப்பட்ட திட்டங்களின் மூலம் பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு இதுவரை ரூ. 568,59,545/- சிறுவட்டிக் கடனாக வழங்கியதின் பேறாக அவர்களுக்குப் பல தொழில் வாய்ப்புக்களைப் பெற்று அவற்றின் மூலம் வருமானத்தை அதிகரிக்கச் செய்து தங்கள் வாழ்க்கைத் தரத்தை அதிகரிக்கச் செய்நுள்ளனர், வறுமைக் கோட்டின் கீழுள்ளவர்களுட் பலரை மேல்நிலை அடையச் செய்துள்ளது. இக்கடன்கள் பலவிதத் தேவைகளுக்கு அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்டு அவர்களின் தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு வழங்கப்பட்ட பலதரப்பட்ட கடன்களும் மாதாமாதம் சிறுசிறு சம தொகை மீளச் செலுத்தப்படுகிறது. அவ்வாறு அங்கத்தவர்களால் மீளச் செலுத்தப்பட்டு மீதித் தொகையாக அவ்வாண்டுகளில் இருந்த விபரம் இதன் கீழ் தரப்படுகின்றது.

## கடன்களின் மீதிப் பட்டியல்

| வருடம் | சாதாரண கடன் | சுயமுயற்சிக் கடன் | வீடமைப்புக் கடன் | விசேட கடன் | வீடு திருத். கடன் | விவசாயக் கடன் | வறிய மகளிர் கடன் |
|---|---|---|---|---|---|---|---|
| 1983 | 109795-23 | | | | | | |
| 1984 | 319387-23 | | | | | | |
| 1985 | 515924-80 | 3500-00 | | | | | |
| 1986 | 508066-80 | 88544-55 | 131615-82 | 198556-75 | 25000-00 | 10000-00 | |
| 1987 | 823647-72 | 91055-79 | 1578365-16 | 310340-00 | 38238-75 | 5000-00 | 143413-90 |
| 1988 | 1609052-09 | 424051-92 | 2211895-08 | 720738-92 | 101498-22 | 14708-76 | |
| 1989 | 3011210-00 | 3106962-36 | 4911526-51 | | | 4192-54 | |
| 1990 | 4262464-98 | 5880656-33 | 5146969-90 | | | | |
| 1991 | 6394988-42 | 7512558-25 | 5167098-72 | | | | |
| 1992 (பங்குனி) | 7356349-04 | 7844948-25 | 5155381-51 | | | | |

| வருடம் | வெளிநாட்டுக் கடன் | வறிய மக்கள் கடன் | திட்டக் கடன் I | திட்ட கடன் II | மிக வறிய மக் கடன் | உயர் கல்வி கடன் | விழாக் கடன் | விதவைகள் கடன் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1988 | 633361-69 | 145363-57 | 170000-00 | | | | | |
| 1989 | 6319781-45 | 51266-72 | 04954-25 | 170540 | 354455-00 | 221420 | | |
| 1990 | 3910887-95 | 16456-81 | | 94670 | 426330-00 | 219865 | 121655 | 409155 |
| 1991 | 2520029-95 | 4620-86 | | 64250 | 316415-00 | 204930 | 252720 | 605220 |
| 1992 (பங்குனி) | 2284193-95 | 4620-86 | | 64250 | 364100-00 | 206360 | 158160 | 658345 |

| வருடம் | இளைஞர் கடன் | அபிவிருத்திக் கடன் | குறுங் காலக் கடன் | வியாபாரக் கடன் | விவசாயக் கடன் |
|---|---|---|---|---|---|
| 1990 | 82810-00 | 122550-00 | 736070-00 | | |
| 1991 | 58640-00 | 101110-00 | 965470-00 | 144550 | 45000-00 |
| 1992 (பங்குனி) | 56780-00 | 101000-00 | 977235-00 | 99700 | 143780-00 |

சமாசத்தினால் அங்கத்தவர்களுக்கு வழங்கப்படும் பெரும்பகுதிக் கடன்கள் உற்பத்தி முயற்சிகளுக்காகவே வழங்கப்படுகின்றது. அதனால் கிராமிய விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றது. இவ்வித கடன் திட்டங்கள் யாவும் அங்கத்தவர்களின் நன்மை கருதி அவர்களின் தேவைகளையும் சுமைகளையும் கருத்திற் கொண்டே தீட்டப்படுகின்றன. அவ்வாறான அங்கத்தவர்களின் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய நிதிப்பலம் சமாசத்தில் திரண்டிருப்பதால் சமாசம் தனது சொந்தக் காலில், சொந்த நிதி ஆளுமையில் தாக்கமின்றி நடை போடுகின்றது என்பதனை பெருமையுடன் கூறலாம். எதிர்காலத்தில் நிதி மேலும் திரளும் சந்தர்ப்பத்தில் மேலும் பெரும் அபிவிருத்தித் திட்டங்களையும் அறிமுகப்படுத்திச் செயற்படுத்தலாம். இவ்வாறு பல துறைகளிலும் திட்டங்களை நிதி நிலைமைக்கேற்ப தயாரித்து அமுலாக்கி ஊக்குவிக்க இடமுண்டு.

சங்கம் சமாசத்தில் சேர்ந்து மாதாமாதம் சேமத்தை ஒழுங்காக 6 மாதங்கள் செலுத்திய பின்பே அச் சங்கத்தின் செயற்பாட்டை அவதானித்து அச் சங்கத்தின் சேமிப்பின் 90%த் தொகை சாதாரண கடனாக வழங்கப்படுகின்றது. இவற்றை அச்சங்கம் மீளளிக்கும் ஒழுங்குத் தன்மையைக் கொண்டே ஏனைய கடன்கள் அச் சங்கத்திற்கு சங்கத்தின் சேமிப்பின் 10 மடங்கு வரை வழங்கப்படுகின்றது. வழங்

கப்பட்ட கடன்கள் உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுகின்றதா என வெளிக்கள உத்தியோகத்தர்களாலும், சங்க நிர்வாக சபை உறுப்பினர்களாலும் மேற்பார்வை செய்யப்படுகின்றது. சமாசத்தினால் வழங்கப்படும் கடன்களின் தன்மைக்கேற்ப வட்டி வீதங்களும் வேறுபடுகின்றன. அவை பின்வருமாறு :

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) | இளைஞர் கடன் | 2% வட்டி | (2) | வீடமைப்புக் கடன் | 4% வட்டி |
| (3) | வெளிநாட்டு விவசாயக் கடன் | 6% வட்டி | (4) | மிக வறிய மக்கள் கடன் | 6% வட்டி |
| (5) | உயர் கல்விக் கடன் | 11% வட்டி | (6) | சாதாரண கடன் | 12% வட்டி |
| (7) | திட்டக் கடன் | 15% வட்டி | (8) | சுயமுயற்சிக் கடன்களும் ஏனைய கடன்களும் | 18% வட்டி |

சமாசம் சங்கங்களுக்கே கடனை வழங்குகின்றது. சங்கங்கள் அங்கத்தவர்களுக்கே வழங்குகின்றது. இங்கு கடன்களின் வழங்கலுக்கென கடன் நடைமுறை விதிகள் தயாரிக்கப்பட்டு அதற்கு அமைவாகவே கடன் வழங்கப்படுகின்றன. சாதாரண கடன் எந்த வேளையும் அதன் சேமிப்பின் 90% பெற்றுக்கொள்ள வசதிகள் உண்டு. ஏனைய கடன்கள் பெறுவதற்கு சில கட்டுப்பாடுகளும் சிபார்சுகளும் பெறவேண்டியுள்ளது. தற்பொழுது பொதுவாக தனிநபர் உச்சக்கடன் எல்லை ரூபா 5000/- ஆகும். சிலவளர்ச்சியுற்ற சங்கங்கள் தனிநபர் உச்சக்கடன் எல்லை ரூ. 10000/- ஆகும். முதற் தரமான சங்கங்களின் தனிநபர் உச்சக் கடன் எல்லை ரூ. 15000/- ஆகவும் ஆக்கப்பட்டுள்ளது. சமாசத்துடன் இணைந்து செயற்படும் சங்கங்கள் இப்பெருந்தொகையான கடனை பெறக்கூடிய வாய்ப்பினை பெற்றுள்ளன. ஆனால் 75 வருடங்களுக்கு மேலாக தனித்து இயங்கிவரும் சங்கம் இப்போதும் ரூ. 800/- மட்டுமே தனது அங்கத்தவருக்கு வழங்கும் உச்சக்கடன் எல்லையாக கொண்டுள்ளது. இதிலிருந்து சமாசம் உருவாகியதன் பலன் தெளிவாகிறது.

கடன் அறவீடு :

சி. க. கூ. சங்கங்களில் பெற்ற கடனை மாதாந்தம் மீளச் செலுத்தும் வகையில் கடன் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. ஒருவர் ஒரு கடனைப் பெற்றால் அதனை அவர் எத்தனை மாதாந்தத் தவணையில் மீளச் செலுத்துகின்றது என உறுதிப்படுத்துகிறாரோ அதன் பிரகாரம் அவர் தான் பெற்ற கடனைச் சம தொகையாகப் பகிர்ந்து மாதாந்த வட்டியுடன் கூட்டி மீளச்செலுத்த வேண்டியவராகின்றார் கடனை மீளச் செலுத்தும் சந்தர்ப்பங்களில் நாள் வட்டியே கணிப்பீடு செய்யப்படுவதுடன் கடனாக அத்திகதியிலுள்ள கடன் மீதிக்கே வட்டி கணிக்கப்படுகின்றது. இதனால் அங்கத்தவர்களுக்கு வட்டி சுமை கணிசமான அளவு குறைக்கப்படுகின்றது. சமாசத்தினால் வழங்கப்படும் கடன்களில் மீளளிப்புக்கான கால எல்லை கடன் திட்டங்களுக்கு ஏற்ற வகையில் தீர்மானிக்கப்படுகின்றது. சமாசம் வழங்கும் விவசாயக் கடன் 9 மாத கால எல்லையிலும், வெளிநாட்டுக் கடன் திட்டததில் விவசாயத்துக்கென வழங்கப்படும் கடன் 12 மாத கால எல்லையிலும், குறுகியகாலக் கடன், பண்டிகைக் கடன் என்பன 12 மாதங்களிலும், சாதகரண கடன், திட்டக்கடன், வெளிநாட்டுக் கடன் திட்டத்தினால் வழங்கப்படும் சுயமுயற்சிக் கடன், என்பன 24 மாத காலத்திலும், விதவைகள் கடன், மிக வறிய மக்கள் கடன். உயர் கல்விக் கடன் சமாச சுயமுயற்சிக் கடன் என்பன 36 மாதங்களிலும் மீளச் செலுத்தி முடிக்கப்பட வேண்டும். ஆனால் இளைஞர் கடன், 60 மாத காலத்திலும், வீடமைப்புக் கடன் 120 மாத காலத்திலும் மீளச் செலுத்தப்படல் வேண்டும்.

இதுவரை காலமும் சமாசத்தினால் வழங்கப்பட்ட கடன்கள் 95% அறவிடப்பட்டு உள்ளதை எமது கணக்குப் பதிவேடுகளிலிருந்து அறியக் கூடியதாக உள்ளது. இதற்கு உதாரணமாக சமாசத்தினால் வழங்கப்பட்ட திட்டக் கடன் 1-ன் மூலம் ரூ. 170,000/- வழங்கப்பட்டு முழுத்தொகையும் மீளப்பெறப்பட்டுள்ளது. இது 100% அறவீடாகும். வறிய மக்கள் சுயமுயற்சிக் கடனாக வழங்கப்பட்ட ரூ. 155 500/-ல் இதுவரை ரூ. 151,500/- அறவிடப்பட்டுள்ளது. இது 97.4% அறவீட்டைப் பெற்றதாக உள்ளது. சமாசத்தினால் வழங்கப்பட்ட வெளிநாட்டுக் கடன் ரூ. 11116,750/-ல் இதுவரை ரூ. 88,32,556-05 அறவிடப்பட்டுள்ளது இது 79.45% அறவீட்டைப் பெற்றுள்ளது. இக்கடன் கொடுப்பனவு சுழற்சி முறையில் வழங்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றது. எனவே இதன் அறவீட்டு வீதம் 95%ற்கு கூடுதலானது என்பதே உண்மையான வெளிப்பாடாக இருக்கும். இவ்வறவீட்டின் தன்மை சங்கங்களினதும் அவற்றின் அங்கத்தவர்களினதும் நாணயத் தன்மையைப் புரிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது. 1983-ம் ஆண்டில் இருந்து 31-03-1992-ம் திகதிவரை வழங்கப்பட்ட கடன்களின் தொகையும், மீளப் பெறப்பட்ட தொகையும், கடன்களின் மீதிகளும் இதன் கீழ் வரும் அட்டவணையில் இருந்து அறிந்து கொள்ளலாம். சமாசத்தினால் வழங்கப்பட்ட கடன்களில் இதுவரை மீளப்பெறப்பட்ட அறவீட்டின் தொகை ரூ. 31383641.39 சதமாகும்.

| வருடம் | அங்கத். கடன் | சாதாரண கடன் | சுயமுயற்சிக் கடன் | வீடமைப்பு கடன் | விசேட கடன் | வீடு. திரு. கடன் | விவசாயக் கடன் |
|---|---|---|---|---|---|---|---|
| 1983 | 17231-77 | | | | | | |
| 1984 | 159400-13 | | | | | | |
| 1985 | 391730-62 | | | | | | |
| 1986 | — | 482235-45 | 24455-45 | 9884-18 | 243207-43 | | |
| 1987 | | 383825-54 | 34488-76 | 28877-89 | 287316-21 | 41761-25 | 15000-00 |
| 1988 | | 1003395-63 | 141075-12 | 209670-08 | 645501-62 | 61740-53 | 6591-24 |
| 1989 | — | 1623342-09 | 930660-33 | 199835-68 | 1611838-92 | — | — |
| 1990 | — | 1604994-02 | 2086006-00 | 148356-61 | — | — | — |
| 1991 | — | 2579201-57 | 3017455-48 | 198371-18 | — | — | — |
| 1992 பங்குனி | — | 742789-37 | 708900-00 | 16179-69 | — | — | — |

| வருடம் | வறிய மகளிர் சுயமுய கடன் | வெளிநாடு கடன் | வறிய மக்கள் கடன் | திட்டக்கடன்-1 | மிக வறிய மக்கள்கடன் | உயர். க. க. | திட்ட கடன் 11 | விழாக் கடன் | விவ கடன் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1987 | 34586-10 | | | | | | | | |
| 1988 | 141305-38 | 638-31 | 10136-63 | | | | | | |
| 1989 | | 3633490-24 | 121309-48 | 120457-75 | 9545 | 20080 | | | |
| 1990 | | 2932843-00 | 34809-91 | 49542-25 | 117025 | 78055 | 158630 | 53345 | |
| 1991 | | 1977649-00 | 11915-95 | | 159515 | 92435 | 30420 | 218935 | |
| 1992 பங்குனி | | 283145-00 | | | 30615 | 15070 | | 94560 | 5220 |

| | விதவை கடன் | இளைஞர் கடன் | அபிவிருத்திக் கடன் | குறுங்காலக் கடன் | வியாபாரக் கடன் |
|---|---|---|---|---|---|
| 1990 | 126995-00 | 17190-00 | 1950-00 | 267430-00 | |
| 1991 | 116935-00 | 24170-00 | 21440-00 | 503600-00 | 55450-00 |
| 1992 பங்குனி | 50875-00 | 1860-00 | 110-00 | 98535-00 | 44850-00 |

**காகிதாதி விற்பனை :**

யாழ் மாவட்ட சி. க. கூ. சங்கங்களின் பாவனைக்கு வேண்டிய படிவங்கள், பற்றுச்சீட்டுப் புத்தகங்கள், காசுப் புத்தகம், தனியார் பேரேடு, கையேடுகள், அங்கத்தவர் பதிவேடு, பொதுப்பேரேடு போன்றவை விற்பனை செய்வதற்காக இப்பகுதி சமாத்தினால் ஆரம்பிக்கப்பட்டது. அங்கத்துவ சங்கங்களுக்கு உதவும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த விற்பனை சமாசத்திற்கு சிறு இலாபத்தினையும் பெற்றுத் தருகின்றது இப்பகுதி ஆரம்பிக்கப்பட்ட காலம் தொட்டு நல்ல முறையில் சங்கங்களின் தேவைகளை பூர்த்தி செய்து இலாபத்துடனே செயற்பட்டு வருகின்றது.

**வியாபாரப் பொருட்கள் விற்பனை நிலையம் :**

சங்க அங்கத்தவர்களினதும், மாணவர் சேமிப்பு அங்கத்தவர்களினதும், நன்மை கருதி அவர்களுக்கு வேண்டிய அத்தியாவசியப் பொருட்கள் கொழும்பிலிருந்து கொள்வனவு செய்து கப்பல் மூலம் கொண்டு வந்து வழங்கப்பட்டு வருகின்றது. வியாபாரப் பொருள் விற்பனை நிலையம் தொடர்ந்து அங்கத்தவர்களுக்கும், மாணவர் சேமிப்பு அங்கத்தவர்களுக்கும் வேண்டிய பொருட்களை விநியோகித்து வருவதுடன் வங்கியில் தேங்கிக் கிடக்கும் நிதியை வருமானம் தரக்கூடிய இத்திட்டத்தில் முதலீடு செய்து நற்சேவை ஆற்றி வருகின்றது. இத்திட்டம் சமாசத்தின் விரிவாக்க முயற்சிகளின் முதலாவது படியாக அமைந்துள்ளது.

**கல்வி விஸ்தரிப்புத் திட்டம் :**

அங்கத்தவர்களின் கல்வித் தேவைகளையும் அவசியத்தையும் கருத்திற் கொண்டு இக் கல்வி விஸ்தரிப்புத் திட்டம் ஆரம்பகாலம் முதல் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. அங்கத்தவர் கல்வி முதல் நிர்வாகசபை உறுப்பினர் கல்வித்

தலைமைத்துவ பயிற்சி வகுப்பு, பொருளாளர் பயிற்சி வகுப்பு, மகளிர் பயிற்சி வகுப்புக்கள், மாற்று முகவர் பயிற்சி வகுப்புக்கள், உதவிச் செயலாளர்கள் பயிற்சி வகுப்புக்கள் போன்றவை பயனுள்ள முறையில் நடாத்தப்பட்டு வருகின்றன. மேலும் இக்கல்வி விஸ்தரிப்பு திட்டத்தின் மூலம் கூட்டுறவைப் பற்றி அறியாத பாமர மக்களிடையே சி. க. கூ. ச. அறிவையும் வளர்த்து அவர்களை சி. க. கூ. சங்கங்களுடன் இணைத்துச் செல்வதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

கல்வி விஸ்தரிப்பு நடவடிக்கைகளின் பயன்பாட்டினால் 1982-ம் ஆண்டு 2300 அங்கத்தவர்களில் 300 அங்கத்தவர்கள் மட்டுமே மகளிர்களாக இருந்த நிலை மாறி 1992-ம் ஆண்டில் 34000 அங்கத்தவர்களைக் கொண்டதாகவும் அதில் 23000 மகளிர் அங்கத்தவர்களை உள்ளடக்கிய அமைப்பாக மாறியுள்ளதையும் காணக் கூடியதாக உள்ளது. அண்மைய காலகட்டத்தில் இந்த சி. க. கூ. சங்க நடவடிக்கைகளிலும் ஏனைய சமூகப்பொது விடயங்களிலும் அப்போது பங்களிப்புச் செய்யாது ஒதுங்கியிருந்த மகளிரை சமாசம் நடாத்திய கருத்தரங்குகள், செய்முறை பயிற்சி வகுப்புக்கள், கலந்துரையாடல்களின் பயனாக மகளிரை சி. க. கூ. சங்க அங்கத்தவர்களாக அதிகளவு சேர்த்ததுடன் அவர்களிடதத்தில் தலைமைத்துவப் பண்புகளையும் வளர்த்து அதிகரிக்கச் செய்ததுடன் கிட்டத்தட்ட 80 மகளிர் தனியான சங்கங்களை வழி நடாத்தி செல்லக்கூடிய நல்ல பொறுப்புவாய்ந்த தலைவர்களையும் உருவாக்கி உள்ளதையும் இங்கு குறிப்பிடத்தக்க வெற்றிகரமான அம்சமாகும். இவ்வாறு மகளிர் பங்களிப்பு சி. க. கூ. சங்கங்களில் அதிகரித்தமையினாலும் அவர்களுக்கான பிரத்தியேகமான மகளிர் நிர்வாக சபை ஒன்று உருவாக்கப்பட்டு அவற்றின் மூலம் மகளிர் நிர்வாக சபை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. இம் மகளிர் அமைப்புக்களினால் பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டும், கலை கலாச்சார வேலைகளை வளர்ச்சி அடையச் செய்துள்ளது என்று கூறினாலும் அது மிகையாகாது. அங்கத்தவர்களிடையே ஒற்றுமை, புரிந்துணர்வு, கடன் மீளச் செலுத்தும் கன்மை, கடின உழைப்பு, சட்ட திட்டங்களை ஒழுங்காகக் கடைப்பிடித்தல், கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டமை, கூட்டங்களுக்கு ஒழுங்காக சமூகம் தந்து சங்க நடவடிக்கைகளில் பங்குபற்றியமைகள் போன்றவைகள் சி. க. கூ. சங்கங்களின் இன்றைய வளர்ச்சிக்கு முக்கிய காரணமாகும்.

சி. க. கூ. சங்கங்களில் கிட்டத்தட்ட 67% மகளிர் அங்கத்தவர்கள் ஆகும். இக்கல்வித் திட்டத்தை செயற்படுத்துவதற்கு வெளிநாட்டு நிறுவனங்கள் சம்மேளனத்தின் ஊடாக நிதி உதவிகளை வழங்கி உள்ளன என்பது குறிப்பிடத்தக்க ஓர் முக்கிய அம்சமாகும். இக்கல்வி விஸ்தரிப்பு திட்டத்திற்கு வெளிநாட்டு நிறுவனம் சம்மேளனத்தின் ஊடாக ரூ. 179458/- வழங்கியுள்ளது. காலத்துக்குக் காலம் கூட்டுறவுத் திணைக்களமும் இக் கல்வி விஸ்தரிப்புக்கு சிறு உதவிகள் வழங்கியுள்ளது. தற்போது யாழ் மாவட்டத்தில் 1991-ம் ஆண்டு ஐப்பசி மாதம் முதல் யாழ் மாவட்ட கூட்டுறவு சபையுடனும், கூட்டுறவுத் திணைக்களத்துடனும், தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்க சமாசத்துடனும், வலைய கூட்டுறவுக் கல்வியுடனும் ஒருங்கிணைந்து கூட்டுறவுப் பயிற்சியினை நடாத்தி வருகின்றது.

**கலாச்சார ஊக்குவிப்புத் திட்டம் :**

யாழ் மாவட்டத்தில் உள்ள அங்கத்தவர்களின் இலை மறை காயாக ஒழிந்திருக்கும் கலை ஆற்றல்களை வெளிக்கொண்டு வருவதற்காக மகளிர் பயிற்சி வகுப்புக்களில் மகளிரின் கலை ஆற்றலை வளர்க்தெடுக்கும் நோக்கத்துடன் பயிற்சி வகுப்புக்களில் அவர்களுக்கு சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டு வருகின்றதுடன் சர்வதேச மகளிர் தினக்தில் சிறப்பான விழாவினை நடாத்தி அவற்றின் மூலமாக அங்கத்தவர்களின் கலை ஆற்றல் திறன் வெளிக் கொண்டு வருவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படுகின்றது. அத்துடன் கூட்டுறவு தினவிழாக் கொண்டாட்டங்களிலும் இவர்களின் கலைத் திறனை எண்பிக்கத்தக்க ஊக்குவிப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றது. இத்தோடு மட்டுமல்லாது பிராந்திய ரீதியில் அங்கத்துவ சங்கங்கள் அங்கத்தவர்களிடையே கலைப் போட்டிகளை வைத்து அவர்களுக்கு ஊக்கமும் ஆதரவும் வழங்கி வருவதுடன் யாழ் மாவட்ட சி. க. கூ. சங்கங்களின் சமாசத்தின் 10வது ஆண்டு நிறைவையொட்டியும் அங்கத்தவர்களிடையே சங்கங்கள் சார்ந்து கலை நிகழ்ச்சிகளின் போட்டிகள் நடாத்தப்படும் அவர்களின் கலை ஆற்றல்களை அபிவிருத்தி செய்வதற்கும் சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டு வந்து உதவியது வெள்ளிடை மலையாகும்.

மூலதன அமைப்பு :

## 31-05-1992-ல் யாழ் மாவட்ட சி. க. கூ. சங்க சமாசத்தின் மூலதனக் க/கு கிட்டிய ஆயிரம் ரூபாக்களில்

| விபரம் | தொகை | தொகை | விபரம் | தொகை |
|---|---|---|---|---|
| பங்கு | 93000 | | உறொக்க மீதி | 0685000 |
| 5% கடன் பங்கு | 141000 | 234000 | வங்கி - 1 | 299000 |
| சட். அடக்கப்பணம் | 4000 | | வங்கி - 2 | 8000 |
| சமா. கட். ஒது. நிதி | 271000 | | வங்கி - 3 | 54000 |
| அம. ஞானப். ஞா நிதி | 40000 | | கிராமிய வங்கி | 532000 |
| சிலை அமைத்தல் நிதி | 9000 | | நிலையான வைப்பு | 315000 |
| பணிக்கொடை ஒதுக் | 43000 | 367000 | சம்மே. சாத. சே. | 22000 |
| சம்மேளன நன்கொடை | 174000 | | சம்மே. கட். சேம. | 720000 |
| வெளிநா. நன்கொடை | 49000 | | சம்மேளன பங்கு | 161000 |
| புனரமை. நன்கொடை | 39000 | | மக்கள் வங்கி பங்கு | 2000 |
| கூட். ஆணை. கூட். சபை | | | | |
| கல்வி நன்கொடை | 5000 | 267000 | கடன்கள் | |
| தே. வீ. அ. அ. கடன் | 5319000 | | | |
| சம்மேளன கடன் | 8377000 | | சாதாரண கடன் | 7356000 |
| யாழ் அரச அதி. கட | 100000 | 13796000 | சுயமுயற்சி கடன் | 7845000 |
| சேமிப்பு | 14994000 | | விவசாயக் கடன் | 144000 |
| வீட. கடன் வைப்பு | 633000 | | திட்டக் கடன் | 64000 |
| வெளி. கட வைப்பு | 391000 | | குறுகிய கால கடன் | 977000 |
| மாணவர் சேமிப்பு | 171000 | | அபிவிருத்திக் கடன் | 101000 |
| பரிசுதிய சேமிப்பு | 369000 | | விழாக் கடன் | 158000 |
| நிலையான வைப்பு | 230000 | 16788000 | வியாபார கடன் | 100000 |
| மரணசகாயம் | | 380000 | உயர்கல்வி கடன் | 206000 |
| ஊழியர் பிணைவட்டி | | 43000 | வீடமைப்பு கடன் | 5155000 |
| காசோலை உண்டியல் | | 56000 | வெளிநாட்டு கடன் | 2284000 |
| செல்மதி வட்டிகள் | 768000 | | விதவைகள் கடன் | 658000 |
| பிரயாணம் செல்மதி | 17000 | | வறியமக்கள் கடன் | 4000 |
| செல்மதியாளர்கள் | 284000 | 1069000 | மிக வறிய மக்கள் கடன் | 365000 |
| | | | வாகனக் கடன் | 56000 |
| | | | ஊழியர் கடன் | 8000 |
| | | | இளைஞர் கடன் | 57000 |
| | | | வருமதியாளர்கள் | 276000 |
| | | | முற்பணங்கள் | 48000 |
| | | | காசி. இரு - விற்பனை | 386000 |
| | | | - அலுவலக | 38000 |
| | | | வியாபார பொரு | 3404000 |
| | | | கிருமி நாசினி | 2000 |
| | | | நிலை. சொத்து | |
| | | | தளபாடம் | 100000 |
| | | | தட்டச்சு இயந்திரம் | 23000 |
| | | | வாகனம் | 19000 |
| | | | வாகன பாது. நிலை | 3000 |
| | | | இ. ந. க / கு மீதி | 365000 |
| | | 33000000 | | 33000000 |

யாழ். மாவட்ட சி. க. கூ. ச. சமாசத்தில் தற்போதைய மொத்த மூலதனம் 33 மில்லியன் ஆகும். இதில் ரூ. 25538000/- கடனாக வழங்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 77% சங்கங்களுக்கு கடனாக வழங்கியுள்ளது. ஒரு சி. க. கூ. சங்க சமாசமானது ஆகக் கூடிய கடனாக 80% வழங்குவதே சிறந்தது ஆகும். எனவே 77% கொடுப்பனவு செய்யப்பட்டதை கருத்தில் கொண்டு பார்க்கும் இடத்து யாழ் சி. க. கூ. சமாசமானது திறம்பட நிதியினை கையாண்டுள்ளது என்பது தெளிவாகின்றது. யாழ் மாவட்ட சி. க. கூ. சங்கங்களில் கடன் வழங்கும் தன்மை சில வேளைகளில் 83% த்தைத் தாண்டி செல்வதுண்டு. சி. க. கூ. சங்க சமாசம் ஒன்று 10% திரவத்தன்மையைப் பேண வேண்டியது அவசியமாக உள்ளது. ஏனெனில் அங்கத்தவர்களின் உடனடி நிதித் தேவைகளை உடன் பூர்த்தி செய்து கொள்ளவும் திரவத்தன்மையை பேண வேண்டியது. அவசியம்.

நிலையான சொத்துக்களில் ஆகக் கூடுதலான் 10%வரை மட்டுமே சி. க. கூ. சங்க சமாசமானது முதலிடக்கூடியதாகவுள்ளது. யாழ் மாவட்ட சி க. கூ. சங்க சமாசத்தை ஒப்பு நோக்கினால் மிகக் குறைந்த அளவிலேயே நிலையான சொத்துக்கள் உள்ளன. நடைமுறைச் சொத்துக்களில் கூடுதலாக முதலீடு செய்யப்பட்டதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இவை காகிதாதி விற்பனைப் பொருட்களின் இருப்பும். வியாபாரப் பொருட்களின் இருப்பும் சேர்ந்து உள்ளமையை அறியக்கூடியதாக உள்ளது. இதிலிருந்து இந் நிறுவனமானது தனது அபிவிருத்தித் திட்டங்களில் முதலீடு செய்யத் தொடங்கியுள்ளது புலனாகின்றது. அங்கத்தவர்களுக்கும், மாணவர்களுக்கும் தேவையான காகிதாதிகள் ஏனைய வியாபாரப் பொருட்களையும் கொள்வனவு செய்து விற்பனை செய்து வருவதையும் அறியக் கூடியதாக உள்ளது.

சமாசத்தில் அங்கத்தவர் பங்கு மூலதனம் என்பன சமாசத்தின் மொத்த மூலதனத்துடன் ஒப்பிடுகின்ற போது மிகக் குறைந்த அளவிலேயே உள்ளது. இதனை அதிகரிப்பதற்குத் தற்போது சமாசத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 5% கடன் பங்கு, 6% குறைந்த வட்டிக் கடன் பெறுகின்றவர்கள் 5% பங்குப் பணத்தைக் கட்டி தமது கடனை பெறவேண்டியதாக உள்ளது. இதற்குக் காரசம்மேளனத்தினால் இக் கடன் சமாசத்திற்கு வழங்கும் போது 5% கடன் பங்கு செலுத்தப்பட்டே இக்கடன் பெறப்பட்டதாகும்.

கட்டட நிதி :

யாழ். மாவட்ட சி. க. கூ. சமாசம் கட்டட நிதியொன்றினை 1990-ம் ஆண்டு ஆனி மாதம் ஆரம்பித்தது. இந்நிதி தற்போது ரூ. 271000/-வை கட்டட நிதிக்கான ஒதுக்கமாக திரட்டியுள்ளது. இந்நிதிக்கு சமாசம் 18% மாகப் பெறப்படும் வருமானத்தில் இருந்து 1990-ம் ஆண்டு ஆனி மாதம் தொடக்கம் 1% வட்டியை கட்டட நிதிக்கென ஒதுக்கி வந்துள்ளது. 1991-ம் ஆண்டில் இந்நிதிக்கு 3% மாக ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இந்நிதியை கூடிய விரைவில் திரட்டக்கூடியதாக இருக்கின்றது, இந்நிதி தொடர்ந்து அதிகரித்து திரளும் வாய்ப்பு உண்டு. இதன் பலனாக சமாசத்திற்கு கூடிய விரைவில் ஓர் நிரந்தரமான சொந்தக் கட்டடத்தை அமைக்கக் கூடியதாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது-

அமரர் திரு. ச ஞானப்பிரகாச ஞாபகார்த்த நிதி அண்ணளவாக ரூ. 40000/- பெறப்பட்டுள்ளது. இந்நிதி மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்குவதற்காகத் திரட்டப்படுகின்றது. இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ரூ. 200000/- தேவையானதாகும்.

நன்கொடைகள் :

யாழ் மாவட்ட சி. க கூ சங்க சமாசத்திற்கு ரூ. 268000/- நன்கொடையா கிடைத்துள்ளது. இந் நன்கொடையில் ரூ. 179000/-வும் கல்வி விஸ்தரிப்பு நடவடிக்கைகளுக்கென வழங்கப்பட்ட நிதி உதவியாகும். இவற்றில் ரூ. 174000/- இலங்கை சி. க. கூ சங்கங்களின் சம்மேளனத்தினால் யாழ் மாவட்ட சி. க. கூ. சங்கங்களின் சமாசத்திற்கு கல்வி விஸ்தரிப்பு நடவடிக்கைகளுக்கென்று வழங்கப்பட்டவையாகும். கூட்டுறவுத் திணைக்களத்தினால் பெறப்பட்ட நன்கொடைகளும் கல்வி விஸ்தரிப்புத் திட்டத்திற்கே வழங்கப்பட்டன இந்நிதிகளைப் பெற்று யாழ் மாவட்டத்தில் அங்கத்தவர்களுக்கே வேண்டிய கூட்டுறவுக் கல்வியையும், நிர்வாக உறுப்பினர்களுக்கு வேண்டிய பயிற்சி வகுப்புக்களையும், தலைமைத்துவ பயிற்சி வகுப்புக்களையும், பொருளாளர் பயிற்சி, மகளிர் பயிற்சி, மாற்று முகவர் பயிற்சி, உதவிச் செயலாளர்கள் பயிற்சி ஆகிய வகுப்புக்களையும் மாவட்ட மட்டத்திலும், பிராந்திய மட்டத்திலும், கொத்தணி மட்டத்திலும் நடாத்தி வருகின்றது. இதனால் அங்கத்தவர்களிடையே கூட்டுறவுக் கல்வித் தகைமைகள் அதிகரிப்பதுடன் தலைமைத்துவ பண்புகளும் கணக்கியல் அறிவும் ஊட்டப்படுவதுடன் மகளிர்க்கான தொழில் பயிற்சிகளும் வழங்கப்பட்டு அவர்க

ளின் திறமைகள் வெளிக்கொணரப்பட்டு அவர்களது ஆற்றல் திறமைகளை மேலும் அபிவிருத்தி செய்யக்கூடியதாக உள்ளது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக் கடன்:

தே. வீ. அ. அ. கடன் 31-03-1992-ல் ரூ. 5319000/- வாக உள்ளது. இத்துடன் தே. வீ. அ. அ. சபையினுல் சி. க. கூ. சங்க அங்கத்தவர்களுக்கு வழங்குவதற்காக சமாசத்திற்கு வழங்கப்பட்ட கடனாகும். இதுவரை சி. க. கூ. சங்க அங்கத்தவர்களுக்கு ரூ. 5155000/- இத்திட்டத்தின் மூலம் கடனுக வழங்கப்பட்டுள்ளது.

சம்மேளனக் கடன் :

யாழ் மாவட்ட சி. க. கூ. சங்க சமாசத்திற்கு இலங்கை சம்மேளனம் வழங்கிய சம்மேளனக் கடன் தற்போது ரூ. 8377000/- உள்ளது. இதில் ரூ. 8000000/- கிவோஸ் என்னும் நெதர்லாந்து நிறுவனத்திடமிருந்து சம்மேளனம் ஊடாக வழங்கப்பட்ட 3% வட்டியில் பெறப்பட்ட கடனுகும். 283000/- ஊழியருக்கான சம்பளம், பிரயாணப்படி முதலியன வழங்குவதற்காக CAA, Woccu போன்ற ஸ்தாபனங்களினுல் சம்மேளனத்தின் ஊடாக வட்டியில்லாக் கடனுகவும் 5 வருடங்களின் பின் தவணை முறையில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய கடனுகவும் 10 வருட காலத்துள் முற்றுமுழுதாக மீளச் செலுத்தப்பட்டு முடிக்க வேண்டிய கடனுகும். இக்கடன் உதவி மூலம் நிதிமுகாமையாளர், உதவிச்செயலாளர் சம்பளம், பிரயாணப்படி முதலியன வழங்கப்படுவதாகும். இவ்வுதவி 1989-ம் ஆண்டு ஐப்பசி மாதம் வரையிலான காலத்துக்கு மட்டும் வழங்கப்பட்ட கொடுப்பனவே. வங்கித் தொழிற்பாடுகளுக்காக சம்மேளத்தினுல் வழங்கப்பட்ட கடனுதவி ரூ. 50000/- ஆகும் மற்றும் ரூ. 44000/- சமாசத்தின் வெளிக்கள அலுவல்களை மேற்கொள்வதற்காக வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிளுக்கான வட்டியில்லாக் கடனுகும்.

யாழ் அரசாங்க அதிபர் மூலம் இளைஞர்களின் சுயவேலை வாய்ப்பிற்காக ரூ. 100000/- சமாசத்திற்கு வழங்கப்பட்டது. இந்நிதி மூலம் நீர்வேலி ஸ்ரீமுருகன் ஐ. நா. ச, அங்கத்தவர்கள் 5 பேருக்கும், நீர்வேலி இலக்குமி மாதர் சி க. கூ. சங்க அங்கத்தவர்கள் 5 பேருக்கும், ஆவரங்கால் மத்தி சிவகாமி சி. க. கூ. சங்க அங்கத்தவர்கள் 5 பேருக்கும், ஆவரங்கால் பர்வதவர்த்தினி சி. க. கூ. சங்க அங்கத்தவர்கள் 5 பேருக்கும் ஆக மொத்தம் 20 அங்கத்தினருக்கு சுயவேலை வாய்ப்பிற்கென வழங்கப்பட்டது.

யாழ் மாவட்ட சி. க. கூ. சங்க சமாசமானது இலங்கைச் சம்மேளனம், தேசிய வீடமைப்பு அதிகாரசபை, அரசாங்க அதிபர் ஆகியவர்களிடம் இருந்து பெற்ற கடன்களின் மொத்தம் யாழ் மாவட்ட சி. க. கூ. சங்க சமாசத்தின் மொத்த மூலதனத்தின் 41.8% ஆகும்.

சமாச வைப்பு நிதி :

யாழ் மாவட்ட சி. க. கூ. சங்க சமாசத்திஞல் இதுவரை அங்கத்தவர்கள் மூலம் பெற்றுக்கொண்ட மொத்த வைப்புத்தொகை ரூ. 16788000/- ஆகும். சமாசத்தின் மொத்த மூலதனத்தில் 50. 87% மான அங்கத்தவர்களின் வைப்பு ஆகும். இந்த நிதி மூலமே சமாசம் சாதாரண கடன், சுயமுயற்சிக் கடன், திட்டக் கடன், மாணவர் உயர்கல்விக் கடன், குறுகிய காலக்கடன், விவசாயக் கடன், வியாபாரக் கடன், விழாக்கடன், அபிவிருத்திக் கடன் என்னும் பல்வழி வாயிலாக அங்கத்தவர்களுக்கு கடன்கள் வழங்கி உதவுகின்றது. இந்தக் கடன் திட்டங்களுக்கு மரணசகாய திட்ட நிதிகளும் பயன்படுத்தப்பட்டுவருகின்றது. இத் திகதிவரை சிட்டத்தட்ட அங்கத்தவர்களுக்கு ரூ. 16951000/- கடனுக வழங்கப்பட்டுள்ளது.

மொத்த மூலதனத்தில் மீதான 7. 33ம் நிதிகள் சமாசத்தின் பங்கு நிதியாலும் ஒதுக்கு நிதிகளாலும், நன்கொடைகளினுலும், மரணசகாயநிதித் திட்டத்தினுலும், ஏனைய சென்மதிகளினுலும் நிதியளிப்புச் செய்யப்படுகின்றது.

சமாசத்தினுல் வழங்கப்பட்ட மொத்தக் கடனின் மீதிக் தொகை ரூ. 25530000/- இத்தொகையானது சமாச மூலதனத்தில் 77. 36% ஆகும். சி க கூ. சங்கங்களின் சமாச மொத்த மூலதனத்தில் 80% கடன் வழங்கப்பட்டிருப்பது ஓர் சிறந்த அம்சமாகும். இதை அவதானிக்கும் போது அதாவது 77. 36% கடன் வழங்கப்பட்டுள்ளமை ஓர் நல்ல நிலமையில் செயற்பட்டு வருகின்றது என்பதை எடுத்துக்காட்டுகின்றது. சமாசத்தின் தற்போதைய மொத்த மூலதனம் ரூ 33000000/- ஆகும். இதில் கையிருப்புக் காசு, வங்கிமீதிகள் முதலீடுகள் முதலியவற்றின் மொத்தத் தொகை ரூ. 2798000/- ஆகும். இது மொத்த மூலதனத்தில் 8. 47% ஆகும். சமாச காசிதாதி விற்பனைப் பொருள் இருப்பு, வியாபார விற்பனைப் பொருள் இருப்பு என்பவற்றின் வீதத் மூலதனத்தில் 11. 48% ஆகும். நிலையான சொத்துக்கள், வருமதியான முற்பணங்கள், ஏனைய சொத்துக்கள் 2. 69% ஆகும்.

**சிறு சிறு கிராமிய வங்கி அமைப்புக்கள் :**

சிக்கன கடனுதவு கூட்டுறவு அபிவிருத்திப் பாதையில் இன்னுமோர் மைல்கல்லாக சிறுசிறு கிராமிய வங்கிகள் கிராம மட்டங்களில் உருவாகி செயற்பட்டுவருகின்றன. சி. க. கூ. சங்கங்கள் ஆரம்ப கால கட்டத்தில் சிறு மூலதனத்துடன் செயற்பட்டு வந்த வேளைகளில் சமாசம் நிதி உதவி வழங்கத் தொடங்கியதனுல் இச்சங்கங்கள் தம் அங்கத்தவர்களுக்கு பெருந் தொகைக்கடன் வழங்கக்கூடிய நிலையும் தேவையும் ஏற்பட்டது. இன்றைய காலகட்டத்தில் சங்கங்கள் ரூ. 3000/-, ரூ. 5000/-, ரூ. 10000/-, ரூ. 15000/- வரையான தனிநபர் உச்சக்கடன் எல்லைகளை தம் வளர்ச்சிக்கேற்ப உயர்த்தி அவற்றிற்கேற்ப அங்கத்தவர்களுக்கு கடன் வழங்குகின்றனர் சமாசம் கடனுதவி வழங்குவதற்கு முன்னர் இச் சங்கங்கள் ரூ. 500/-, ரூ. 1000/-, ரூ. 2000/- வரையான கடன்களையே தம் அங்கத்தவர்களுக்கு வழங்கி வந்தன. யாழ்ப்பாண மாவட்டத்தில் முதல் முதலில் பதிவு செய்யப்பட்ட ஐ. நா. சங்கம் இப்போதும் ரூ. 800/- மட்டும் தனிநபர் உச்சக்கடனுக வழங்குகின்றது. இந்த அளவில் சமாசம் நிதியுதவி வழங்கியதால் சங்கங்கள் பெரும் நிதி கொண்ட செயற்பாட்டை இலகுபடுத்தவும் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் கிராமிய மட்டத்தில் சிறுசிறு வங்கி அமைப்புக்களை உருவாக்கி செயற்பட வைத்து ஆங்காங்கே அங்கத்தவர்களுக்கு வேலைவாய்ப்பையும் வழங்கியுள்ளதுடன் அவர்களின் கணக்குக்கள், பதிவுகள் முதலியவற்றையும் ஒழுங்காக பராமரிக்கக் கூடியதாகவும் சங்க நடவடிக்கைகளை இலகுபடுத்தக் கூடியதாகவும் செய்துள்ளது. யாழ் மாவட்டத்தில் கிட்டத்தட்ட 80 கிராமிய மட்ட வங்கிகள் முழுநேர ஊழியர் களுடனும், பகுதி நேர ஊழியர்களுடனும் செயற்பட்டுவருகின்றது. இவற்றுக்கு சிறந்த உதாரணமாக நீர்வேலி ஸ்ரீமுருகன், உரும்பராய் கற்பக விநாயகர், இடைக்காடு சிவசக்தி, ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயகர், பருத்தித்துறை சதாவதானி கதிரவேற்பிள்ளை, ஆவரங்கால் மத்தி சிவகாமி, அச்செழு திருத்தணிகை போன்றவற்றைக் கூறலாம். இவ்வாறு சிறு கிராமிய மட்ட வங்கிகளை அமைப்பதன் மூலம் அங்கத்தவர்களின் உடனடித் தேவைகளை நிறைவேற்றத் தக்கவகையில் இவற்றின் செயற்பாடு அதிகரித்துள்ளது. ஏனைய வர்த்தக வங்கிகள் கிராமப் புறங்களை எட்டிப் பார்க்காத சந்தர்ப்பத்தில் சி. க. கூ. சங்க கிராமமட்ட வங்கிகள் கிராமங்கள் தோறும் மக்களோடு இணைந்து மக்களுக்காக உருவாக்கப்பட்ட வங்கிகள் மக்களுக்கே சேவை செய்யக் கூடிய வகையில் பரந்து சிறந்து வளர்ச்சியடைந்துள்ளதைக் கண்டு மகிழக் கூடியதாக உள்ளது.

## யாழ் மாவட்ட சி. க. கூ, சங்க சமாசத்தின் எதிர்கால இலக்குகள் :

யாழ் மாவட்ட சி. க. கூ. சங்க சமாசம் எதிர்காலத்தில் சமாச வளர்ச்சியின் போக்கை தற்கால அனுபவம் மூலம் எதிர்கால இலக்கினைப் பின்வருமாறு எதிர்பார்க்கின்றது.

| இலக்குகள் | 1992-ம் ஆண்டு | 1995-ம் ஆண்டு | 2000-ம் ஆண்டு |
|---|---|---|---|
| அங்கத்துவ சங்கம் | 480 | 700 | 1000 |
| அங்கத்தவர்கள் | 36000 | 50000 | 100000 |
| மாணவர் சேமிப்பு | 10000 | 50000 | 100000 |
| சேமிப்பு | 19000000 | 30000000 | 75000000 |
| கடன் வழங்கல் | 30000000 | 45000000 | 100000000 |

## யாழ். மாவட்ட சி. க. கூ. சங்கங்களின் சமாசத்தின் எதிர்கால நோக்கங்களும் அபிவிருத்தித் திட்டங்களும் வேண்டப்படும் தேவைகளும் :

**1. பயிற்சிக் கல்லூரி :**

யாழ் மாவட்ட சி. க. கூ. சங்கங்களின் கல்வி விஸ்தரிப்புத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு சிறந்த பயிற்சிக் கல்லூரி ஒன்று நிறுவப்பட வேண்டியது அத்தியாவசியமான தேவையாகும். இவ்வாறு ஓர் சிறந்த பயிற்சிக் கல்லூரியைச் செயற்படுத்துவதன் மூலம் அங்கத்தவர்களுக்கு வேண்டிய அங்கத்தவர் கல்வி, கூட்டுறவுக்கல்வி, தொழிற் கல்வி, கலை கலாச்சாரக் கல்வி, விளையாட்டுத்துறை என்பனவும் இப்

பயிற்சிக் கல்லூரி மூலம் பயிற்றுவிக்கக் கூடியது டன் சி. க. கூ. சங்கங்களின் செயற்திட்டங்க ளையும் சிறப்புடன் செயற்படுத்தவும் தொழில் வாய்ப்பினைக் கொடுக்கவும் மக்களை இத் துறைக்கு ஈர்க்கவும் முடியும் என்பதனை தெரி விக்கக் கூடியதாக இருக்கும்.

**2. சந்தைப்படுத்துதல் வசதி :**

யாழ் மாவட்ட சி. க. கூ. சங்க சமாசத் தினால் வழங்கப்படும் நிதியுதவியினால் மேற் கொள்ளப்படும் விவசாய உற்பத்தி, சிறு கைத் தொழில், உற்பத்திப் பொருட்கள் என்பவற்றை அங்கத்தவர்களிடம் இருந்து பெற்று அவற்றைப் பாதுகாத்து வைத்தலும் சந்தைப்படுத்தக்கூடிய வசதியையும் எதிர்காலத்தில் இச் சங்க அங்கத் தவர்களுக்கு செய்து கொடுக்கவேண்டியது சமா சத்தினது இன்றியமையாத கடமையாகவுள்ளது.

**3. சுழற்சிச் செயற்பாட்டுக்குத் தேவையான மேலதிக நிதிகள் :**

யாழ் மாவட்ட சி. க. கூ. சங்கங்களின் அங்கத்தவர்களின் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய அளவிற்கு வேண்டிய நிதியினைங் பெற் றுக்கொள்ள வேண்டியது அத்தியாவசியமாகும். 34000 அங்கத்தவர்களுக்கு சராசரி ரூ. 5000/- வழங்குவதாயின் ரூ. 170 மில்லியன் தேவைப் படும். ஆனால் சமாசத்தில் 33 மில்லியன் மட்டுமே உள்ளது. எனவே தான் எல்லோரின தும் தேவைகளை ஒரே நேரத்தில் பூர்த்தி செய் யக்கூடிய வகையில் நிதியினைப் பெற்று சுழற்சி யில் ஈடுபடுத்துதல் அத்தியாவசியமாகும். அத்து டன் அவ்வாறு எல்லோரினது தேவைகளைப் பூர்த்தி செய்யும் போது மாவட்டத்தில் ஓர் தொழில் சார்ந்த அபிவிருத்தி ஏற்படுவதுடன் அவர்களின் வாழ்க்கைத் தரத்தையும் அதிகரிக் கக் கூடியதாக உள்ளது. மேலும் புதிய அங்கத் தவர்களின் தேவைகளையும் நிறைவு செய்யக் கூடியதாக சமாசத்தின் மூலதனம் மாற்றமடைய வேண்டியது அவசியமாகும். இதற்கு அங்கத்த வர்களிடமிருந்தும் சேமிப்புத் தூண்டல் திட்டங் கள் மூலமும் நிதியினைப் பெருக்கலாம் அல்லது பிற ஸ்தாபனங்களிடமிருந்து க்டன்களையும் நிதி வழங்கல்களையும் பெற்று இச் சுழற்சி நிதியை அதிகரிக்கச் செய்வது அவசியமாகும்.

**4. மாணவர்கள் :**

மாணவர்களை கூட்டுறவுக்குள் கூடிய அக்கறை செலுத்தக்கூடிய வகையில் எமது செயல் திட்டங்களைத் தீட்டி செயற்படுத்த வேண்டும். மாணவர் சேமிப்புத் திட்டம் ஆரம்ப கட்டத் தில் தான் தற்பொழுது உள்ளது, இதனை நன்கு திட்டமிட்டு வளர்ச்சி அடையச்செய்து மாணவர் மத்தியில் சேமிப்பு பழக்க வழக்கத்தை ஊக்குவிப்பதுடன் அவர்களது தேவைகளுக்கு உதவியாக இருப்பது மட்டுமன்றி எதிர்காலத்தில் கூட்டுறவு வளர்ச்சியிலும் பங்காற்றுவார்கள்.

**5. சமூக பாதிப்பிற்கான புனரமைப்பு :**

யாழ் மாவட்டத்தில் இராணுவ நடவடிக் கைகளினல் ஏற்பட்ட பாதிப்புக்களின் தாக்கத் தினல் அங்கத்தவர்களுக்கும் உடமைகளுக்கும் ஏற்பட்ட அழிவுகள், பின்னடைவுகள், தடைகள் முதலானவற்றிற்கான புனரமைப்பு வேலைத் திட்டங்களை சமாசமே தயாரித்து நிதியீட்டச் செய்யக்கூடிய ஒரு நிலையை அடைவதுடன் தனித்துவத்துடனும் நீண்ட காலம் நிலைத்து நின்று அரும் பெரும் சேவையாற்றும் அமைப் பாக மாற்றியமைக்கப்பட வேண்டியது அத்தி யாவசியமானதாகும்.

" குணம் நாடி குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொளல் " என்பதற்கேற்ப சி. க. கூ. சங்கங்களின் வரலாற்றுப் பாதை யினை உற்று நோக்கி கடந்த காலங்களில் அவை ஏற்றத்துடன் வளர்ச்சி அடைந்ததையும் வீழ்ச்சி நிலைக்கு இட்டுச் செல்லப்பட்டதையும் மீண்டும் புத்துயிர் பெற்று தலை நிமிர்ந்து செயலாற்றி வெற்றிப் பாதையில் வீறுநடை போடுவதையும் அவதானித்து அவ் ஏற்றத் தாழ்வுக்கான காரண காரியங்களை அலசி ஆராய்ந்து எதிர்காலத்தில் பின்னடைவுகளையோ வீழ்ச்சி நிலை அடைதலையோ அடை யும் நிலை தவிர்த்து ஒற்றுமையுடன் நல்லனவும் வல்லனவுமான செயற்பாடுகளில் விடாமுயற்சியோடு ஈடுபட்டு நமது சங்கங்க ளையும் சமாசத்தையும் வளர்த்திட வேண்டும். மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதனைக் கருத்தில் கொண்டு யாழ் மாவட்ட மக்களின் சமூக பொருளாதார கலை கலாச்சார அபிவிருத்திக்கு கூடிய சிறந்த ஓர் பணியினை ஆர்வத்துடனும் கூட்டுப் பொறுப்பு டனும் ஆற்றி கிராமிய மட்டத்தின் உண்மை யிலான தேவைகளை இனம் கண்டு அவற்றை பூர்த்தி செய்யும் கிராமிய வங்கிகளான சி. க. கூ. சங்கங்கள் திறனுடனேயே செயற்பட யாழ் மாவட்ட சி. க. கூ. சங்கங்களின் சமாசம் தனது செயற்திட்டங்களை தகுந்த முறையில் தீட்டி அத்திட்டங்களை செவ்வனே அமுல்படுத்தி சி. க. கூ. சங்கங்களை வழிநடாத்தி யாழ் மாவட்ட கூட்டுறவு வங்கிபோல் உயர்ந்து நற் சேவை ஆற்றக்கூடிய வகையில் அமையும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

**" நீடூழி வாழ்க நின் கூட்டுறவுத் தொண்டு "**

தனது 10வது ஆண்டு
நிறைவு தினத்தை கொண்டாடும்
யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு
கூட்டுறவுச் சங்க சமாசத்தை வாழ்த்துவதில்
பெருமகிழ்ச்சி அடைகின்றோம்,

வலி கிழக்கு வடபகுதி ப. நோ. கூ. சங்கம்
அச்சுவேலி

கூட்டுறவுச் சேவையில்
10 ஆண்டுகள்
நிறைவு செய்துள்ள சிக்கன
கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களின்
சமாசத்திற்கு
எமது மனங்கனிந்த வாழ்த்துக்கள்

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்
தெல்லிப்பழை




சிறுதுளி பெருவெள்ளமாகிய சேமிப்பில் ஆல்போல் வளர்ந்து 10வது ஆண்டு நிறைவின் பொலிவில் ஏறு நடை போடும், **யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க சமாசம்** அறுகு போல் வேரூண்றி வளர எம் உள்ளம் கனிந்த வாழ்த்துக்கள் உரித்தாகுக!

**OFFSET PRINTING**

நவீன ஒவ்செற் முறையில், குறைந்த விலையில் கம்பியூட்டரின் துணையுடன் குறுகிய காலத்தில் சகல விதமான அச்சு வேலைகளும் செய்து தரப்படும்

மேலும் விபரங்களுக்கும், கீழ்காணும் மாதிரிப் படிவங்களுக்குமான

யாழ் தொடர்பு :- செயலாளர் - இருபாலை கிழக்கு பாரதி

* பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான சகல விதமான புத்தகங்கள்

* பாடசாலை / TUTORY புத்தகங்களை மீளப்பதிவுச் செய்தல் (RE-PRINT)

* சகல விதமான அலுவலக எழுதுகருவிகள் (STATIONERY) C. Rபுத்தகங்கள்,அப்பியாசக்கொப்பிகள்.

* நவீன ஸ்கேனர் (SCANNER) முறையில் புகைப்படங்கள் அச்சிடப்பட்ட மகசின்கள்.

இன்னும் பல! பல!!

GRAPHIC ARTS (1963)
FAST 'N FORWARD
63, GEORGE R. DE. SILVA MAWATHA
COLOMBO - 13.

# 10வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும்

யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க சமாஜம் மேலும் வளர்ந்து அபிவிருத்தி நோக்கிலும் சேவை செய்ய ஒரு துணையாகும் இருபாலை கிழக்கு பாரதியின் வாழ்த்துக்கள்!

சிந்தனையிலிருந்து செயலாக்கவிருக்கும் ஈராண்டு மழலை இருபாலை கிழக்குபாரதியின் பாதையில் ......

* தேனீ வளர்ப்போருக்கான இலவச ஆலோசனைகள் /உதவிகள்
* எமது மாவட்ட சங்கங்களின் உற்பத்திகளை ஏனைய இடங்களில் விற்பனை வசதிக்கான ஏற்பாடுகள்
* ஏனைய மாவட்ட சங்கங்களின் உற்பத்திப்பொருள் விற்பனை
* எண்ணை ஆலை அமைத்தல்
* போட்டோப் பிரதி
* அஞ்சலக முத்திரைகள் முதலியன
* பழுதடைந்த நோட்டுக்களை மாற்றுதல்
* கூட்டுறவுச் சங்கங்கள் / அலுவலகங்களில் பாவிற்பிற்குரிய காகிதாதிகள், படிவங்கள், புத்தகங்கள், மறு பதிப்புக்கள் (RE-PRINTS) CR. அப்பியாசக் கொப்பிகள் முதலியன ஒவ்செற் (OFF SET) முறையில் அச்சிடுவதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்து கொடுத்தல் (மாதிரிப் படிவங்களை எமது சங்கத்தில் பார்வையிடலாம்)

தொடர்பு -

செயலாளர் இருபாலை கிழக்கு பாரதி சி. க. கூ. சங்கம்

# பத்தாண்டுகளை ஊடறுக்கும் ஒரு பார்வை

யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் பத்தாண்டினைக் கடந்துள்ளது. ஒரு நிறுவனமாயினும், தனி மனிதனாயினும் இத்தகைய ஒரு நிலையை தனது வளர்ச்சியை, அல்லது தொடர்ந்து செல்லுவதற்கான வழியை நிதானிக்க நின்று சிந்திக்கின்ற வேளையாகக் கொள்ளுதல் மிகவும் பயனுறுதி கொண்டது.

இச்சமாசம் தனது உறுப்புரிமையாளர்களுக்கூடாக மாவட்டத்தில் சமூக பொருளாதார, பண்பாட்டுத் தளங்களில் எவ்வகையான தாக்கங்களை விளைவித்துள்ளது என்பதே இந்த வேளையில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். சிக்கன கடனுதவு இயக்கம் தனது பகைப் புலத்தில் அடிப்படையான பண்பாக கிராமிய குணாம்சங்களையே உள்ளடக்குவது ஒரு இயல்பு விதியெனலாம். அதன் கருத்து நகர்ப்புற மாந்தருக்கு சிக்கனமும் கடனுதவுதலும் இணங்காது என்பதல்ல. சிக்கன கடனுதவு சங்கங்கள் வேரோடி வளர்ந்ததற்கான ஒவ்வாச் சூழல் நகர்ப்புறத்தில் நிலவுதலே இத்தக் குணாம்ச நிலைக்கு வழிவிட்டுள்ளது.

சிக்கன கடனுதவு சங்க முறைமையானது முதன்மையாக இரு காரணிகளில் தொக்கி நிற்கிறது. சிறு சேமிப்பாளர்களும், சிறு முதலீட்டாளர்களும் தமது வாழ்க்கை நிலை மேம்பாட்டுக்காகச் சமுதாயத்தின் நியாய வரையரைகளை மீறாது பொருளியல் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதலே சிக்கன கடனுதவு இயக்கத்தின் நடைமுறைப் பொருள் எனக் கொள்ளுதல் பொருத்தமானதே. கிராமிய மட்டத்தில் மிகப் பெரும்பான்மையினரது வாழ்க்கை முயற்சி உண்ணாட்டு விவசாயத்திலும், சிறுகைத் தொழில் அவையும் இக்கிராமிய விவசாயத் துறையின் துணைத் தொழில்களிலுமே நிலை குத்தியுளது. வளர்முக நாடுகளுக்கே உரித்தான சில சிறப்புப் பண்புகள் இன்னும் அறுதி செய்ய முடியாத காலப்பகுதிக்கு இக்கிராமியத் துறையின் இயங்குதலை மிகுந்த செல்வாக்குக்குட்படுத்துகின்றன. குறிப்பாக மரபார்ந்த விவசாய மனமியல்புகள், சூழலிருந்து கூட்டறுக்காத அல்லது புரட்சிகரமான வாழ்க்கை நிலைகளுக்கு விரைந்திடம் வழங்காமை என்ற பண்புச் சுட்டுகள் பிரதானமாகக் கண்டு கொள்ளப்படவேண்டிய அம்சங்களாகும். இவை எவ்வாறிருப்பினும் உலக வளர்ச்சிப் போக்கினது விசையிலிருந்தும் இக்கிராமியத்துறை விலகியிருத்தலென்பதற்கு இடமேயில்லை. இவ்விருவகைப்பட்ட முரண்பாடுகளுக்கிடையிலான சமநிலை கொள்ளலில் தான் சிக்கன கடனுதவு சங்கங்கள் தமது செயற்பாட்டினை மேற்கொள்கின்றன. இச்சமநிலையில் நிகழும் தளம்பல்களே இச்சங்கங்களினது வளர்ச்சியையும் வாழ்வையும் தீர்மானிக்கின்றன.

இவ்விரைவிலக்கணப் பின்னணியுடன் இரு வகையான இச்சங்கங்களின் செயல் நோக்கத்தை அவதானிக்கலாம்.

1. இக்கிராமியத் துறையின் சிறு சேமிப்பாளர்களின் மிகை நிதியை இக்கிராமியச் சுற்றோட்டத்துக்கே உதவவல்லதாக திரட்டுதல்,
2. முதலீட்டை வேண்டி நிற்கும் கிராமிய விவசாயத்துறைக்கு அதன் பண்படியிலான நிதி வசதிகளை ஏற்படுத்தல்.

இவற்றை எய்துவதற்கான நிறுவன வடிவமே சிக்கனக் கடனுதவு சங்கங்களாகும். இச்சங்கங்கள் குக்கிராம மட்டத்தில் நிலைகொண்டு செயற்படுகையில் கிராமத்தின் அவசியங்களும், தொடர்பும் அதன் எல்லைகளுக்குள்ளே சிறைப்படாதுள்ளமையால் புதிய சவால்கள் எதிர் கொள்ளப்பட வேண்டியதாகின்றது. இச்சங்கங்களை முகங்கொள்வதற்கான திடங்கொண்ட போராடும், கட்டமைவொன்று அவசியமாகின்றது. இவ்வவசியத்தை உணர்ந்ததனாலும் வரலாறு தன் வழியில் நடந்து கொண்டே இருப்பதாலும் தான் யாழ் மாவட்ட சிக்கன கடனுதவு சங்கங்களின் சமாசம் பிறப்பதற்கான கருத்தரிப்பு நடைபெற்றது.

சமாசத்தின் பிறப்பை அறிந்து கொள்வதற்கான முயற்சியிலிருந்து இதன் பத்தாண்டு வளர்ச்சி இப்பிறப்பின் நோக்கங்களுடன் இசைவாகவுள்ளதா எனக் காணுவதற்கான நியாயத்தையும் முன்னளிக்கிறது. யாழ் மாவட்டத்தின் கிராமியதுறை என்பது மட்டுப்பாடுகளுடனேயே சிந்திக்கப்படல் வேண்டும். உயர்கல்வித் தரமும் துரித தொடர்பு முறையும் தூய கிராமியத் தன்மைக்கு இடமளிக்கவில்லை. என்னும் மிகவும் இறுக்கமான மரபு வாதமே கிராமிய கட்டுடல் தளர்வுறாமையைப் பேணுகிறது. இத்தன்மை

களே இச்சமாசத்தின் வளர்ச்சியில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்துகின்றது.

யாழ் மாவட்டத்தின் ஏறக்குறைய 30க்குக் குறையாத வணிக வங்கிகளும், இவ்வணிக வங்கிகளின் நேரடிக் கண்காணிப்பில் தொழிற்படும் 23 கூட்டுறவுக் கிராமிய வங்கிகளும் கடனுதவுதலிலும், சேமிப்புத் திரட்டுதலிலும் ஈடுபடுகின்றன. நகரப்பரம்பலின்படி யாழ் நகரில் 14 வங்கிகளும், ஏனைய பிரதேசங்களில் மீதிப் 16 வங்கிகளும் உள்ளன. ஒரு உதவி அரச அதிபர் பிரிவிற்கு சராசரி ஒன்றிற்குக் குறையாத வணிக வங்கிகள் உள்ளன. யாழ்ப்பாண குடிப்பரம்பலின்படி செம்மண் பிரதேச வலையமே பெருமளவு விவசாய நடவடிக்கைகளில் மையமாகவுள்ளது. ஆயின் இவ்வலயம் நகரின் விலகு எல்லையில் தொடங்கி கடலோரம் வரை நீடிப்பதுடன் வர்த்தக கேந்திர நகரங்களிலிருந்தும் ஒதுங்கியுள்ளது. சந்தைப் பட்டினங்களே இப்பிராந்தியங்களின் நகரத் தன்மையாக உள்ளன. இச்சந்தைப் பட்டினங்கள் இயல்பாகவே கிராமிய மக்களின் நாளாந்த வாழ்க்கையுடன் கலந்ததான வாழ்க்கை முறைகளைவலித்துளது இத்தகைய பின்புலமே யாழ் மாவட்ட சிக்கன சேமிப்புக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச உறுப்புரிமைச் சங்கங்களின் இயக்கத்திற்கு வழிவிட்டுள்ளன. ஏறக்குறைய 460 உறுப்புரிமைச் சங்கங்களின் செம்பாதி முற்குறித்த வலயத்துள் அடங்குவதுடன் இச்சாமாசத்தின் நட்வடிக்கைகளின் 7% மானவை இவற்றின் செயற்பாடுகளுடன் நெருக்கமானவை. சமாசத்தின் நடவடிக்கைகளை தேவையான தரவுகளுடன் முன்வைக்கத் தக்கதாக விபரங்கள் பேணப்பட்டிருக்காமையினால் இந்தப் பண்பினை எண்பிப்பது சிரமமாயுளது. ஆயினும் இந்த அனுமானம் வெறுமனமே எழுந்தமான முடிவன்று.

1982-ம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலப் பகுதியில் யாழ் மாவட்டம் முன்னைய சமூகப் பொருளியல், பண்பாடு முறைகளுக்கு முற்றிலும் வேறுபாடான நிலைமைகளுக்குள்ளாகின்றது. 1983-ல் இருந்து இம் மாவட்டம் தொடர்ந்து இராணுவ நடவடிக்கைகுட்பட்டுள்ளதால் முன்னெப் போதும் உணரப்படாத கட்டங்களுக்கூடாக மெதுவாக ஆனால் இலக்கொன்றுடனான முன்னேறுதலை அவதானிக்கலாம். நாம் முன்னர் குறிப்பிட்ட செம்மண் வலயமே இத்தகைய இராணுவ பாதிப்புகளுக்குப் பெரிதும் உட்படும் நிலப்பரப்பாகும். மக்களின் தொழில் துறைகள் பிரதானமான வேளான்துறையும் மீன்பிடியும் அவ்வப்போது மிகக் கடுமையான வேலைகளுக்குட்பட்டும் மூலதனமிடலுக்குமான வரவேற்பு அருகியும் வருதலும் இக் காலத்திற்குரிய தன்மைகளே. இருப்பினும் வியக்கத்தக்க வகையில் 1991 நிதியாண்டிறுதியில் சமாசத்தின் அங்கத்துவ சேமம் ரூ. 13665, 000/- (சீர்செய்யப்பட்டது) வாகவிருப்பது யாழ்ப்பாண மரபு வழிக்குணாம்சத்துக்குரியது. எந்த நிலையிலும் இரண்டுசதம் மிச்சம் பிடித்தல் இந்த மண்ணுக்கே உரியது.

இதுவரை சமாசத்தின் பின்னணி நிலைகளுக்குப் பெரிதும் கவனம் செலுத்தியமை இச் சமாச வளர்ச்சியை மட்டிடலுக்கு இப்புறச்சூழல் பற்றிய அறிமுகம் அவசியமென உணர்ந்தமையலேயாகும். மனிதன் ஒருவனது வளர்ச்சியே பௌதீக பண்பியல் முறைகளில் அளவிடலைப் போலவே நிறுவனமும் அளவிடப்படுதலே பொருத்தமுடையது. சமாசத்தின் 1991 முடிவடைய உள்ள நிலவரத்தினை முழுமையாக நிதிக் கூற்றுக்களினூடாகக் கற்று அறிக்கையிடல் சாத்தியமானது எனினும் இக்கட்டுரை முயற்சியினை உரித்தாக்கியதல்ல. ஆயினும் வளர்ச்சி என்பது பருமனைக் குறிப்பதால் வெறுமனே தொட்டுக் கொள்ளாமல் தப்பிவிடுதல் எளிதல்ல. பத்தாண்டுகளின் இறுதியில் சமாசம் உறுப்புரிமைச் சங்கங்களினதும், கைதேர்ந்த அக்கறையாளர்களுடனுமான உறவுமுறையைச் சுலபமாகவும் முறியாமலுமுளதா என்பதைக் காணுதல் கூடும். இதைப்புரிய தொடர்களூடாகவே நிரல் படுத்தப்பட்டுள்ளது. (சீர் செய்யப்பட்ட எண்கள்)

| | | | |
|---|---|---|---|
| அங்கத்துவ சேமம் | 13,665,000/- | சாதாரண அங்கத்துவ கடன்கள் | 6,395,000/- |
| | | சுயமுயற்சிக் கடன் | 7,513,000/- |
| | | | 13,908,000/- |
| தேசிய வீடமை. கடன் | 5,319,000/- | வீடமைப்புக் கடன் | 5,167,000/- |
| வெளிநாட். கடன் உதவி | 8,377,000/- | வெளிக்கடன் | 2,520,000/- |
| | | விழாக்கடன் | 605,000/- |
| | | இளைஞர் கடன் | 59,000/- |
| | | அபிவிருத்திக் கடன் | 101,000/- |
| | | விவசாயக் கடன் | 965,000/- |
| | | உயர் கல்விக் கடன் | 205,000/- |
| | | வியாபாரக் கடன் | 145,000/- |
| | | வறியோர் கடன் | 316,000/- |
| | | விதவைகள் கடன் | 605,000/- |
| | | வாகனக் கடன் | 59,000/- |
| | | | 5,580,000/- |

அங்கத்தவர்களின் சேமிப்பு முழுமையாக அவர்களின் முதலீட்டுக்காகவே சுற்றோட்டத்திற்கு விடப்பட்டுள்ளது. அரசின் முகவராக விளங்கிக் கொடுத்த வீடமைப்புக் கடன் அதே அளவில் கைமாறியுள்ளது. வெளிநாட்டுக் கொடையில் ஏறத்தாள 3 மில்லியன் ரூபா அங்கத்தவரின் நேரடிப் பயன்பாட்டிற்கு அல்லது நோக்க அளவில் குறைவடைந்தமை ஒரு பாதகச் சுட்டுதலாகவே தென்படுகிறது.

சமாசத்தின் நிதி வலுவைக் கணித்து அதன் இயல்புடமையை மதிப்பிட எனக்குத் தத்துவமின்மையால் அங்கு காலை வைப்பது உசிதமற்றது ஆயின் சமாசத்தினது நாளைய செயற்பாடுகள் மேற்காண் சமன்பாட்டிலேயே முழுமையாகத் தங்கியிருப்பதால் இதை மீளாய்தலே போதுமானதென்பதே எனது கருத்து. கடன் மீளும் தன்மையிலே துரித முயற்சி இன்றியமையாததாகும். இவ்வறவீட்டு வீதம் கடன் காலப்பரம்பலினால் திரிபுபட்டிருப்பது வெளிப்படுத்தப்படல் வேண்டும். சிலவகைக் கடன்களின் அறவீடு கால அவகாசம் வழங்கியிருப்பதனால் சரியான நிலவரத்தைக் கணிப்பிடுதல் சுலபமாகவில்லை. எவ்வாறாயினும் கடன் அறவீடு கணிசமான அளவிற்கு உயர்த்தப்படுதல் விரும்பத்தக்கது. நிலையுருவாகத்தக்க குறிகள் உள்ளதை ஏற்க வேண்டும். இதற்கான உண்மைக் காரணிகளைக் கண்டறிய சமாச மட்டத்தில் எத்தனங்கள் எடுக்கப்படல் வேண்டும். உறுப்பினர்களின் வாழ்க்கையில் அண்மிய போர் விளைவித்த தாக்கங்களின் சரியான மதிப்பீடுகள் இல்லாதவிடத்து போரினால் பாதிக்கப்படாதவர்களும் இந்தச் சாதக நிலையைப் பயன்படுத்தும் வாய்ப்புக்கள் கிட்டிவிடும். பொருளாதார முடக்கம் வெகுவாக மக்களைப் பாதித்துள்ளதால் கடன் மீளளித்தல் இயல்பாகவே சுருங்கும் என்பதும் ஓர் உண்மையாகும். எதுவாயிருப்பினும் பொதுவான நிலமைகளே சமாச நடவடிக்கைகளிலும் பொருத்தமான முடிவுகளாக இருத்தல் ஆரோக்கியமானதல்ல; ஒவ்வொரு போக்கும் அதன் நடைமுறையியங்கியலுக்கேற்பவே முடிவு செய்யப்படாவிடின் கடும் போட்டிச் சூழலிலும் வணிக வங்கிகளுடன் நின்று நிலைப்பது எளிதன்று. ஏனெனில் சிக்கன கடனுதவு முறையின் ஒரே உத்தரவாதம் நாணயத்தைச் சொத்தாக மதிக்கும் மன இயல்பும், சமூகக் கணிப்புகளுமாகும். இவ்விழுமியம் கிராமிய மட்டத்தில் மாற்றத்திற்குட்படல் அதன் பாதக விளைவுகள் சமாசத்தினால் பொறுக்கப்பட வேண்டும். அதற்கான வல்லமை சமாசத்திற்கு எளிதில் கிடைக்க முடியாது.

சமாசத்தின் நடவடிக்கை இருமனைப்பட்டிருப்பது தொடக்கத்தில் தவிர்க்க இயலாததெனினும் பத்தாண்டு முடிகிறதே எனும்போது புதிய பரிணாமங்கள் தோற்றம் பெற்றிருக்க வேண்டும். உறுப்பாண்மைச் சங்கங்களின் உறுப்பினர்களின் உற்பத்தி, சேவைகளின் அதிகரிப்புக்கு வேண்டிய நுட்ப அறிவையும் தளவசதிகளையும் அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படாமை ஒருகுறைபாடெனவே குறிப்பிடலாம். உறுப்பினர்களின் உற்பத்திகளைத் திட்டமிடலும், மாவட்ட நிலமைகளுக்கமைவாக இவற்றினை ஒழுங்குபடுத்தலும் மிக அவசியமான தொழிற்பாடுகள். மாவட்டத்தின் உற்பத்தியில் சமாச உறுப்பினரின் பங்கு பற்றிய தகவல்கள் திரட்டுதலும் தொடர்ந்து அவற்றின் மீதான கற்கைகளை மேற்கொள்ளலும் ஒரு தேவையாயிருப்பதை சமாசம் கவனத்தில் எடுத்தமைக்குச் சான்றுகள் இல்லை. இதில் மற்றொரு வேதனைக்குரிய நிலமை. சமாசம் ஒரு வாணிப அதிலும் நுகர்ச்சிச் சேவையிலீடுபட்ட கூட்டுறவுச் சங்கங்கள் போல இலாபத்தின் பால் ஈர்க்கப்பட்ட பரிதாபமாகும்? இப்போக்கு விரைந்து கைவிடப்படாவிடின் சமாசம் அதனது செயற்பாட்டை இழத்தல் எவ்விதத்திலும் தடுக்கப்பட முடியாதொன்று சமாசத்தின் செயல் நோக்கம் பற்றிய தெளிவு உறுதி செய்யப்படல் மிகவும் அவசியமாகிறது.

சமாச உறுப்புரிமைச் சங்கங்களின் பங்களிப்புப் பற்றியும் அவதானித்தல் நன்று. சமாச வளர்ச்சியென்பது இவ்வுறுப்புரிமையாளர்களின் ஈடுபட்ட அளவிலேயே அமையும். உறுப்பினர்களது பங்களிப்பைப் பொறுத்தளவில் ஒரு ஏற்கத்தக்க நிலைகள் காணப்படவில்லை. உதாரணமாக கடன்கள் மீதான கண்காணிப்பு சேமிப்பின் திரட்சிக்கான வழிமுறைகள் பற்றிய கரிசனையும், முன்மொழிவுகளும் புதிதாகக் கிடைத்திருப்பதாகக் காணப்படவில்லை. இது சமாசத்தின் நீண்டகால நோக்கில் நலந்தருவதாகவில்லை. விரிவாக்க நடவடிக்கைகளில் சமாசப் பணியாளர்கள் மட்டுமே ஈடுபடுகின்றனர். கூட்டுறவு முறையில் அதுவும் நாணய சங்க முறைமையின் உறுப்பினர்களின் நேரடிச் செயலாக்கம் குறைவாயிருப்பது இம்முறையின் சீரான செல்வழிக்கு இடமளிக்காது. மாறாக ஒரு பணிக்குழு செயலாட்சிக்கு வித்திட்டு ஏனைய வகைக் கூட்டுறவுச் சங்கங்களில் நிலவும் உண்மையான உடமையாளர் எவரேனும் சிக்கல்களைத் தோற்றுவிக்கும். பாரிய அளவிலான கட்டமைவைச் சமாசம் கொண்டுள்ளதால் இத்தகைய முரண்பாடு உருவாகியுள்ளது. உரிய

அளவின் உறுப்பினரின் பங்களிப்பினை பெறுதலுக்கூடாக இதைத் தீர்த்தல் ஒன்றும் பெரிதாக இருக்காது.

இதுவரையில் முழுமையான அக்கறையும் சமாசத்தின் தோற்றம் பற்றியே செலுத்தப்பட்டது. குணங்குறிகளும் அதன்பௌதீகக் காரணிகளுடனே தொடர்புறுத்தியே ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. இதேயளவில் சமாச வளர்ச்சி பண்புக் குறிகளூடாகவும் நோக்கப்படுதல் சமநிலையான பார்வைக்கு வசதி செய்யும். யாழ் மாவட்டக் குடித்தொகையில் ஏற்பட்ட பால் முறையான சமூக மாற்றம் சமாச இயக்கத்தில் வெளிப்பாடாகவேயுளது. சங்க உறுப்பினரின் 80% மானோர் பெண்களே. ஆர்வத்துடன் செயற்படும் இவ் எண்ணிக்கையினர் முன்னர் சமுதாயக் கணிப்பீடுகளால் கட்டுண்டு இவ்வகைப் பொறுப்புக்களைச் சுமக்காதவர்கள். கிராமியத் தலைமை இன்று பாரிய மாற்றங்களைத் தழுவியுள்ளதை, சமாசத் தலைமையினை இந்த இளம் பெண் தலைமுறையினர் கையேற்றிருப்பதிலிருந்து அறிய முடியும். கிராமியத்தில் வளாவியிருந்த இவ்வுழைப்புச் சக்தி இன்று வெளிக்கொணரப்பட்டுள்ளது. சேமிப்பின் முழு ஊக்கவிசையும் பெண்குலத்தவரேயாவர். ஆண்கள் யுத்த சூழலால் மண்ணிலிருந்து விலகியதால் விளைந்த வெற்றிடத்தை இவர்கள் தங்களின் தோள்களில் தாங்கியுள்ளனர். பெறப்பட்ட கடன்கள் உற்பத்தியில் செலுத்துவற்கான உறுதியும் அதற்கான உழைப்பை நல்கும் உரமும் இவர்களிடத்தேயிருப்பதை அறவீட்டு விகிதாசாரம் புலப்படுத்துகிறது. இதுமிகவும் வரவேற்கத் தக்கதென்பதுடன் சிக்கனம் பற்றிய மேலதிக கருத்துருவாக்கமும்கூடவே வளரும் சாதகம் உண்டு. மாவட்டத்தில் நிலவும் சமூக மாற்றம் படம்பிடிக்கப்பட்டது போல சமாசத்தினூடே வெளிவந்துள்ளமை கிராமியஅடிமட்டத்தில் இதன் உறுப்புரிமை சார்ந்துள்ளதையே தெளிவாக்குகிறது. இதுவளர்ச்சிக்கான நற்குறியெனக் கொள்ளலாம். தொடர்ந்து வரவுள்ள காலம் சமாசத்துக்கு பல சவால்களை முன்வைக்கும் என்பதே எதிர்பார்ப்பாகும். போர்ச்சூழலில் நிலையான எடுகோள்களின் அடிப்படையில் திட்டமிட்டுச் செயலாற்றுதல் இலகுவன்று. யாழ் மாவட்டம் இதே நிலைமைகளின் விருத்திப் போக்கில் தன்னைக் கட்டமைப்பது ஒரு தேவையாக மாறும். அவ்வேளை சமாசம் இந்தப் பொதுப் போக்கிற்கு இசைவாகத் தன்னை வழிப்படுத்துதல் மூலம் வல்லது வாழும் என்ற விஞ்ஞான உண்மையைப் பற்றி நிற்க முடியும். உற்பத்தி சார்ந்த முதனிலைத்துறைகளான வேளாண்மையும், மீன்பிடியும் தமது தொழில் முறைகளை மாற்றி மறுசீரமைக்குட்படும். அடர்த்தி மிக்க மக்கள் வாழிடங்களிலே இந்நடவடிக்கைகள் இடம்பெறும். அதனால் சேவைத்துறைகளும் விரிவடையும். அரச நிறுவனங்கள் இச்சூழலில் ஆற்றவிருக்கும் பங்கு மிக அற்பமாகவேயிருக்கும். இந்த வெற்றிடத்தை ஏலவே அரசசார்பிலான நிறுவனங்கள் மெல்ல மெல்ல ஆட்கொள்ளத் தொடங்கியுள்ளன. சமாசம் இந்தத் துறைகளில் தன்னையீடுபடுத்துதல் அதனது வருங்காலத்துக்கு இடங்கொடுக்கும்.

பொதுவாக கூட்டுறவு நிறுவனங்கள் தமது செயற்திறனையும் வளர்ச்சியையும் நிதிக் கூற்றுக்களின் காட்சிப்படுத்தல் மூலம் தமது உழைப்பினையும் விளைவையும் காட்ட எத்தனிப்பது வழமையிலுளது. சமாசம் இந்தக் குணாம்சத்தை உதறிவிடுதல் என்பது சாத்தியப்பாடானதல்லவாயினும் இதனுடன் ஒரு சமுதாய நிறுவனம் தனது காலக்கண்ணாடியினையும் கண்டுகொள்ள முயல்வது தவறேயல்ல. இவ்வடிப்படையில் இம்மாவட்ட உழைப்பவர்களுடன் வாழ்வுடன் எல்லா நிலைமைகளிலும் இணைந்து நிற்பது அவர்களின் நம்பிக்கையைப் பெறும் ஒரு வழியாகும். அதன் மூலம் பலமான ஒரு தளத்தை அமைத்துக் கொண்டு எதிர்காலத்தை நம்பிக்கையுடன் நோக்குதல் சாத்தியமாகும். கடந்த காலங்களில் இம்மாவட்டம் உள்ளாகிய அவலங்களின் விளைவாகத் துயரற்ற வறிய பிரிவினருக்கும் விதவைகளுக்குமென சில வசதிகள் செய்யப்பட்டிருப்பது பொருத்தப்பாடான அடையாளங்களே. சமுதாயத்தின் இந்தப் பிரிவினரின் உழைப்புச் சக்தியை முடக்காமல் மிளிரச் செய்வதனால் உற்பத்தியதிகரிப்பதுடன் இவர்கள் தலை நிமிர்ந்து வாழும் நிலையும் உருவாகும். ஆனால் இந்தப் பெரும் தூண்டுதல்களை எந்தத் திட்டக் கடதாசிகளாலும் வெளிப்படுத்த முடியாதென்ற பேருண்மை உள்ளத்தில் நீக்கமற நிலைந்திருக்க வேண்டும். அது சத்திய வேள்விதான். இந்த வேள்வி நிச்சயம் வெற்றியைத் தொட்டு நிற்கும். சமாசம் இதைச் சரிவர கடைப்பிடிக்க வேண்டுமென்பதே எனது பிரார்த்தனை.


சி. கந்தசாமி,
தலைமையலுவலகப் பரிசோதகர்,
கூட்டுறவு அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

" நாடென்ன செய்தது உனக்கு
எனக் கேள்விகள் கேட்பதை விடுத்து
நீயென்ன செய்தாய் அதற்கு
என நினைத்தால் நன்மை உனக்கு "

★ யூனி வேர்சல் ★

கந்தர் மடம், யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் மாவட்ட
சிக்கன கடன் வழங்கு
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்
தனது



10வது ஆண்டு நிறைவை
கொண்டாடும் இவ்வேளையில் அதன் சேவை
மென்மேலும் சிறப்புற வேண்டுமென
வாழ்த்துகின்றோம்

நல்லூர் ப. நோ. கூ. சங்கம்
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்.

## 10 வது ஆண்டு நிறைவினை

கொண்டாடும் யாழ் மாவட்ட சி. க. கூ. ச. சமாசத்தினை
சிறப்புடனே எதிர்காலத்தில் செயல்படுத்துவதற்கும்
அங்கத்துவ சங்கங்களின் தேவையைப் பூர்த்தி செய்யவும்
தனது சேவையினை வழங்கி
அங்கத்தவர்களின் சமூக பொருளாதார கலை கலாச்சார
அபிவிருத்தியடைய உதவிட வேண்டுமென வாழ்த்துவதில்

**பெருமிதம் அடைகின்றோம்**

ஸ்ரீ குமரன் சி: க. கூ. சங்கம், சரசாலை — சாவகச்சேரி

---

**எமது மனமார்ந்த**

**வாழ்த்துக்கள்**



# MURUGAN RICE MILL

*Dealers: IN AGRO CHEMICALS & POLTY FOOD*

**முருகன் அரிசி ஆலை**

**KANDY ROAD, CHAVAKACHCHERI**

யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க சமாசம்

## 10வது ஆண்டு
## நிறைவு விழாவை


பூர்த்திசெய்வதையிட்டு
எமது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்கிறோம்.

மென் மேலும் வளர்ச்சியடைந்து தமிழீழ மக்களுக்கு
நிறைந்த சேவை செய்ய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**உங்கள் தேவைகளை நிறைவு செய்ய**
**இன்றே நாடுங்கள்**

## புங்குடுதீவு - நயினாதீவு
**ப. நோ. கூ. சங்கம்**

எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்





**MURUGAN RICE MILL**
Dealers in Agro Chemicals and
Poulty Food
முருகன் அரிசி ஆலை
Kandy Road
Chavakachcheri.

10 வது ஆண்டு நிறைவு விழாவை
கொண்டாடும் யாழ் சி. க. கூ.
சங்கங்களின் சமாசத்திற்கு எமது
உளங் கனிந்த
**நல்வாழ்த்துக்கள்**

பதிவு இல: J/1203 பதிவு திகதி: 31-12-52

கூட்டுறவுக்கேற்ப எமது சேவைகள்

1 அங்கத்தவர் சேமிப்பு
2 மாணவர் சேமிப்பு
3 நிலையான வைப்பு
4 பலவகையான கடன் திட்டங்கள்

**நீர்வேலி பகவதி சி.க.கூ.ச.**
நீர்வேலி

கூட்டுறவுச் சேவையில் ஒரு தசாப்தத்தை
பூர்த்திசெய்துள்ள சமாசத்திற்கு
எமது நல்வாழ்த்துக்கள்

அங்கத்தவர்.


**கட்டைவேலி - உடுப்பிட்டி**
தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுச்
சங்க ஊழியர்
சிக்கன சேமிப்பு கடன் நிவர்த்திக்
கூட்டுறவுச் சங்கம்

யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தனது

**10வது நிறைவினை**

கொண்டாடும் வேளையில்
அதனை வாழ்த்துவோம்

நீர்வேலி ப. நோ. கூ. சங்கம்
நீர்வேலி,



# தெல்லிப்பழை - துர்க்காபுரம்

மத்திய

## சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்

" நலிந்தோர் வாழ்வை நலம்
பெறச் செய்வது கூட்டுறவு "

யாழ்ப்பாண மாவட்ட சிக்கன கடன்

வழங்கு கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின்

## பத்தாண்டு விழாவைச்

சிறப்புற வாழ்த்துகின்றோம்

சமாசத்தின் பணி மென்மேலும்வளரட்டும்

எட்டாம் கட்டை
தெல்லிப்பழை

தெல்லிப்பழை-துர்க்காபுரம்
மத்திய
சி. க. கூ. சங்கம்



வாடிக்கையாளர்களுக்கு ஓர் நற்செய்தி !

**நாடுங்கள் சங்கத்தின் சேவையை!**

**உதவுங்கள் சங்கத்தின் வளர்ச்சிக்கு**

உங்களுக்குத் தேவையான சகலவிதமான பொருட்களையும்
சேவைகளையும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

உங்களின்

## கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.ச.

- O *பாண் சாலையின் இனிய உற்பத்திகள்*
- O *சிற்றுண்டிச் சாலைகளின் தர மிகு தயாரிப்புகள்*
- O *உங்கள் வைபவங்களை சிறப்பிக்க எமது சேவைகள்*
- O *கிராமிய வங்கி வழங்கும் கவர்ச்சி மிகு வட்டி வீதங்கள்*

**இவை மட்டுமா !!!**

*போர்க்கால சூழலில் உள்ளூர் உற்பத்தியாளரை ஊக்குவிக்க உங்களின்
டல்பொருள் அங்காடியை நாடுங்கள் நலம் பெறுவீர்கள்*

**கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்கம்**

**கரவெட்டி.**

---

யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)

# "கால் நடை வளர்ப்போரே!"



உங்களுக்கு தேவையான கறவைத்தீன். கோழித்தீன்
என்பனவற்றைப் பெற்றுக்கொள்ளவும்.

**உங்களின் பால் உற்பத்தியைச் சந்தைப்படுத்தவும்
எம்மை நாடுங்கள்**

தலைமை அலுவலகம்: கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.

கிளைகள்:
1. இல. 2, சந்தைக் கடை, இணுவில்
2. கமநல சேவைகள் நிலையக் கட்டிடம்,
மீசாலை வடக்கு, கொடிகாமம்

# வட-கிழக்குப் பிரதேசத்தின் பொருளாதார சமூக அபிவிருத்தி

வட கிழக்குப் பிரதேசம் வளம் பல நிறைந்தது. மண்வளத்தில் குறைந்தது இயற்கை அன்னை இங்கு வளங்களை வாரி வழங்கியுள்ளாள். எனவே இப்பகுதியில் பொருளாதார அபிவிருத்தி இளைஞரின் விழிப்பில், நம்பிக்கை வைப்பதில், மக்களின் உழைப்பில், வளங்களை இனம் காணுவதில், திட்டமிடுவதில் நிர்வகிப்பதில் பெருமளவில் தங்கியுள்ளது.

" நம்மால் முடியும் என்ற எண்ணம் மனத்தில் தோன்றும் போது அதனைச் செய்து முடிக்கும் தார்மீக வலிமை உடலில் பிறக்கின்றது. திரும்பத் திரும்ப எண்ணும் எண்ணம் நம்பிக்கையாகின்றது. நம்பிக்கை நம்மை செயற்படத் தூண்டுகின்றது " ராவ்வால் ரோடிரைன் என்ற தத்துவஞானியின் கூற்று மனம் கொள்ளத் தக்கது.

வட - கிழக்குப் பிரதேசம் கடுமையான துன்ப துயரங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இப் பிரதேச மக்கள் அனுபவித்து வரும் வாழ்க்கை நிலைமைகளை விட சிறந்த நிலைமைகளை யாராவது இன்றைய சூழலில் எதிர்பார்ப்பது புத்திசாலித் தனமாக இருக்க முடியாது, ஆனால் அதேவேளை அவர்கள் தமது பங்களிப்பைப் பற்றிச் சிந்திப்பதும் செயற்படுவதும் பொருத்தமாக அமையும். எமது பிரதேசத்திற்கு உகந்ததான அபிவிருத்தித் திட்டங்கள் தீட்டப்பட வேண்டும். அவை குறுகிய கால, நீண்ட கால, திட்டங்கள் என வேறு வேறாக அமையலாம். அவை பௌதிக, இரசாயன, பொறியியல் விஞ்ஞானங்கள் வளர்ச்சிக்கு வழி வகுக்க வேண்டும். விஞ்ஞான வளர்ச்சியின் நுட்பங்களை அபிவிருத்தி நோக்கிய திசையில் பயன்படுத்த வேண்டியது அவசியம் ஆகும். வாலிபர்கள் இத்துறையில் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பயிற்சி பெற ஊக்குவிக்கப்படல் வேண்டும். அனுபவம் பெற்ற இளைஞர்களும் பல்கலைக்கழக மாணவர்களும் கிராம மக்களின் முயற்சிக்கு உதவ வேண்டும். குறிப்பாக விஞ்ஞானப் பாட நெறிகளைக் கற்கும் மாணவர்கள் விவசாயிகளுக்கு பசளை, கிருமிநாசினி, நீர் போன்றவற்றின் உபயோகத்தை விளக்க வேண்டும். சிறிய அளவில் வைக்கும் தொடர்பு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தாது. கிராமங்கள், சர்வகலாசாலைகளுக்கூடாகச் செல்ல முடியாது. ஆனால் பல்கலைக்கழகம் குறிப்பிட்ட அளவில் கிராமங்களுக்கூடாகச் செல்ல முடியும். உணவு உற்பத்தி, புனரமைப்பு, முறைசாராக்கல்வி போன்ற பல்வேறு துறைகளில் அறிவுரை வழங்கலாம்.

நாட்டிற்குத் தேவையான உணவுப் பொருட்கள், உபஉணவுப் பொருட்களில் பல எமது பிரதேசத்திலேயே உற்பத்தி ஆகின்றன. இவற்றின் உற்பத்தியை மேலும் அதிகரிக்கலாம். " ஆசியாவின் தானியக் களஞ்சியம் " என்ற பெயரை அந்நியர் வருகைக்கு முன் இலங்கை பெற்றிருந்தது. இதற்கு வட-கிழக்கு மாகாணங்களின் பங்களிப்பு இருந்தது என்பது வரலாறு பகரும் உண்மை. நாட்டின் தேவையிற் பெரும் பகுதி இங்கேயே உற்பத்தியாவதனால் அரசாங்கம் அவற்றை ஊக்குவிக்க உத்தரவாத விலைத் திட்டத்தை அமுல் செய்தது. ஆனால் இத் திட்டம் நிறைவாக அமுலாக்கப்படவில்லை.

வட – கிழக்குப் பிரதேசத்தில் நெல் உற்பத்தி பெருமளவில் மேற் கொள்ளப்பட்ட போதிலும் நீர்பாசனவசதி, உரம், சந்தைப் படுத்தல் போன்றவை பிரச்சனைகளாகவே இருந்து வருகின்றன. ஆறுகளை வழிப்படுத்தி கனகராயன்குளம், பூவரசங்குளம், இரணைமடு, விசுவமடு, முத்தயன்கட்டு என்பவற்றிற்கூடாகச் செலுத்தினால் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தி சுயதேவையை பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும். வெளிநாடுச் செலவாணியை ஈட்டிக் கொடுக்கவல்ல வளங்கள் பல உள அவற்றையும் விருத்தி செய்ய வேண்டும்.

மரக்கறி வகைகள் மிக மலிவான விலையில் மாசி முதல் புரட்டாதி வரை விற்கப்படுகின்றன. இவற்றை உரியமுறையில் சந்தைப் படுத்த முடியுமானால் விவசாயிகள் பெரிதும் பயனடைவார்கள். இதன் மூலம் நடுவர்கள் அல்லது தரகர்கள் விவசாயிகளைத் துன்புறுத்துவதனைத் தவிர்த்துக்கொள்ளலாம், சில பழங்களை தகரத்தில் அடைத்தல், பழப்பாகு தயாரித்தல் போன்ற செயற்பாடுகளுக்கு வழிவகைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். பப்பாசி, தக்காளி, போன்றவை பெருமளவில் உற்பத்தி செய்யக்கூடிய காலநிலை உண்டு. பழங்களை

தகரத்தில் அடைத்து ஏற்றுமதி செய்யலாம் எமது பகுதியில் பலர் இன்னமும் பழைய முறைகளை கையாளுகின்றனர். இதனால் நமக்குக் கிடைக்கும் விளைவு குறைவாக உள்ளது. விரைவாகப் பெருகிவரும் சனத்தொகைக்கு அமைவாக உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். மரபார்ந்த அபிவிருத்தி முறையில், அணுகுமுறையில் புதிய திருப்பம் உலகளாவிய ரீதியில் ஏற்பட்டிருக்கின்றது இவ்வகையில் யப்பான், பர்மா போன்ற நாடுகளில் அதிக விளைவை உற்பத்தியில் பெறுகின்றனர். இதனை நாமும் பின்பற்றத் தவறக்கூடாது. மக்கள் கூட்டுறவு அடிப்படையில் நெற்சாகுபடி செய்தால் சிரமங்கள் குறைவாக இருக்கும். எமது பகுதியில் கூட்டுறவு இயக்கத்தின் செயற்பாடுகள் வளர்ச்சி அடைந்து வருகின்றன. இவ் இயக்கம் அபிவிருத்தி முயற்சியில் பல உதவிகளைச் செய்து வருகின்றது. ஆனால் துரித வளர்ச்சிக்குப் போதுமான திட்டங்களை கூட்டுறவு இயக்கம் தயாரிக்க வேண்டும். மக்களும் கூட்டுறவுத் துறையில் பங்கேற்று நாட்டின் முன்னேற்றத்துக்கு உழைக்க முன்வர வேண்டும்

மேலும் பொருளாதார விருத்திக்கு மாடு, ஆடு, பன்றி, கோழி வளர்ப்பு மிகவும் உதவியளிக்கும். பண்ணை முறையில் விருத்தி தேவை மிருகங்கள், பறவைகள் பராமரிப்பு முறைகள் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். மிருக வளர்ப்புக்குத் தேவையான உணவு வகைகளையும் உற்பத்தி செய்யவேண்டும். மரங்கள் நாட்டுவதில் நாட்டம் கொள்வதோடு காடுகளை அழிக்காது பாதுகாக்க வேண்டும் சூழல் பாதுகாப்பு இன்றி அமையாதது.

பருத்தி, கரும்பு, பனம் பொருள், தெங்குப் பொருள், மர முந்திரிகை உற்பத்தி மேலும் விருத்தியடைய ஆவன செய்ய வேண்டும். சீனி கடதாசி உற்பத்தி கிழக்கில் பெரும் வெற்றியளித்துள்ளது. கடதாசிக்குரிய மூலப் பொருள் வைக்கோல் போதியளவு உண்டு. தும்புத் தொழிற்சாலையை விருத்தி, அடையச் செய்யலாம். வட மாகாணத்தில் எண்ணெய் வளம் உண்டு என்று பல ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். வடக்கில் ஆறுகள் இல்லா விட்டாலும் நீருக்கு தட்டுப்பாடு ஏற்படாது என இங்கு வருகை தந்த இஸ்ரேலிய நிபுணர்கள் கூறியுள்ளார்கள். ஆனால் தண்ணீரை அளவாக உபயோகிக்க வேண்டும் என்றும், மழை நீரைத் தேக்கி வைக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்கள். உப்புத் தன்மையுடைய நிலங்களை நன்நிலங்களாக மாற்றுவதற்குரிய வழிவகைகளையும் செயற்படுத்த வேண்டும். மூல வளங்களுக்கு ஏற்ப பல தொழிற்சாலைகளை ஆரம்பிக்கலாம் எமது பிரதேசத்தில் சில பகுதிகளுக்கு தகுந்த போக்குவரத்து வசதி இன்மையால் நல்ல வளங்கள் பயன்படுத்தப்படாமல் உள்ளது. சிறந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆய்வு நிறுவனங்கள் மேலும் அமைக்கப்படல் வேண்டும்.

வட-கிழக்குப் பிரதேசம் பீன்பிடிக்கு உகந்த பிரதேசமாக மிளிர்கின்றது. இலங்கையில் மொத்த மீன்உற்பத்தியில் சுமார் 40% வட-கிழக்குப் பிரதேசத்திலேயே பெற்றுக் கொள்ளப்படுகின்றது. என்று புள்ளிவிபர அறிக்கைகள் தெரிவிக்கின்றன. நீர் வளர்ப்பு ( Aqua Culture ) முல்லைத்தீவில் இருந்து பொத்துவில் வரை இறால், மீன் வளர்ப்புக்குப் பொருத்தமான நீர்வளம் இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. 1980இல் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப முயற்சி வெற்றியளித்துள்ளது. வியக்கத்தக்க சாதனை நிலைநாட்டப்பட்டது. ஒரு கெக்ரேயருக்கு 1000 1200 கிலோகிறாம் இறால் விளைவு பல நாடுகளில் உண்டு. ஆனால் மட்டக்களப்பில் 2000 கிலோகிறாம் ஒரு கெக்ரேயருக்கு விளைந்துள்ளது. 1987இல் சேதம் ஏற்பட்டிருக்காவிட்டால் பல இடங்களில் ( கிழக்குக்கரையோரங்களில் ) பண்ணைகளை ஏற்படுத்தி இருக்கலாம். மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, மன்னார், பேசாலை, மயிலிட்டி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்கள் மீன்வளம் பெற்றவை. மீன்பிடிப் பயிற்சிப் பாடசாலை, தகரத்தில் மீன் அடைக்கும் தொழிற்சாலை ஆகியவை இன்றி அமையாதவை ஆகும் மேலும் நவீன முறையில் மீன் பிடிப்பதற்குரிய முறைகள் அதிக இலாபத்தை ஈட்ட உதவி புரியும். தேவையான இடங்களில் நன்னீர் மீன் வளர்ப்புத் திட்டம் மேற்கொள்ளப்படலாம். கடல் சம்பந்தமான தொழில் நுட்ப அறிவைப் பெறுவதற்குரிய பாடநெறிகள், சர்வகலாசாலைகளிலும், தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் போதிக்கப்படல் வேண்டும். அத்துடன் உப்பு உற்பத்தித் தொழிற்சாலைகள் விருத்தி செய்யப்படல் வேண்டும்.

வட - கிழக்குப் பிரதேசத்தில் காணப்படும் இயற்கை வனப்பும் கடற்கரைச் சூழலும் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளை கவரக்கூடியதாக உள்ளன. மேலும் சிறந்த துறைமுகங்கள் அமைக்கக் கூடிய வாய்ப்புக்கள் உண்டு. 1930 - 1942 வரை வடபகுதிக் கூட்டுறவு இயக்கம் யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியாவுக்கு கப்பலில் புகையிலை ஏற்றுமதி செய்துள்ளது. யாழ் புகையிலைக்கு நல்ல கேள்வி இருந்தது

யாழ் மலையாளம் புகையிலைக் கம்பனி திருவாநந் திரத்தில் ( தென் இந்தியா ) இருந்தது. யாழ்ப் பாணத் துறைமுகத்தில் இருந்து பொருட்கள் அனுமதிக்கப்பட்டன. எனவே யாழ் துறை முகத்தை விஸ்தரிக்கலாம். சிங்கப்பூர் போன்ற நகர அமைப்புக்கும் துறைமுக அமைப்புக்கும் வாய்ப்புக்கள் உண்டு.

எமது பிரதேசத்தில் வேலைவாய்ப்பின்மை காணப்படுகிறது. போதிய வேலை இன்மை, உராய்வு வேலை இன்மை, பருவகால வேலை யின்மை இச்சை வேலை இன்மை என வேலை இன் மையை வகைப்படுத்தலாம் இது பொருளாதார விருத்தியையும் அமைதியையும் பாதிக்கின்றது. வாலிபர்கள்பொருத்தமான தொழில் கிடைக்காத தனால் விரக்தி அடைகின்றார்கள் தொழில் மகத்துவம்பற்றியும் செய்யும் தொழிலே தெய்வம் என்ற உன்னதமான உண்மையையும் உணரச் செய்ய வேண்டும். உடை நலங்காத் தொழில் ( WhiteCollor Job ) நாட்டம் குறைய வேண்டும். மூளைசாலிகள் வெளியேற்றம் இடம்பெயர்வு தவிர்க்கப்படல் வேண்டும். இந்தமண் சொந்த மண் என்ற உணர்வோடு எமது பிரதேசத்தின் முன்னேற்றத்திற்காக விருப்பத்துடன் உழைக்க வேண்டும். கல்விமுறையில் மேலும் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். பிரதேசவளங்களைக் கொண்டு உற்பத்தி செய்யக்கூடிய தொழில் நுட்ப அறிவு வழங்குவதுடன் பயிற்சிச்சாலைகள், தொழிலகங்கள் ஆரம்பிக்கப்படல் வேண்டும். சுயமுயற்சியில் ஈடுபடக்கூடிய ஆற்றல் தரும் கல்வி விஸ்தரிக்கப்பட வேண்டும் சுதேசிய பொருட்களின் உபயோகம் உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்கும்.

கல்வி என்னும் கலையை பயன்படுத்தி பொருளாதாரம் எனும் அத்திவாரத்தில் சமூகம் என்ற கட்டிடத்தை எழுப்ப வேண்டும். பரந்த கல்வி சமூக முன்னேற்றத்திற்குரிய இடர்களை யும் தகர்த்தெறியும் சாதி சமய வேறுபாடுகள் ஒழிக்கப்படல் வேண்டும். இன்றைய சூழலில் பொருளாதாரப் பிரச்சனைகளைப் பற்றிச் சிந்தித்தால் மட்டும் போதாது. சிறுபான்மை யினரின் பிரதேசங்களில் பெரும்பான்மையி னரின் அடக்குமுறை ஆட்சி நடக்கும் பொழுது பொருளாதார சுரண்டல் மட்டும் இடம் பெறுவதில்லை. மக்களின் சமூக கலாச்சார வாழ்வையும் நசுக்க முற்பட்டுள்ளமை வரலாறு கூறும் உண்மையாகும். ஒரு உறுதியான உள்நாட்டு கலாச்சார வாழ்வு இருக்கும் இடத் தில் அடக்குமுறை ஆட்சி நிலைக்கமுடியாது. ஏனெனில் மக்களின் உணர்வு கலாச்சார வடிவான எதிர்ப்பாகத் திகழ்கின்றது. இந்தக் கலாச்சார எதிர்ப்பு அரசியல் விழிப்பாகவும் பொருளாதாரத்தடையை தகர்க்கக்கூடிய விடுதலைக்கு வழிவகுக்கும். ஓர் இனத்தை அழிக்க வெண்டுமாயின் அதன் பாரம்பரியம் பண்பாடுகளின் அத்திவாரத்தில் எழுந்த கலாச்சாரத்தை திட்டமிட்டு அழிப்பதன் மூலம் அதனை சுலபமாக நிர்மூலமாக்கி விடலாம். என்பது ஓர் அறிஞர் கூற்று. எனவே எதிர்கால சரித்திரத்தையே நிர்ணயிக்கும் சக்தி யாக விளங்கும் கலாச்சாரத்தை நாம் பாது காக்க வேண்டும். வேகமாக மாறிவரும் சகாப் தம் ஒன்றில் நாம் வளர்ந்து வருகிறோம். எமது இன்றைய அதிமுக்கியமான தேவையா னது அபிவிருத்தி ஆகும். மனிதனுக்கு மனிதன் பேதமற்ற முறையில் வாழ்ந்து வரவும் ஒவ் வொரு மனிதனும் சாதாரண இயற்கை வாழ்வு வாழக்கூடிய வசதிகளை பெற்றுக் கொடுக்கவும் கூட்டுறவு நிறுவனங்களும் அரச சார்பற்ற சமூக நிறுவனங்களும் ஆர்வத்துடன் தமது பங்களிப்பை வழங்க வேண்டும். இன்று எத்தகைய உணர்ச்சி எம் எல்லோரையும் ஒன்று படுத்துவதற்கு உற்சாகம் அளிக்கின்றது என்பதை நாம் அறிந்து செயற்பட வேண்டும்.

தமிழ் மக்கள் ஊக்கம் உடையவர்கள். நாட்டின் வளமே நம் வளமாகக் கொண்டு வாழ்பவர்கள். எனவே மூளைசாலிகள். வெளி யேற்றம் தவிர்க்கப்படல் வேண்டும். எமது நாட்டில் பூத்து வேறு நாட்டில் காய்ப்பதா ? இந்த மண் சொந்த மண் என்ற உணர்வோடும் தாயகத்தின் சுபீட்சத்திற்காகவும் பெருமைக் காகவும் உழைக்க வேண்டும். கூட்டுறவின் மகிமையை உணர்ந்து உழைத்தால் பொரு ளாதாரம் வளரும், தமிழ் வளரும், இன்பம் நல்கும், சமூகம் வளரும், தமிழரின் தாகம் தீரும்.

பிரேம்றாஜ்,
யாழ். பல்கலைக்கழகம்,
விஞ்ஞானபீட மாணவன்.

பத்த
சிக்க

உ

ஸ்ரா

பத்தாவது ஆண்டைப் பூர்த்தி செய்யும்
சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்க
சமாசமே
உம்மை வாழ்த்துவதில்
சகோதர அமைப்பாகிய நாம்
பூரிப்படைகின்றோம்



ஏமது அமைப்பின் தொழிற்பாடுகள்

- ☐ சேமிப்பு
- ☐ நிலையான வைப்பு
- ☐ கடன் திட்டங்கள்
- ☐ சிறுநில விவசாய அபிவிருத்தி
- ☐ கல்வி விஸ்தரிப்பு நடவடிக்கை
- ☐ கலை கலாச்சார அபிவிருத்தி பணி
- ☐ சமூக நல சேவைகள்

உலர்வலய அபிவிருத்தி மன்றம்

257/2, இரண்டாம் மாடி,

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு
கூட்டுறவுச் சங்கங்களின் சமாச
10 ஆண்டுகால சேவையின்
சிறப்பைச் கண்டு யாழ்ப்பாண மாவட்டக்
கூட்டுறவு சபை பெருமிதம் அடைகின்றது.
சமாசம் மேலும் வளர்ச்சியடைந்து
கூட்டுறவு வங்கியாக மிளிர சபை தனது
உளம் கனிந்த வாழ்த்துக்களை
தெரிவித்துக்கொள்கிறது.

யாழ் மரவட்ட கூட்டுறவாளர்களால் நடாத்தப்படும் மாவட்டக் கூட்டுறவுச் சபை அச்சகத்திற்கு கூட்டுறவாளர்களும் பொதுமக்களும், நிறுவனங்களும் தொடர்ந்து வழங்கும் அன்பும், ஆதரவும் அச்சகத்தை மேலும் நவீனமயப்படுத்தி சேவையை விஸ்தரிக்க எம்மை ஊக்குவித்துள்ளது என்பதை நன்றியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

# சிறப்பான அச்சகத்தில்

## எமது அச்சக வேலைகளைச் செய்தோம் என பெருமிதம் அடைய

- சிறந்த தரத்தில்
- குறைந்த கட்டணத்தில்
- குறித்த தவணையில்
- துரிதமாகவும் அழகாகவும்

சகலவிதமான அச்சக வேலைகளும் செய்துகொள்ள

## நாடுங்கள்

# யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபை அச்சகம்

40/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

யாழ் மா. கூ. சபை அச்சகம் 40/1, நாவலர் ரோட், (ஐந்து சந்தி அருகாமை) யாழ்ப்பாணம்.